www.tamilarangam.net


S. Manoharan
210, Ave du 8 Mai 1945,
93150 Le Blanc Mesnil, France.

# கணையாழி

விலை ரூ.10 • ஜூன் 1995

தமிழ்ச் சிந்தனை மரபு – இ.பா

ஆதிமூலத்துடன் ஒரு சந்திப்பு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கடந்த முப்பது ஆண்டுகளில் 360 இதழ்களில் சிறுகதைகள், கட்டுரைகள், கவிதைகள், நாவல்கள், குறுநாவல்கள், பேட்டிகள், என்று ஆயிரத்திற்கும் மேற்பட்ட தரமான படைப்புகள் வெளியாகி இருக்கின்றன. அவற்றில் மிகச்சிறந்தவற்றைத் தேர்ந்தெடுத்து ஒரே தொகுப்பில் அடக்கமுடியாது. எனவே ஆகஸ்ட்1995-டிசம்பர்1995க்குள் அடுத்தடுத்து மூன்று தொகுப்புகள் (பத்து ஆண்டுப் படைப்புகளுக்கு ஒரு தொகுப்பு வீதம்) வெளியிடத் திட்டமிட்டிருக்கிறோம். இந்த மூன்று தொகுப்புகளின் விலை

தபால் செலவு உட்பட-ரூ-100.00

தனித் தொகுப்பின் விலை-ரூ-39.00

முன்பணம் அனுப்புபவர்களுக்கும்

சந்தாதார்களுக்கும் ரூபாய்-30.00

பதிவுத் தபாலில் அனுப்ப கூடுதலாக 5ரூபாய் அனுப்பவும்.

காசோலை/டிராப்ட்/மணியார்டரை

**கணையாழி டிரஸ்ட்**

என்ற பெயரில் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பவும்.

கணையாழி
245, டி.டி.கே.சாலை,
ஆழ்வார் பேட்டை,
சென்னை-600 018.
தொலைபேசி-4990016.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கணையாழி

## கௌரவ ஆசிரியர்

## இந்திரா பார்த்தசாரதி

கணையாழி முதல் இதழ் ஜுலை 1965 என்ற தேதியிட்டு ஆகஸ்டில் வெளிவந்தது. இந்தக் கணக்கில் இந்த ஜுன் இதழோடு கணையாழிக்கு 30ஆண்டுகள் நிறைவுபெறுகிறது. 31வது ஆண்டுமலரை ஜுலை இறுதியில் அதிகப்பக்கங்களுடன் விமரிசையாகக் கொண்டுவர வேண்டுமென்பது எங்கள் திட்டம். ஜுலை, ஆகஸ்ட்இரண்டு இதழ்களும் இணைந்து ஆண்டு மலராக ஆகஸ்ட் முதல் தேதியன்று வாசகர்களுக்குக்கிடைக்கும். எனவே அடுத்த இதழ் ஆண்டுமலர் தான். ஜுலை மாதம் கணையாழி இல்லை.

விலை ரூபாய் –20/

Published by:
USHADEVI MATHIVANAN
On behalf of
Kanaiyazhi Trust.
245, T.T.K. Road
Alwarpet, Madras-18.
Printed at:
Rockfort Press,
Guindy, Madras-32.
Managing Editor :
K. KASTURI RANGAN

இந்த இதழில்...

தமிழ்ச் சிந்தனை மரபு
இந்திரா பார்த்தசாரதி 6

ஆதிமூலத்துடன் ஒரு சந்திப்பு
யூமா.வாஸுகி. 9

இலக்கிய விருதுகள்
என்.எஸ்.ஜகந்நாதன். 19

வாழ்க்கை வெள்ளம்
அமரர் க.சந்தானம். 24

சிறுகதை
யூமா.வாஸுகி 28

குறுநாவல்
கண்ணன் மகேஷ் 33

புதிய வேதாளக் க(வி)தைகள்
முஸ்தபா. 47

உள்ளது உள்ளபடி... 53

சிறுகதை
டாக்டர்.என்.கண்ணன் 73

கவிதைப் பக்கங்கள். 82

கணையாழியின் பரிணாம வளர்ச்சி
வே.சபாநாயகம். 90

சிறுகதை
ஸர்ஸிஜன் 92

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கடிதங்கள்




வைதீஸ்வரனின் நகரச் சுவர்கள் கவிதைத் தொகுப்பை இந்திரன் சிறப்பாக விமர்சனம் செய்திருக் கிறார்.

அடுத்தாற்போல என்.எஸ்.ஜெ. கார்ட்டூனிஸ்ட் பாரதி புத்தகத் தைப் புகழ்ந்து தள்ளிவிட்டார். அமர கவியின் கார்ட்டூன் பங்களிப்பு அதிகம் வெளிச்சத்திற்கு வர வில்லை என்பது உண்மைதான். அவைகளைத் தேடிக் கண்டு பிடித்து புத்தகவடிவில் வழங்குவது மிகவும் சிரமமான வேலையும் கூட.

வே.இறையன்புவின் சமீப கால புதுக்கவிதைகள் வாசிக்கும் தரத் திலும் புரிந்து கொள்ளத் தக்கதா கவும் உள்ளன. இண்டியா டுடே இலக்கிய மலர் கவிதை வாசித்த கையோடு கணையாழியின் விரிசல் கவிதையையும் படித்தேன். பாராட்டப்படவேண்டியவர் அவர்.

தி.ஜா நினைவுக் குறுநாவல் திட்டத்தை நிறுத்திவிட உத்தேசமா?

சிறுகதைகள் இந்த இதழில் அதிகம் இடம் பெற்றுள்ளது மகிழ்ச்சி தரும் அம்சம். ஷண்முக சுப்பய்யா பற்றிய கலந்துரையாடல் கட்டுரை வடிவில் இருந்தால் இன்னமும் சிறப்பாக, கவனத்தைக் கவர்ந்திருக்கக் கூடும் என நினைக்கிறேன்.

**ஜனகன்,**
**சென்னை**

---

முப்பதாண்டு நிறைவை ஒட்டி கணையாழி தொகுப்பு (320 பக்கங்கள்) ஒன்றினை வெளியிட உள்ளமை மிக்க மகிழ்ச்சியைத் தந்தது. பழைய கணையாழியைப் படிக்கும் வாய்ப்பு பெற முடியாமற் போன என் போன்ற எண்ணற் றோர்க்கு இது ஒரு வரப்பிரசாதம். தொகுப்பின் விலையை 39லிருந்து 69 வேண்டுமானாலும் ஆக்கிக் கொள் ளுங்கள். முழுமையான தொகுப்பை எங்களுக்குத் தாருங்கள். இப்படி யொரு தொகுப்பிற்கான எண் ணத்தை முதலில் தெரிவித்த மூலகர்த்தா யாராக இருந்தாலும் என் நன்றி என்றென்றும்.

அழகிய சிங்கரின், '406 சதுர அடிகள்' குறுநாவல், மேலுமில்லா மல், கீழுமில்லாமல் நடுவாந்திரமாக மாட்டிக் கொண்டு முழிக்கும் பெருவாரி வர்க்கத்தின் அபிலாஷை களில் எதை எதை, எப்படி பூர்த்தி செய்ய முடியும்? எவை எவை அப்படியே சாகும் வரை வெறும் கனவாகப் போகும் என்ற அச்சத்துடனும் அல்லலபட்டுக் கொண்டே காலத்தைக்கழிக்கும் 'மிஸ்டர் மிடில் கிளாஸை' நன்றாகப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

படம் பிடித்துக் காட்டியிருந்தது. சிவகுருவின் மனவோட்டங்களாகச் சித்தரித்திருந்தது எதுவும் மிகை இல்லை. கூடப் பொறந்த பொறப்பு களும் நண்பர்களும் எம்மாதிரியான நிலைப்பாடுடன் ஒருவனின் வாழ்வில் இடம் பெற முடியும் என்பதையும், தன் மனைவியின் டபுள் பெட் ப்ளாட் விருப்பத்தை நிறைவேற்றக்கூடிய சாத்தியக் கூறுகளுக்கு விலையாகத் தர வேண்டியவை பற்றிய சிவகுருவின் மதிப்பீடுகளும், சமூகத்தின் வேர்கள் எந்த அளவிற்கு ஆடிப்போயிருக் கின்றன என்பதைச் சுட்டிக் காட்டும் சித்திரங்களாகும்.

சிற்சில இடங்களில் ஏதோ ஒரு அரசாங்க அறிக்கையின் சில வரிகளைப் படிப்பது போன்ற எண்ணத்தைக் குறுநாவலின் நடை தருவதை அழகிய சிங்கர் கவனமுடன் தவிர்த்திருக்கலாம்.

**பொற் கண்ணன்.**
**சென்னை**

---

ஷண்முக சுப்பய்யா அவர்கள் மறைந்து விட்டார்களா? முகம் தெரியாத என்னைக் கூட நண்பர் என்று அழைத்து (கணையாழி மூலம்) மனம் திறந்து கடிதம் எழுதி, தன் கவிதைப் புத்தகம் ஒன்றை அனுப்பி வைத்திருந்தார். அவர் எழுதியதின் ஒரு பகுதி.

**நான் படிம விரோதி ஒன்று மல்ல. ஆனால் கவிதைக்காகப் படிமம் என்றில்லாமல், படிமத்திற்காகப் படிமம் என்று வந்தால் என்னால் எதிர்க்குரல் கொடுக்காமல் இருக்க முடியவில்லை. கவிதையில் படிமம் என்று ஒரு புத்தகம் வந்திருக்கிறது. வாங்கிப்படிக்கலாமென்றிருக்கிறேன்.**

எவ்வளவு ஆதங்கம் அவருக்கு இருந்திருக்கும் என்றறிந்தேன். எழுபது வயதில் கூட படிமம் பற்றி அறிய விழைந்திருக்கிறார்.

நகுலனும் நீல.பத்மனாபனும் உரையாடிய விதம் அவரைச் சந்திக்காமல் இருந்த என் அறிவீனத்தைச் சுட்டிக் காட்டியது. அவர் ஏன் வெற்றி பெறவில்லை? விளம்பரப்படுத்தப்படாததினாலா? அதிகம் எழுதாததினாலா? தமிழ் உலகமே விசித்திரமாகத் தோன்று கிறது.

'406 சதுர அடிகள்' குறுநாவல் என்று சொல்ல முடியாது. ஒரே மூச்சில் படித்து முடிக்கப்பட்ட சிறுகதை. ஆனால் நல்ல சிறுகதை.

இந்திரா பார்த்த சாரதியின், 'ரகு என்ன செய்து விட்டான்?' சிறப்பான சிறுகதை. வயதானவரால் டீன் ஏஜ் நட்பு.காதல் பற்றி எப்படி அவ்வளவு யதார்த்தமாக எழுத முடிகிறது.

**வேல்ச்சாமி.**
**முண்டியம்பாக்கம்.**

---

மே இதழில் நூல் விமர்சனங் களே என்னைக் கவர்ந்தன. முதலில் எஸ்.வைதீஸ்வரனின் முழுக் கவிதைத் தொகுப்பான 'நகரச்சுவர்கள்' பற்றிய இந்திரனின் சிறப்பான விமர்சனம். வைதீஸ்வர னின் கவிதைகளை அதிகமாகப் படித்திராத என் போன்றோருக்கு அவரின் ஆரம்பக் கவிதையிலிருந்து



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இன்று வரை அவர் எழுதியுள்ள கவிதையின் வளர்ச்சியினை, சிறந்த கவிதை உதாரணங்களுடன் எடுத்துக் காட்டியிருக்கிறார்.

அடுத்து என்.எஸ்.ஜெகந்நாதனின் பாரதி பற்றிய, 'இதழாளர் பாரதி', என்ற நூலையும், 'பாரதியின் கருத்துப்படங்கள்' என்ற நூலையும் பற்றிய அருமையான சுவையான புதிய கேள்விப்படாத செய்திகளைத் தெரிவிக்கிற விமர்சனம். பாரதிக்கும் கேலிச்சித்திரத்திற்கும் உள்ள தொடர்பையும், இதழாளராக இருந்த பாரதி நடத்திய பத்திரிகைப் பணி பற்றியும் விவரமாக அளித்துள்ள விமர்சனம். பாராட்டுக்குரிய, நூல்களை வாங்கத் தூண்டும் விமர்சனம்,

அடுத்து வாஸந்தியின், 'குற்றவாளிகள்' நாவலைப் பற்றிய யோகநாதன்னின் குறிப்பிடத்தக்க விமர்சனம்.

இக்கால நாவல்களைப் பற்றிய பொதுவான அவரது விமர்சனமும், 'குற்றவாளி' நாவலைப்பற்றிய சிறப்பான அவரது விமர்சனமும் நம் ஆவலைத் தூண்டுகின்றன. பாத்திரப்படைப்பும், பெண்ணியக் கருத்துக்களின் துணிச்சலான வெளிப்பாட்டையும், நவீன இலக்கியத்திற்கு சிறந்த எடுத்துக் காட்டாக உள்ளதையும் மிகத் தெளிவாக அருமையாக சித்தரித்துள்ள விமர்சனம்.

அடுத்து தி.ஜா. நினைவுக் குறுநாவல் '406 சதுர அடிகள்'. அழகிய சிங்கர் எழுதியுள்ள இக் குறுநாவலைப் படித்து முடித்ததும் சுமாரான சிறுகதையைப் படித்த திருப்தியே அளிக்கிறது. குடியிருக்க ஒரு ப்ளாட் வாங்க ரவி, சிவகுரு என்ற இரு இளைஞர்கள் அலைந்து, ரவி வெற்றிகரமாகவும் சிவகுரு சில தோல்விகளுடனும் ப்ளாட் வாங்கி முடிப்பது தான் கதை.

ப்ளாட் கட்டும்போதே அடிக்கடிச் சென்று பார்த்த சிவகுரு அதற்குள்ள ப்ளானைச் சரியாகப் பார்க்காமல் விட்டுவிட்டார் என்று எழுதியிருப்பது பொருத்தமாக இல்லை.

பாத்ரூம், லெட்ரின் சரியாக அமையவில்லை என்ற சிறிய குறையை, குறுநாவலின் மையக் கருத்தாக்க முயற்சித்துள்ள அழகிய சிங்கரின் இம்முயற்சியில், நடையோ கதை அம்சமோ எந்தச்சிறப்பும் இருப்பதாகத் தெரியவில்லை. பாத்ரூம், லெட்ரினை அதிகச் செலவில்லாமல் சரி செய்து விடலாம். தமிழ்த்திரைப்படம் மாதிரி கதை முடிவில் தலைப்பைச் சொல்கிறார்.

இந்த இதழில் மூன்று சிறுகதைகள்..

கருணாஹர மூர்த்தியின் 'சொர்ண வரம்'. இலங்கைச் சூழ்நிலையில், இயற்கை வர்ணனைகளுடன், ஒரு குறு நாவல் மாதிரி விரிந்து செல்கிறது. யாழ்ப்பாணத்துக்குரிய சில வார்த்தைகள் நமக்குப் பழக்கப்படாவிட்டாலும் கதையோட்டத்தைத் தடுக்கவில்லை. கஷ்டப்படும் குடும்பத்தையும் பாத்திரங்களையும் ஆசிரியர் மிகவும் சௌகர்யமாக சிறப்பாக எழுதியுள்ளார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

க்ருஷாங்கினியின் 'கண்கள்' விவேகானந்தரின் திரைப்படம் பார்த்த பாதிப்பில் அவர் கண்களைத்தேடிக் காதலிக்கிற ஒரு பெண்ணின் கதை. சுருக்கமாகவும், கூர்மையாகவும், கச்சிதமாகவும் வந்திருக்கிற கதை.

அடுத்தது 'ரகு என்ன செய்து விட்டான்?' என்ற கதை.

தலைப்பில் ஜெயகாந்தனின் 'கோகிலா என்னசெய்து விட்டாள்?' என்ற குறுநாவல் தலைப்பை ஞாபகப்படுத்துகிறது. ஆனால் கதை புது மலர் சிறுகதையைப் படித்த மாதிரி உள்ளது. டீன் ஏஜ் பருவத்தினரான ரகு, ரமா, இருவரது மன நிலை, சந்தர்ப்ப சூழ்நிலைக்கேற்ற அவர்களது நடவடிக்கைகள், மனதில் எழுகின்ற சந்தேக, பய உணர்ச்சிகள் ஆகியவற்றை இயல்பாக அருமையாகச் சித்தரித்துள்ளார். இருந்தாலும் இந்திரா பார்த்தசாரதி சிறுகதை என்று அட்டையில் பார்த்துவிட்டு ஆவலுடன்- உள்ளே எதிர்பார்ப்புடன்- படிக்கிறவர்களைச் சற்றே ஏமாற்றியுள்ளார். இந்தச் சின்னக் கதையை எழுத இந்திரா பார்த்தசாரதி தேவையா?

நகுலன், நீல.பத்மனாபனின் கலந்துரையாடல் மூலம் ஷண்முக சுப்பய்யாவின் கவிதைகள் சிறப்பை அறிந்து கொள்ளமுடிந்தது. நல்ல கவிதைகள் பிரபலமடைய குழுக்களோ, சிறுபத்திரிகை ஆசிரியர்களின் தொடர்போ அவசியம் என்ற நீல. பத்மனாபனின் கருத்தை ஏற்க முடியவில்லை.

ஷண்முக சுப்பய்யாவின் 'உலகம்' கவிதை என்னை மிகவும் கவர்ந்தது.

**இரா். கதைப்பித்தன்**
**மதுரை.**

---

எனது' தூரிகைகளை' சமூகம் வைத்திருக்கிறது...

கலை அரசியல் சாராததாகத் தான் இருக்க வேண்டும்...

தரம் தெரிந்த சரியான பாராட்டு கலைஞனை மேலும் செழுமைப் படுத்தும். ..

அவன் பாணி மாறுகிறது என்றால் ரஸனைப் பூர்வமாக அவன் உயர்கிறான் என்று அர்த்தம்.

ஓவியர் மனோகரனின் பாராட்டப் படவேண்டிய கருத்துக்களைப் பதிவு செய்தமைக்கு நன்றி. அவருடைய இரண்டு 'வீடு' சித்திரங் களும் அட்டையை அலங்கரிக்கத் தக்கவை.

ப்ரபஞ்ச ஞானம் முற்றாது பிஞ்சுகளாக அப்போது இருந்த மாதிரியே கோணல்கள் தெரியாமல் இருந்திட முடியாதா என ஏங்க வைக்கிறது நா.விஸ்வநாதனின் கவிதை.

பாரதியாரையும், இரும்பு மனிதர் படேலையும் Ifs of history என்று ஏக்கத்துடன் இன்று எண்ணத் தூண்டுகின்றது என்னைக் கேட்டால்.

வாழ்க்கை வெள்ளம் பகுதிகள் மூன்று சிறுகதைகளும் நன்று.

**கல்யாண ராமன்**
**சென்னை.**

---



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தமிழில் சிந்தனை மரபு உண்டா?

இந்தியாவில்– குறிப்பாகத் தமிழ் நாட்டில்– அறிவு சார்ந்த ஒரு மரபு (Intellectual Tradition) சமூகக் கலாச்சாரத் துறையைப் பொறுத்த வரையில் கிடையாது என்பது சில மேனாட்டு அறிஞர்களுடைய கருத்து.

தத்துவார்த்தத் துறையில் இம்மரபு நிச்சயமாக இருந்திருக்கிறது. சார்வாகம், பௌத்தம், சமணம், அத்வைதம், விசிஷ்டாத்வைதம், த்வைதம், போன்ற கோட்பாடுகளை, சமயப் பார்வையை விலக்கிவிட்டுப் பார்த்தால், அவை, காண்ட் (Kant), தெகார்த்தே, இருத்தலியல்வாதிகள் ஆகியவர்களுக்கிடையே இருந்த கொள்கைப் போராட்டங்கள் போல்தான் அறிஞர்களுக்குப் புலப்படும். ஆனால், சமூகக் கலாச்சாரத் துறையில் அறிவு சார் மரபு இருந்ததா என்பது சந்தேகம் தான்.

இலக்கியம் என்பது சமூகத்தின் கண்ணாடி. சங்க காலத்தில் பெரும்பான்மையான புலவர்கள் அரசர்களைப் பாடித்தான் வாழ்ந்தார்கள். அவ்வரசர்கள், பகை மன்னர்களைத் தாக்கி ஊர்களைத் தீக்கிரையாக்கியதைப் போற்றிப் பாடினார்கள். ஓர் அரசன் சார்பில் இன்னொரு மன்னனை இகழ்ந்திருக்கிறார்கள். அரசன் தவறு செய்தால் அதை இடித்துக் கூறும் பாடல்கள் மிகக் குறைவாகத்தான் இருந்திருக்கின்றன. 'செவியற்றறிவுறூ' என்ற துறையின் பொருள், அரசன் தவறு செய்தால் அதை அவன் செவி கைப்ப எடுத்துக் கூறுவதாகும். இத்தகைய பாடல்கள் சங்கப் புறப் பாட்டில் மிக மிக அருமை. 'உன் வெண் கொற்றக் குடை, உன் மீது சூரிய ஒளி படக் கூடாது' என்பதற்காக இல்லை. குடிமக்களுக்கு நிழலைத் தருவதற்காக– நல்லாட்சியைக் கொடுப்பதற்காக' என்று முடிநாகராயர் –ஒரு புலவர் – பாடியிருக்கிறார். இந்த மாதிரிப் பாடல்கள் மிகவும் குறைவு.

திருக்குறளில் வள்ளுவர் கொடுங்கோன்மையைக் கண்டிக்கிறார் என்பது உண்மைதான். ஆனால் அவர் காலத்திய ஆட்சி முறையைப் பற்றிய கருத்துப் பிரதிபலிப்பு இந்நூலில் எதுவுமில்லை. ஆனால், அறிவு சார் மரபு உருவாவதற்கு ஆழமாக வித்திட்டிருக்கிறார் வள்ளுவர் என்று உறுதியாகக் கூற முடியும். இது தொடரவில்லை என்பதுதான் குறை.

பக்தி இலக்கியம், வேத நெறியில் கண்ட குறைபாடுகளைத் தவிர்ப்பதற்கான ஓர் எதிர்ப்பு முகாமை உருவாக்கியது என்பது உண்மையாக இருந்தாலும், அது இதய மொழியில் பேசியதே அன்றி அறிவு மொழி வாதத்தை அடிநாதமாகக் கொள்ளவில்லை.

www.tamilarangam.net

சிலப்பதிகாரத்தில், அரசன் தவறு செய்தால், அவனைத் தண்டிப்பது அறக் கடவுள் தான். மக்கள் சக்தியைப் பற்றி ஏதும் குறிப்பில்லை.

பாரதி யுகம் வரை, தமிழ்க் கவிஞர்களுக்கு, இராமன் ஆண்டால் என்ன இராவணன் ஆண்டால் என்ன என்ற மனப்பான்மைதான் இருந்து வந்திருக்கிறது. அறிவு சார் இயக்கத்துக்கும், மரபுக்கும் தேவையான அரசியல் பிரக்ஞை அறவேயில்லை. அரசனிடம் தெய்வத்தைக் காணும் 'பூவை நிலை' மரபு. 'திருவுடை மன்னரைக் காணில் திருமாலைக் கண்டேனே...'

ஆகவே, பதவிக்கு வந்தால் இறுகிப்போகும் ஸ்தாபன(Establishment) அதிகார ஆணவங்களைச் சுட்டிக் காட்டுவதற்கான கொள்கை தர்மம், தமிழ்ச்சிந்தனை மரபிலே பாரதி வரை இருந்ததாகவே தெரியவில்லை.

இலக்கிய கர்த்தாக்களுக்கு அரசியல் பிரக்ஞை எதற்காக வேண்டுமென்ற கேள்வி எழலாம். இலக்கியம் என்பது சமூக அக்கறை என்றால், அரசியல் பிரக்ஞை அற்ற நிலையில் இலக்கியம் படைப்பதாகக் கூறிக் கொள்கின்றவர்கள், 'முலை இல்லாதவள் காமம் செய்வது போல் தான்' (வள்ளுவர் என்னை மன்னிப்பாராக!)

ஷேக்ஸ்பியர் எதற்காகச் சரித்திர நாடகங்கள் எழுத வேண்டும்?

மில்ட்டன் எதற்காக பத்திரிகைச் சுதந்திரம் பற்றி, அன்றும், இன்றும், என்றும், பொருந்துவதாக ஓர் அருமையான இலக்கியக் கருவூலமாகிய கொள்கைப் பிரகடனத்தைப் பிரசுரிக்க வேண்டும்? மேனாட்டில், ப்ளேட்டோ காலத்திலிருந்தே அரசியல் பற்றிய ஒரு தெளிவான கண்ணோட்டம் இருந்து வந்திருக்கிறது.

தமிழில் திருவள்ளுவர் மட்டுந்தான் –சிந்தனை மரபைப்பொருத்த வரையில்– ஏதேச்சையாக நிகழ்ந்து விட்ட ஓர் அற்புதம்.

இதன் காரணமாகத்தான்– இந்தச் சிந்தனை மரபு இல்லை என்ற காரணத்தினால் தான்– ஆள்கின்றவர்கள் மனமுவந்து கொடுக்கும் 'பரிசில்'களை எந்தவித மனத்தடையுமின்றி ஏற்பது கலைஞர் தர்மமாக இன்றும் போற்றப்படுகின்றது. இதைப் புறக்கணித்தால், சிந்தனை மரபற்ற சமுதாயத்தில் தங்களை அறிவு ஜீவிகளாக அடையாளம் காட்டிக் கொள்கின்றவர்களுக்குக் கூட இது புரிவதில்லை.

–இ.பா.

ஆகஸ்ட் மாதக் கணையாழி (1995–ஆண்டு மலர்) நாடகச் சிறப்பிதழாக மலர இருக்கிறது. வாசகர்களிடமிருந்தும், படைப்பாளிகளிடமிருந்தும் நாடகக் கலை சம்மந்தமான தரமான படைப்புகள் வரவேற்கப்படுகின்றன.

www.tamilarangam.net

## சிறு அறிமுகம்.

# ஓவிய இயக்கங்கள்

*ஆர்பிஸம்* – 1912ல் உருவான பிரஞ்சு அருப ஓவியம். 'ஓவியனாலேயே முழுதாக உருவாக்கப்பட்ட பொருட்களைக் கொண்டு புதிய வடிவங்களைத் தீட்டும் கலை' எனக் கூறப்பட்டது. Delaunay என்பவர் முன்னோடி.

*அருப ஓவியம்* – இயற்கையான வடிவத்திற்கு மாறாக, ஜியோமெட்ரிக் வடிவத்தில், கருத்தையே பிரதிநிதித்துவப்படுத்தும் போக்கு. 1900களின் துவக்கத்தில் Kandinsky என்பவரால் கொண்டுவரப்பட்டு Miro மற்றும் Dekooning ஆகியோரால் பின்பற்றப்பட்டது.

*க்யூபிஸம்* – 1907ல் Picasso மற்றும் Braque ஆகியோரால் நவீன ப்ரஞ்சு ஓவியங்களில் கொண்டுவரப்பட்ட இயக்கம். பொருளின் உருவை, கன சதுரம், தோளம், உருளை, கூம்பு போன்ற அடிப்படை வடிவங்களுக்குக் கொண்டு வந்து காட்டுவது.

*எக்ஸ்ப்ரஷனிஸம்* – யதார்த்தத்தையும் கொள்கை வாதத்தையும் தவிர்ப்பதும், அவற்றைத் திரிக்கவும் செய்து, ஓவியனின் உள்ளுணர்வுகளையும் அனுபவங்களையும் வெளிப்படுத்துவதை குறிக்கோளாகக் கொண்டது. 1800களின் இறுதியில் Begarm, தமது பல்வேறு காலங்களில் Vangogh, Gauguin, Mattisse, Picasso, Rouault போன்றோரும் எடுத்தாண்டனர்.

*இம்பிரஸனிஸம்* – 1800களின் மத்தியில் பிரஞ்சு ஓவிர்களிடையே உருவான இயக்கம். இது ஒளியையும் அதன் தாக்கத்தையும் கருத்தில் கொண்டது. இயற்கையின் உடனடித் தாக்கத்தை வடித்துக் காட்டுவதாக இருந்தது. Monet, Renoir, Pissaro, Sisley, Cezanne, Degan, ஆகியோர் முன்னணி கலைஞர்கள்.

*ப்யூச்சரிஸம்* – 1905–15ல் உருவான இத்தாலிய இயக்கம். வன்முறை, இயந்திரங்கள், அரசியல் ஆகியவற்றை வலியுறுத்துவதாகவும் பண்பாடு காதல் ஆகியவற்றுக்கு எதிராகவும் செயல்பட்டது. க்யூபிஸ வடிவங்களையும் தீவிர வண்ணங்களையும் பயன்படுத்தியது.

*நேச்சுரலிஸம்* – புகைப்படத்தனமான விவரிப்புகளை உள்ளடக்கியது. சற்றே சுவாரஸ்யமற்றது.


*ரியாலிஸம்* – 1800களில் பிரான்ஸில் Courbet என்பவரால் துவங்கப்பட்டது. அன்றாட வாழ்வின் தாக்கங்களை அப்படியே பிரதிபலிப்பது.

அமலன் ஸ்டான்லி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஆதி மூலத்துடன் ஒரு சந்திப்பு



இந்த உரையாடலுக்கு முன்பாக ஒரு முறையேனும் ஆதிமூலத்தை நேரில் கண்டதில்லை. அவ்வப் போது காட்சி அரங்குகளிலும், பத்திரிகைகளிலும் காணக் கிடைத்த அவரது கேன்வாஸ் பெயிண்டிங் களோடு, கறுப்பு வெள்ளைச் சித்திரங்களோடு, நான் ஓவியக் கல்லூரி மாணவனாக இருந்த காலத்திலேயே மிகவும் ஈர்ப்பான பந்தம் தோன்றியிருந்தது.

கலையும் வாழ்வும் ஒன்று கலந்த இரண்டிற்கும் இடைவெளி அற்ற நேர்மை, எளிமையாகப் பதிந்திருக் கிறது, அவரிடம். விருதுகளும் அங்கீகாரமும் பாராட்டுகளும் ஆதியின் அசாத்தியமான எளிமையை சலனப்படுத்தி விடவில்லை. என் வயதொத்த நண்பனுடன் சாதாரணமாகப் பேசுவது போலிருந்தது.

இன்றளவும் ஆதி, துடிப்புடனும், ஆழ்ந்த விருப்பத்துடனும் அவரது பணியைச் செய்வதை உணர முடிகிறது. அவரது ஸ்டுடியோவில், இருக்கும் ஏராளமான ஓவியங்களா லும், கறுப்பு வெள்ளைக்கோட்டுச் சித்திரங்களாலும்.

இழப்புகளின் ரணங்களிலி ருந்தும், பற்கடிப்பான சூழலிருந்தும் துயரங்களிலிருந்தும் ஒளிய இடம் தேடும் வாழ்வின் பதுங்கு குழிகளுக் குள்ளாக, அரிதாக நுழைந்து ஆசுவாசமளிக்கும் சிலீரென்ற காற்றைப் போல ஆதி ஓவியத்தோடு வருகிறார்...



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

திருச்சி மாவட்டம் துறையூருக்குப் பக்கத்தில், கீரனூர் எனும் கிராமத்தில், ஒரு விவசாயக் குடும்பத்தில் ஆதிமூலம் பிறந்தது 1935ல். பால்யத்தில் இவருக்கு ஓவியங் குறித்த தூண்டுதலேற்படுத்திய இரண்டு விஷயங்களை முக்கிய மாகக் குறிப்பிடுகிறார்.

இவரது வீட்டுக்கருகில் மாரியம்மன் கோவிலுக்கு உத்சவ வாகனங்கள் செய்பவர் ஒருவர். மாரியம்மன் கோவிலில் தான் பெரிய மரத்துண்டுகளையிம் பலகை களையும் அறுத்தும், சேர்த்தும் சிம்மம் முதலான வாகனங்களைச் செய்து கொண்டிருப்பார்.

ஒரு தடவை பல வடிவங்களில் மரத்தைச் செதுக்கி, இழைப்பதிலி ருந்த அவரை, ஆதி பக்கத்திலிருந்து கவனித்துக் கொண்டிருந்திருக் கிறர், அவர் எதற்காக இத்தனை மரத்துண்டுகளை உண்டாக்குகிறார் என்பது புரியாமல். இறுதியில் அந்த தச்சரால் எல்லா மரத்துண்டுகளும் ஒரு ஒழுங்கில் தொகுக்கப்பட்ட அந்த நிமிடம், வளைவு நெளிவு களோடு அலங்காரமான அழகான ஒரு மயில் நின்று கொண்டிருந்த அற்புதம். இது ஆதிக்கு பேராச் சரியம் ஏற்படுத்திய சம்பவம்.

இரண்டாவதாக 4ம் வகுப்புப் படிக்கையில் ஒரு டிராயிங் மாஸ்டர் அவருடைய திருப்திக்காக வகுப்புக் கரும்பலகையில் ஒரு வாரத்திற்கு ஒன்றாக மாற்றி மாற்றி ஓவியம் வரைந்து கொண்டிருப்பார். எதிரே அமர்ந்து, போர்டில் சித்திரம் உருவாவதைக் கூர்ந்து பார்த்துக் கொண்டிருக்கும் ஆதி. சித்திரம் பூர்த்தியான சற்று நேரத்திற் கெல்லாம் அதைச் சிலேட்டில் பிரதி எடுத்து விடுகிறார். அது டிராயிங் மாஸ்டரிடமிருந்து வெகுவான பாராட்டைப் பெற்றுக் கொடுத்தது.

இனி ஆதியின் குரலிலேயே...

■ நான் வீட்டில் எதையாவது வரைந்து கொண்டேயிருப்பேன், சிறுவனாக இருக்கையில். என் தந்தை மகிழ்ச்சியுடன் பக்கத்து வீடுகளிலிருந்து ஆட்களை அழைத்து வந்து காண்பிப்பார். எனக்கு வெட்கம் எல்லை மீறிப் போகும். கதவிடுக்கில் ஒளிந்து கொண்டு பார்ப்பேன். எனது படங்களைப் பற்றி அவர்கள் சிலாகித்துப் பேசு வார்கள். ஹைஸ்கூல் வந்த பிறகும் நண்பர்கள் என் படங்களைப் பார்த்து விட்டு, 'நீ நிஜமாகவே பெரிய ஆர்ட்டிஸ்ட் தான்' என்பார் கள். அப்போதுதான் 'ஆர்ட்டிஸ்ட்' என்றவார்த்தை என் மனதிலே திடங் கொண்டது. ஓவியனாகத்தான் ஆவதென்று முடிவு செய்து கொண்டேன். ஓவியந்தொடர்பான வற்றில் பாய்ந்த என் ஆர்வத்தில் சிறு பகுதியேனும் படிப்பில் செல்ல வில்லை. எஸ்.எஸ்.எல்.சியைக் கொஞ்சம் சிரமத்துடன் தான் ஒப்பேற்ற வேண்டியிருந்தது.

■ சென்னை வந்து பி.எஸ் செட்டியார் என்பவரின் வீட்டில் கொஞ்ச நாள் இருந்தேன். நான் இங்கு வந்தது, ஏதாவது பத்திரிகை யில் படம் போடத்தான். பி.எஸ். செட்டியார் என் படங்களைப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பார்த்து விட்டு, ஓவியக் கல்லூரியிலே சேரச் சொன்னார். பிறகு பி.எஸ்.செட்டியார், ஓவியர் தனபாலைப் பார்த்துப் பேச, நான் ஓவியக் கல்லூரியில் சேருவதையே தனபாலும் விரும்பினார். தனபால் வீட்டில் தங்கி 'மாடல் ஸ்டடி', 'லைப் மாடல்'– 'ஸ்டில் லைப்' போன்றவற்றில் பயிற்சி எடுத்துக் கொண்டேன். இதனால் பரீட்சையில் தேறி கல்லூரியில் சேர்வது மிகவும் சுலபமாக நடந்தது.

■ நவீன ஓவியம், இசையைப் போன்றது தான். இசையைத் தொடர்ந்து கேட்டு உள்வாங்கி, அதிலேயே மனத்தை அமிழ்த்தி, ஒரு கட்டத்தில், எந்த இடத்திலிருந்தாவது லயம் கசியும் போது, செவிப்புலன் மற்ற ஓசைகளை நிராகரித்து, லயம் ஒன்றையே கிரகித்து சந்தோஷிக்கப் பழகுவதைப் போலவே, கருத்தூன்றி, நவீன ஓவியங்கள் தரும் அனுபவத்தையும், அது பற்றிய புரிதலையும் பெற, ஓவியங்களை ஆழ்ந்து நோக்கப்பழகுவதாலேயே முடியும். சிலர் நவீன ஓவியத்தைப் பார்க்கும் போது, அதைப் பற்றி எதுவுமே தெரியாவிட்டாலும்கூட, 'அது என்னமோ செய்கிறது' என்பதாய் அதன் வெளியீட்டு உணர்ச்சியைக் குறிப்பிடுவார்கள். சில பண்டிதத் திறனாய்வாளர்கள், 'ஓவியம் பற்றி அகநானூற்றிலே அங்கே சொல்லியிருக்கிறது. புறநானூற்றில் இங்கே சொல்லியிருக்கிறது' என்று சொற்பொழிவாற்றி விட்டு, 'மார்டன் ஆர்ட் என் உள்ளே செல்லவில்லையே' என்று அங்கலாய்ப்பார்கள். தூங்குவது போல் நடிப்பவர்களை அவ்வளவு சுலபத்தில் எழுப்பி விட முடியாது தான். வார்த்தைகள் சமிக்ஞை காட்டும் அடையாளத்திற்குமேல் சென்று, ஒரு கவிதையை ரஸிக்கக் கூடிய ரசனையுடையவர்களுக்கு நவீன ஓவியத்தை அணுகுவதில் பிரச்சனையிருக்காது. அறிந்து கொள்வதில் உள்ள ஆர்வமும், நிரந்தரத் தேடலும் தவிர்க்க இயலாத அவசியமல்லவா!. நல்ல ஓவியங்கள் நிறைய இருக்கிறன்றன. பார்ப்பவர்கள் குறைவு.

■ மக்களிடம் ஓவியங்களைக் கொண்டு செல்வதற்காக, லலித் கலா அகாதமியில் கலாமேளா போன்று அவ்வப்போது நடத்திக் கொண்டுதான் இருக்கிறோம். சராசரியான் பொதுமக்களை நவீன ஓவியத்தோடு தொடர்புபடுத்த வேண்டி அரங்கு தவிர்த்து, மைதானத்தில் ஓவியக் கண்காட்சியை நடத்தினோம். கண்காட்சியோடு நடன நகழ்ச்சிக்கும் ஏற்பாடு செய்திருந்தோம். பொருட்செலவு மிக்கதான இது போன்ற விழாக்களை எப்போதாவது தான் செய்ய முடியும்.

■ மனிதனுடைய முதல் உந்துதல், குகை ஓவியங்களிலிருந்து தொடங்குகிறது. நான் உண்பதற்கு எது காரணமாக அமைகிறதோ அதற்கு நிகரான ஒன்றுதான் வரைவதற்கும் உதவுகிறது. ஓவியத் தொடர்பானவற்றைத் தவிர பிறவற்றில் மனம் படிவதில்லை. இது ஆன்ம சாந்தி. துணி கட்டும் முன்பே மனிதன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கோடுகளைக் கிழித்து ஓவியந் தொடங்கி விட்டான். கைகளின் வசதியான இயக்கத்தை உணர்ந்திருந்ததாலும், அறிவினாலும், ஓவியத்திற்காக அவன் உபயோகப் படுத்திய பொருட்களாலும் இது சாத்தியமாயிற்று.

■ இருபதாம் நூற்றாண்டில் எல்லாமும் வளர்ந்த நிலையில் 'ஓவியத்திற்கான தூண்டுதல் எது?' என்பது போன்ற விஷயங்களைப் பிரித்துப் பார்க்க இயலவில்லை. ஓவியம் படைப்பதற்கான தூண்டுதல் ஒவ்வொரு காலத்திற்கும் மாறிக் கொண்டேயிருக்கிறது. நமது வசதிக்கேற்ற மாதிரி, நமது மனோ பாவத்திற்கு ஏற்ற மாதிரி. இதில் குறிப்பிட்டுச்சொல்வதற்கு எதுவுமில்லை. படைக்கப்படும் முன்பு அதன் தேவை குறித்த எண்ணம் மாற்றமடைந்து கொண்டிருக்கிறது.

■ நான் கேன்வாஸ் முன்பு, ஒரு ஐடியாவோடு வரையத் தொடங்கினால் எனக்குள் அது 'ரிஜெக்ட்' ஆகிவிடுகிறது. எதையும் முன் கூட்டி தீர்மானிக்காமல், என்ன செய்யப் போகிறோமென்று தெரியாமல் வரைய ஆரம்பிக்கிறேன். இப்போதைய எனது ஓவியங்களில் அது சாத்தியமாகிறது. அது நான் எதிர்பார்ப்பதைப்போல நல்லபடியாக வருவதுண்டு. அப்படியாகாமல் போவதும் உண்டு. என் சமீபத்திய ஓவியங்கள் முழுக்கவும் இயற்கையாகவும், வண்ணங்களுக்கும் எனக்குமுள்ள சம்பாஷணையாகவும் இருக்கிறது. இதற்குள் ஒரு நியாயம்- இயக்கம்- ஒரு நல்ல கவிதையின் துடிப்பு இருப்பதாகவே கருதுகிறேன். இருப்பதாலேயே அடுத்த ஓவியத்திற்குத் தயாராக முடிகிறது. பெயிண்டிங் முடிந்த பிறகு நானும் ஒரு புதிய ஆள் போலவே பார்க்கிறேன். ஒரு விஷயத்தின் வெளிச்சம், வண்ணங்கள், முன்பின் அதன் இயக்கம் ஆகியவற்றை அரூப ஓவியங்களில் ஆழமாகப் பதிவு செய்ய முயற்சிக்கிறேன். ஒன்றின் சாரத்தைப் புதிய நோக்கில் வடிக்கும் போது, அது ஒருவரைச் சலனப்படுத்தவே செய்கிறது.

■ பழைய ராஜாக்களின் உருவப் படங்கள் நிறைந்த ஆல்பம் ஒன்று பார்க்கக் கிடைத்தது. அது பிரிட்டிஷாரிடம் தோழமையாக இருந்த ராஜாக்களை மட்டும் படமெடுத்து தொகுக்கப்பட்டிருந்தது. புகைப் படங்களில், அந்த ராஜாக்கள், அவர்களின் ராஜாங்கங்களை பிரிட்ஷாரிடம் பறி கொடுத்துவிட்டு போஸ் கொடுத்து நின்றது எனக்கு பரிதாபமேற்படுத்தியது. வெறும் உடைகளே ராஜாக்களாக எனக்குத் தோன்றின. இதை வைத்து நான் அநேக கோட்டுச் சித்திரங்கள் செய்தேன். அந்த ராஜாக்கள், முகமற்று, வெறும் ராஜ உடை அணிந்தவர்களாகவே இருப்பார்கள்.

■ நான் பெயிண்டிங் செய்து கொண்டிருக்கும் போதே திடீரென்று டிராயிங் ஆரம்பித்து விடுகிறேன். பெயிண்டிங் ஆரம்பித்து அது முடிவது வரை உள்ள சவாலான மனநிலை டிராயிங்கில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இல்லை தான். ஆனாலும் அதுவும் எனக்கு மகிழ்ச்சியைத் தருகிறது. அப்ஸ்ட்ராக்ட் ஓவியம் செய்பவர்கள் டிராயிங் பண்ண முடியாது என்று கருதுகிறார்கள். அது தவறானது. தோன்றும் போது பெயிண்டிங் தோன்றும் போது டிராயிங் அவ்வளவு தான்.

■ எந்த மாதிரியான விமர்சனங்களும் என்னை பாதிப்பதில்லை. எனக்குத் தெரியும், என்னுடைய நல்ல பெயிண்டிங் எதுவென்று. இன்னொருத்தர் சொல்வதை வைத்து நான் முடிவெடுப்பதில்லை. படைப்பாளியை விமர்சனங்கள் பாதிக்குமானால் அவனது படைப்பாற்றல் ஊனமாகும். நமக்கு, நம்முடைய விஷயங்களில் நம்பிக்கை இருக்கிறது.

■ முன்பெல்லாம் ஊருக்குப் போனால், 'என்னடா படிப்பு இது. எவ்வளவு படித்தாலும் டிராயிங் மாஸ்டராகத்தானே போக முடியும்' என்றெல்லாம் கடுமையாக தொடர்ந்து 'டிஸ்கரேஜ்', செய்வார்கள். நான் அதையெல்லாம் தாண்டி வந்திருக்கிறேன்.

■ பத்திரிகைச் சித்திரங்களில் நிர்பந்தம் இருக்கிறது. ஆயினும் ஜெயராஜின் படங்கள், எந்தவித பாவமுமின்றி காமிக்ஸ் மாதிரி இருக்கின்றன. மணியன் செல்வம் கொஞ்சம் பரவாயில்லை. ஒன்றிரண்டு படங்கள் அப்படியிப்படி இருந்தாலும், மருது, கொஞ்சம் தீவிரமாகச் செயல்படுகிறார்.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சினிமாக் கவிஞர்களாக இருப்பவர்கள், வெளியிலும் பாப்புலராக இருக்க வேண்டுமென்று நினைக்கிறார்கள் . புத்தகம் போடும் போது தரம்வாய்ந்த ஓவியங்களை அட்டைப் படங்களாகப் போட விரும்புகிறார்கள். அது போன்ற சினிமாக் கவிஞர்களின் வேண்டுகோளை நான் நிராகரித்து வந்திருக்கிறேன். பாரதி, பாரதிதாசன், கண்ணதாசனுக்குப் பின்னுள்ள இடத்தைப் பிடிப்பதில் கவிஞர்களிடையே கடுமையான போட்டி நிலவுகிறது. பாரதிராஜா, அவர் படத்தின் ஆடியோ கேஸட்டில், ஒருவரை அந்த இடத்தில் அமர்த்தி மகிழ்ந்திருக்கிறார்.

▩ பெண் எனில் பெரிய மார்புகள், சின்ன இடை, அளவான தோள் இறக்கம் இப்படி மனித உருவத்தின் அளவுகளை சிற்ப சாஸ்திரம் துல்லியமாக வரையறுக்கிறது. இதில் கலைஞன் தன் போக்கில் செயல்படுவதற்குரிய வாய்ப்புகள் இல்லை. அளவின் படியேதான் சிற்பம் செய்ய வேண்டும். சுடுமண் சிற்பங்கள் இதில் வேறுபட்டிருக்கிறது. கிராமத்தைச் சேர்ந்தவர்கள் -சில குறிப்பிட்ட ஜாதியினர்- திருவிழா போன்ற நாட்களில் செய்யும், மண் சிற்பங்கள் மிகவும் யதார்த்தமாக அமைகின்றன. குதிரை என்றால் பெரிய வயிறு, பெரிதான கால்கள், திறந்த வாய், கம்பீரத் தோற்றம் இவைகளோடிருக்கிறது. இவைகளை எந்தக்கட்டுப்பாட்டுக்கும் உட்படாமல் செய்கிறார்கள். நான், கிராமத்தில் பிறந்து வளர்ந்ததினால் இது போன்ற சிற்பங்களை நெருக்கமாக உணர முடிகிறது. அது போன்ற சிற்பங்களை அப்படியே வரையாமல் அதிலிருந்து எனக்கான ஓவியத்தை உருவாக்கிக் கொள்கிறேன்.

▩ ஒரு நாவல் எழுதப்படும் போது, கலாச்சாரம் சார்ந்த, 'நாஸ்டால்ஜி' யான விஷயங்கள் பெரிதும் வரையறை செய்கின்றன. ஓவியத்திற்கு அப்படியில்லை. நாம் எதை உணருகிறோமோ அதை அப்படியே வண்ணத்தில் பதிவு செய்யலாம். இது உலக மொழி. ஓவியன் எதனின்றும் எதையும் மீறிச் செயல்பட முடியும். படைப்புக் கலைஞன் எதையும் சார வேண்டிய அவசியமில்லை. நான் சமூகக் காரணங்களால் பாதிக்கப்படலாம். ஆனால் அந்த விஷயங்களைத்தான் நான் வரைய வேண்டுமென்பதில்லையே. சமூகப் பாதிப்புகளைப் பற்றி வரைந்தவர்களின் ஓவியங்களில் தான், சோகம் இருக்கிறதே தவிர அவர்களிடத்தில் இல்லை.

▩ ஓவியங்கள் தொகுப்பாக வரும் போது அது அதற்குண்டான ஆளுமை, செயல்பாட்டுத் திறமை இதைச் சார்ந்த விஷயங்களோடு வரவேண்டும். புகழேந்தி, தன்னை சமுதாயப் பார்வை கொண்ட ஓவியராக நினைக்கிறார். அந்த வகையில் அவர் நிறையச்சாதித்தது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

போலவும், அதைப் புத்தகமாகப் போட பிறர் நிர்பந்தித்ததாகவும் சொல்லி தொகுப்ப்ப வெளிக் கொண்டு வந்திருக்கிறார். ஒரு ஓவியனுக்கு புத்தகம் போடுவது லட்சியமாக இருக்கக் கூடாது. எழுத்தாளர்களுக்கு அந்தக் கட்டாயம் இருக்கிறது. அவர்கள் புத்தகம் கொண்டு வந்தால் தான் அவர்களின் எழுத்து ஜனங்களிடம் போய்ச்சேரும். ஓவியனுக்குபுத்தகம் அவசியமில்லை.

▩ வீர சந்தானம், அவரின் ஆர்வத்தைப் பல விஷயங்களில் சிதற விடாமல் இருந்திருந்தால் அவர் சிறந்த படைப்புக்களைத் தந்திருக்க முடியும். இலங்கைப் பிரச்சினையின் போது அதன் தீவிரமான விவகாரங்களை, கொந்தளிப்பான போராட்டத்தை அங்கிருந்தே ஒருவர் எழுதினால் அதில் உண்மை இருக்கும். சந்தானம் ஒரு தடவை இலங்கை சென்று வந்து, அங்கு நடப்பவை களைப் பற்றி ஓவியங்கள் வரைந்திருக்கலாம்.

**(முகிலின் மீது நெருப்பு- இலங்கைப் பிரச்சனை பற்றி வீர சந்தானத்தின் ஓவியங்கள் அடங்கிய தொகுப்பு)**

▩ திரும்பத் திரும்ப நம்பிக்கை யானவைகளை ஸ்தாபிப்பதுதான் எனது ஓவியங்கள்.

▩ என்னில் சம்பவங்கள் ஏற்படுத்தும் அதிர்வுகளை, என் கற்பனைத்திறனை, உணர்ச்சிகளை கூர்மையாக, முழு வீச்சுடன் கொண்டுவரத்தான் சின்னச் சின்ன கோடுகள் உதவுகின்றன. கை பழகுவதாலோ என்னவோ சில டெக்னிக்குகள் தொடர்ந்து வரு கின்றன.

▩ நம்மைச் சுற்றி எவ்வளவோ விஷயங்கள் நடக்கின்றன. எனக்குள் ஒரு நெருப்பு எப்போதும் கனன்று கொண்டு இருக்கிறது. என் ஆழமான நம்பிக்கையாலும், ஆர்வத்தாலும் அதன் வீரியம் குன்றி விடாமல் காப்பாற்றி வருகிறேன். அவார்டு வாங்குவதோடு முடிந்து விடுவ தில்லை. அதையும் தாண்டிய விஷயம் இது.

▩ இளைய ஓவியர்கள், எங்கிருந்துட வரும் விஷயங்களைக் கிரஹித்துக் கொள்ள எப்போதும் தயார் நிலை யில் இருக்க வேண்டும். மனத்தை இளமையாக வைத்துக் கொள்ள வேண்டும். இப்போதுள்ளவர்களுக்கு படம் விற்பதில் கவனம் இருக்கிறது. அவார்டில் கவனம் இருக்கிறது. அந்த அளவு சிரத்தை அவர்களது ஓவியங்களில் இல்லை. செய்கின் எதையும், செய்ய முடிகின்ற அதன் எல்லை வரை முயல வேண்டும். எதுவும் நம் திறமையை மங்கி போகச் செய்யாது. நல்ல ஓவியன் தன் பணியில் சோர்வடைந்து விடமாட்டான்.

சந்திப்பு - யூமா. வாஸுகி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



விழிப்பு

திருமதி. கைரன் உலகப் புகழ் பெற்ற ஓவியர். 18.2.1948ல் நியூயார்க்கில் பிறந்தவர். பயோ பிஸிக்ஸில் டாக்டர் பட்டம் பெற்றவர். ஓவியக் கலையை முறையாகக் கல்லூரியில் பயின்ற பின் 1986ல் பஞ்சாப் பல்கலைக்கழகத்தில் சில காலம் பணியாற்றியவர். ஸ்கெட்ச், பெயின்டிங், ஏராளமாகப் படைத்த தோடு, பல இடங்களில் கண்காட்சி களும் நடத்தியிருக்கிறார். படங் களுடன், குழந்தை இலக்கியப் புத்தகங்கள் படைப்பதோடு பெண்ணிய இயக்கத்திலும், உலக அமைதி–சர்வாதிகார எதிர்ப்பு இயக்கங்களிலும் ஈடுபட்டு வரு கிறார். அமெரிக்கப் பிரஜையாகி விட்ட இவர் இந்திய வம்சாவளியைச் சார்ந்தவர்.

–சௌரி



மாற்று வழிச் சிந்தனை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ரூர்க்கிலும், மைசூரிலும் நடைபெற்றபல்கலைக் கழகங்களுக்கிடையேயான 'கொலாஜ்' போட்டியில், கும்பகோணம் அரசு கலைத் தொழிற் கல்லூரிக்கு பதக்கம் பெற்றுத் தந்தவரான ஆர்.அறிவுச் செல்வன், தன் ஆசிரியர் ரங்கராஜனின் ஓவியப் போக்கிலிருந்து வெகுவாக மாறி சர்ரியலிஸ ஓவியங்களைத் தொடர்ந்து படைத்துக் கொண்டிருக்கிறார்.

இவரது படங்களில் அமானுடத்திற்கும், இயல்பிற்குமான இடைவெளியை அங்கங்கே தட்டுப்படும் மரபின் அடையாளங்களிலிருந்துதான் விளங்கிக் கொள்ள முடிகிறது.

தீயிற் கருகிய வீடுகளைக் குறிக்கும் இவரது சில வண்ண ஓவியங்களுள் ஒன்று, நுண்கலைக் குழு கண்காட்சியில் இடம் பெற்றிருக்கிறது.

மீன் குஞ்சுகளுக்கு ஒரு தாய் பாலூட்டுவது... ஒரு வண்ணத்துப் பூச்சி எல்லா பூக்களிலும் அமர்ந்து எழுவது... போன்ற வரையறை தகர்த்த இவரது கற்பனை, நுட்பமான உத்திகளோடு ஓவியத் துறைகளில் பதிவாகின்றன.

புகைப்படக்கலையிலும்- சில புகைப் படச் சங்கங்களின்- போட்டிப் பரிசுகளை வென்றவரான இவர் இந்தியா முழுவதிலும் பயணித்து, நல்ல காட்சிகளைப் புகைப் படங்களாக நிலைப்படுத்தியவர்.

www.tamilarangam.net

# என்னைக் கேட்டால்...

**என்.எஸ்.ஜகந்நாதன்**



அகிலனுக்குப் பிறகு, தமிழ் இலக்கியச் சாதனையாளர்களை ஞான பீட் பரிசு கண்ணெடுத்தும் பார்க்கவில்லை என்ற தாப, கோப வெளிப்பாடுகள், வாடிக்கையான ஆண்டு நிகழ்ச்சிகளாகி வெகு காலமாகிவிட்டது. இவ்வாண்டும் அப்பரிசை நான்காம் முறையாகத் 'தட்டிக் கொண்டு' போய்விட்ட கன்னடக்காரர்களைப் பற்றியும், இப்பரிசு வழங்கும் நிறுவனத்தைப் பற்றியும் விமர்சனங்கள் வெளி வந்துள்ளன. இது பற்றிய விவாதத்தைத் தொலைக்காட்சி நிகழ்ச்சியொன்றில் எதேச்சையாக எதிர் கொள்ள நேர்ந்தது. இதில் பேசியவர்கள் முன் வைத்த கருத்துக்கள் எழுப்பிய எதிரொலி களில் சிலவற்றை வாசகர்களுடன் பகிர்ந்து கொள்ளத் துணிகிறேன்.

இத்தகைய பரிசுகள் இலக்கிய வளர்ச்சிக்குத் தேவை தானா? என்ற கேள்வி முதலில் எழுகிறது. நோபெல் இலக்கியப் பரிசு முதல் புக்கர் பரிசு; ஞான பீட விருது, சாகித்ய அகாதெமி மற்றும் பல இந்திய தமிழக அங்கிகாரங்கள் எல்லாமே இலக்கிய சம்பந்த மில்லாத சர்ச்சைகளையும் காழ்ப்புணர்ச்சிகளையும் எழுப்பி விட்டிருக்கின்றன. நோபெல் இலக்கியப் பரிசின் கொச்சையான அரசியல், புக்கர் பரிசுத் தேர்வு களுக்கு முன்னரும் பின்னரும் மாதக் கணக்கில் சந்தி சிரிக்கும் பூசல்கள், வர்த்தக ரீதியில் நடக்கும் வியாபார மின் தாக்குகள், தேர்வாளர்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

களிடையே நடக்கும் மோதல்கள், அவர்களின் தேர்வுகள் பற்றிய கடும் விமர்சனங்கள், உலகறிந்த விஷயம். இலக்கியத்தில் ஆழமான ஈடுபாடு உள்ளவர்கள், நோபெல் விருதை ஒரு இலக்கிய அங்கீகாரமாகவே ஏற்றுக் கொள்வதில்லை. இப்பரிசு பெற்றவர்களில் ஒரு சிலர் தரமான படைப்பாளிகள் என்பது உண்மை தான். என்றாலும் இவர்களுடைய இலக்கிய அந்தஸ்து வேறுவகை களில் நிறுவப்பட்டவை. நோபெல் பரிசு இவர்களை பணக்கார் களாக்கி விட்டாலும் இவர்களுடைய இலக்கிய நன் மதிப்பை அதிகரிக்க வில்லை.

இந்திய இலக்கியப் பரிசுகளும் இவ்விதிகளுக்கு அப்பாற்பட்டதல்ல. அனைத்திந்திய மட்டத்தில், ஞான பீட், சாகித்ய அகாதெமி பரிசுகள் பற்றியும் மனத்தாங்கல்கள், முக்கிய மாக தமிழ் நாட்டில் இல்லாத ஆண்டுகள் மிகக் குறைவு. நோபெல் இலக்கியப் பரிசை ஓரளவு ஒத்த ஞான பீட் பரிசின் நிலைமை பரிதாப கரமானது. குறைந்த பட்சம் 15 மொழிகளில் வெளி வரும் கவிதை, புனைவிலக்கியம் மற்றும் பல்வகை எழுத்துக்களைச் சீராக மதிப்பீடு செய்து, ஒருவர் முகமும் கோணா மல், ஒரே ஒரு எழுத்தாளரைப் பரிசுக்காகத் தேர்ந்தெடுப்பது இறைவனாலும் முடியாத செயல். நோபெல் பரிசும் இந்த இடர்பாடு களை எதிர் கொள்கிறது. என்றா லும், முன்னரே சொன்னபடி, அதன் தேர்வுகள், மேலை நாட்டுக் கருத்தியல் சார்புகளின் தாக்கங்கள், அவற்றின் ஆதிக்க அரசியல் போட்டிகள் போன்ற நிர்பந்தங் களில் சிக்கித் தவிக்கின்றன. இதன் காரணமாகவே சில நோபெல் இலக்கியப் பரிசுத் தேர்வுகள் நகைப் பிற்கிடமாகியுள்ளன. எனக்குத் தெரிந்த மட்டில் ஞான பீட் விருதிற்கு இந்த அவப்பெயர் எழவில்லை. பரிசு பெற்றவர்கள் இலக்கிய ரீதியில் அதற்குத் தகுதி அற்றவர்கள் என்றோ அல்லது அரசியல்/கருத்தி யல் அடிப்படையில் அளிக்கப் பட்டுள்ளது என்றோ புகார்கள் இல்லை. ஒரு குறிப்பிட்ட மொழியோ அல்லது எழுத்தாளரோ கௌரவிக் கப்படவில்லை என்பது வேறு விஷயம்.

தமிழகத்தில் எழுந்துள்ள மனத்தாங்கல்கள், ஞான பீட் அறக் கட்டளையினரைப் பற்றியில்லை என்று எண்ணுகிறேன். இவ்விஷயத் தில் அவர்கள் நிறுவியுள்ள தேர்வு விதிகள் பற்றி கூட அல்ல என்று தோன்றுகிறது. மனித யத்தனத்தி னால் சாதிக்கமுடிந்த வரை தனி மனித - விருப்பு வெறுப்புகளைத் தவிர்க்கும் வகையில் அமைக்கப் பட்டள்ளன. ஆனால் ஒரு பன் மொழி சமூகத்தில் இவ்விதிகள் செயல் படும் போது பல தவிர்க்க முடியாத குளறுபடிகள் எழுகின்றன என்ற குறை பரவலாக உள்ளது.

ஞான பீட் விருதின் லட்சியம் கொள்கை அளவில் உன்னதமானது என்பதை ஏற்றுக் கொள்வதில் தயக்கம் ஏதும் இருக்க முடியாது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆனால் இந்த லட்சியத்திலேயே ஒரு தவிர்க்க முடியாத கோணல் அடங்கியிருக்கிறது. ஒரே ஒருவருக்குத்தான் - அதுவும் பல மொழிப் படைப்பாளர்களில் - விருது கொடுக்க முடியும் என்றால் பரிசுக்கு விழைபவர்களை அல்லது முன் மொழியப்படுபவர்களை வரிசைப்படுத்தி, 'மதிப்பெண்' கொடுத்து, முதல்வரைத் தேர்வு செய்வது தவிர்க்க முடியாத செயல்முறை ஆகி விடுகிறது. இந்த நிலையைத் தன்மானமுள்ள எழுத்தாளர் எவருமே ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். இரண்டாவதாக இந்திய மொழிகள் எல்லாவற்றிலும் எழுதப்பட்டுள்ள படைப்புகளை ஒப்பிட்டுத் துல்லியமான தர மதிப்பீடு செய்வதற்குத் தேவையான பன் மொழி இலக்கிய ஈடுபாடும், இம்மொழிகளில் ஆழப்பதிந்துள்ள கலாசாரப்படிமங்கள், மொழியியல் நுணுக்கங்கள் பற்றிய அறிவும் பிரக்ஞையும் கொண்டவர்களாக ஞான பீட் ஜுரி அங்கத்தினர் எவரும் இருக்க முடியாது. முன்னரே சொன்னபடி இப்பணிக்குக் கடவுள் தேவைப்படுகிறார். இதன் காரணமாகவே, ஒவ்வொரு மொழியிலும் சிறந்த நூலுக்குத் தனித்தனிப் பரிசு அளிக்க முன் வரும் அகாதமி சாத்தியப்படுத்தக் கூடிய தன்னடக்கம் கொண்ட ஒரு லட்சியத்தைக் கொண்டுள்ளது. இதிலும் கூட, மேலெழும்பிய முதலாவது ஆட்சேபணை-பள்ளிப் பரீட்சை நடை முறைகள்- குறுக்கிடுகின்றன என்றாலும் இரண்டாவது ஆட்சேபணை எழுவதற்கில்லை.

ஆகவே போட்டி முறைகளை உள்ளடங்கிக் கொண்டுள்ள பரிசுகளில் மேலே சொன்ன அடிப்படை பலவீனத்தைக் கருத்தில் கொண்டால், 'இப் பரிசுகள் ஒரு கிரீடம். அவை கிட்டாதது ஒரு மாபெரும் இழப்பு' என்ற உணர்விற்கே இடமில்லை. இவ் விருதை வாங்கியவர்களுக்குச் சமமான- சில நோக்குகளில் அவர்களை விடச் சிறப்பான-படைப்பாளிகள் தமிழிலும் மற்ற மொழிகளிலும் எழுதிக் கொண்டு தான் இருக்கிறார்கள். ஞான பீட் விருது ஒரு இலக்கிய முத்திரையல்ல. அதிகமாகப் போனால், இலக்கியத்தை வளர்ப்பதில் போதுமான அக்கறை காட்டவில்லை என்ற சமூக குற்ற உணர்வின் பிராயச்சித்தமாக இதைக் கொள்ளலாம். இதை மனதில் கொண்டால், இப்பரிசுகள் பற்றிய ஏக்கமெல்லாம் தேவையற்ற மன உளைச்சல்.

இலக்கியத்திற்கு அப்பாற்பட்ட பல பரிமாணங்களைக் கொண்ட இந்த மன நிலை ஆரோக்கிமானதாக எனக்குப் படவில்லை.

தமிழுக்கு எதிராகச் சதிகள் நடக்கின்றன. இவற்றில் தமிழர்களே ஈடுபட்டிருக்கிறார்கள். அன்னிய மொழியினர் தங்களுக்குள் பூசல்கள் இருந்தாலும், அனைத்திந்திய அங்கீகாரம் என்று வரும் போது ஒற்றுமையுடன் செயல்படுகிறார்கள் சக படைப்பாளிகளைத் தூக்கி வைத்து, தங்கள் மொழிக்குத் திட்டமிட்டு பரிசு தேடிக் கொடுக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கிறார்கள்.தமிழர்களோ, தங்களைத் தாங்களே சிறுமைப்படுத்திக் கொண்டு, சக எழுத்தாளர்களை ஏசியும், அவர்கள் திறனைத் தூற்றியும், இப்பரிசுகள் தமிழ் எழுத்தாளர்களுக்குக் கிடைக்காமல் செய்து விடுகிறார்கள். இத்யாதி... இத்யாதி...

தமிழர்களே தமிழர்களுக்கு எதிராக இயங்குகிறார்கள் என்ற வேதனைக்கு நான் தொடக்கத்தில் குறிப்பிட்ட தொலைக்காட்சி நிகழ்ச்சியில் பங்கு பெற்ற மாலன் ஒரு புதிய(?) முகம் கொடுத்தார்.

நான் அவரைச்சரியாகப்புரிந்து கொண்டிருந்தால் அவருடைய வாதம் இப்படி அமைகிறது.

தன் இனத்திற்கு எதிராகச் செயல்படும் பணியில், டெல்லி வாழ் தமிழர்களுக்கு கணிசமான பங்கு உண்டு. இப்பரிசுகளை அளிக்கும் நிறுவனங்களுடன் தொடர்பும், சம்பந்தப்பட்ட முக்கியஸ்தர்களுடன் செல்வாக்கும் பெற்றுள்ள டெல்லித் தமிழ் அறிவு ஜீவிகள், தற்கால தமிழ் எழுத்தாளர்களை மட்டம் தட்டிப் பேசி, மற்ற மொழியினரிடம் தமிழ் இலக்கிய முயற்சிகள் பற்றி ஒரு தாழ்வான அபிப்ராயச் சூழலை உருவாக்கியிருக்கிறார்கள். இந்தக் 'கீழறுப்பான்' வேலை தனிப்பட்ட பரஸ்பரப் பகைமையிலிருந்து மட்டும் எழுந்தது அல்ல. மேலைய அழகியல் நோக்குகளுக்குத் தங்களை அடிமையாக்கிக் கொண்டு விட்ட இவர்கள், தமிழ் பாரம்பரிய பிரக்ஞையில்லாமல் தமிழ் இலக்கிய முயற்சிகளை அளவிடுகிறார்கள். இப்படிச் செய்யும் போது, தமிழ் எழுத்துக்களைத் தெரிந்தோ, தெரியாமலோ தவறாக மதிப்பிடுகிறார்கள்.

மாலன் முன் வைத்த கருத்தை நான் திரித்துக் கூறவில்லை என்று நம்புகிறேன். இது பற்றி என் கருத்து இது தான். அவர் முன் வைத்துள்ள அழகியல் வாதம் பழம் கதை. திரும்பத் திரும்ப அரைக்கப்பட்ட மாவு. சிக்கலான பிரச்சினையை இத்தகைய நோக்குகள் எளிமைப் படுத்துவதாக எனக்குப் படுகிறது. (மற்றொரு தருணத்தில் விவாதிக்கப் பட வேண்டிய விஷயம்.)

இது எப்படியிருப்பினும், இத்தகைய இலக்கிய விவாதங்களின் காரணமாக, பரிசிற்கான தகுதியுரிமை தமிழுக்குத் தட்டிப் போகிறது என்று என்னால் நம்ப முடியவில்லை. மற்ற மொழிகளிலும் இத்தகைய அழகியல் கருத்து வேறுபாடுகளும் பரஸ்பர நிந்தனைகளும் இல்லாமல் இல்லை. இருந்தாலும் பரிசுகள் தட்டிப் போவதில்லை.

தந்திர பூமியான டெல்லி என்ற அதிகாரக் கேந்திரத்தில் எல்லாக் களன்களிலும் பேரங்கள், செல்வாக்கு, வியாபாரம் வாடிக்கையாக நடப்பது உலகறிந்த விஷயம். ஆனால் தமிழுக்குக் கிட்டக் கூடிய பரிசு கிட்டாமல் செய்யும் அளவிற்கு டெல்லித் தமிழர்கள் இனப்பிரக்ஞை அற்றவர்கள் என்றோ, செல்வாக்கு மிக்கவர்கள் என்றோ எனக்குத் தோன்றவில்லை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

டெல்லித் தமிழர்களைப் ஒதுக்கிவிட்டால் எஞ்சி நிற்பது, தமிழகத்திலேயே, தமிழர்கள், தமிழர்களுக்கு எதிராகச் செயல்படும் பிரச்சனை. முதலில் தனிநபர் பொச்சரிப்புகள் பற்றி. எனக்குப் பரிச்சமான பத்திரிகை உலகில் இது பரவலாக இல்லை என்பது அனுபவத்திலிருந்து எழும் அனுமானம். (இது சரியான கணிப்பல்ல. வெகு நாளைய டெல்லி வாசத்திலிருந்து எழும் 'பிரமை' என்று நண்பர் கூறுகிறார்.) இது எப்படியிருப்பினும் எழுத்துலகம் சம்பந்தப்பட்டவரை தனி மனித பரஸ்பர விரோதங்கள், இவ்வுலகின் விளிம்பிகளில் நடமாடும் என்னைக் கூட அதிர வைக்கிறது. பரிசுப் போட்டிகள் என்று வரும் போது இந்தக் குரோதங்கள் எல்லாம் தீவிரமாக இயங்கும் என்று நம்புவதில் சிரமமில்லை. ஒரே ஒரு ஆறுதல். மற்றமொழியினரிடமும் இதே நிலை நிலவுகிறது. அண்மையில், 'க்ரீஷ் கர்னாட், தன்னைக் கன்னட எழுத்தாளர் என்று 'சொல்லிக் கொள்வதற்குத் தகுதி அற்றவர்' என்று ஒரு சக எழுத்தார் முழங்கியதைப் படித்தேன்.

தனி நபர் பொறாமைகளை விடத் தீவிரமாக இயங்குவது அரசியல், சமூகக் கருத்தியல் பகைமை உணர்வு. மனிதனாகப் பிறக்கும் ஒருவன் தானாக்வே நிர்ணயித்துக் கொள்ள முடியாத பிராமண, அப்பிராமண அடையாளங்கள் இவ்விலக்கியப் பரிசு சந்தர்ப்பங்களில் அப்பட்டமாகவே அழுத்தம் பெறுகின்றன. டெல்லியில் 'தமிழர் குரல் (கன்னடக்காரர்களின் குரல் போலல்லாது) எடுபடுவதில்லை' என்ற குமுறலில் உண்மை இருக்குமேயானால் தமிழர் குரலில் உள்ள இவ்விரிசல் ஒரு காரணமாக இருக்கக் கூடும்.


## முன்றிலின் இலக்கியப்பகிர்வு

தமிழின், தமிழில் பிற மொழிகளின் இலக்கியப் போக்குகளைப் பதிவு செய்யும் தரமான புத்தகங்கள்/ சிறு பத்திரிகைகளின் கண்காட்சி ஜுலை 5 முதல் 15ம் வரை முன்றில் அலுலகத்தில் நடைபெறும்.

*முன்றில்*
*28, இரண்டாவது தளம்.*
*சாந்தி காம்ப்ளக்ஸ்*
*26 ரங்கநாதன் தெரு*
*தி. நகர்,*
*சென்னை–600 017.*

www.tamilarangam.net

**கா**ஷ்மீர் பிரச்சினையில் பாகிஸ்தானுக்குப் பெரிய சேவை செய்த சப்ருல்லாக்கானை மதவெறி பிடித்தவர்கள் வெளியனுப்பி விட்டனர். சைனியத்தில் புரட்சி ஏற்பட்டது. லியாகத் அலிகானைச் சூழ்ச்சிக்காரர்கள் கொன்றனர். சிந்து முக்கிய மந்திரியை லஞ்சம் வாங்கியதாகக் குற்றம் சாட்டித் தண்டித்துப் பின்னர் அவரே மீண்டும் முக்கிய மந்திரியாகி முடிவில் மேற்கு பாகிஸ்தான் ஒரு பிரதேசமாக்கப்பட்ட பொழுது அதன் மந்திரிகளில் ஒருவராக நியமிக்கப்பட்டார். கிழக்கு வங்காளத்தில், பொது தேர்தலில் பெரும்பாலராக வந்த கக்ஷியாரின் மந்திரி சபையைக் கலைத்து கவர்னர் ஜெனரலின் ஆட்சியை நடத்தினர். இவ்விதம் பாகிஸ்தான், புயல் காற்றில்

# அரசியல் சட்டப் பிரச்சினைகள்



## வாழ்க்கை வெள்ளம்

அமரர் க. சந்தானம்

அடிபட்ட கப்பல் போல் ஊசலாடும் போது பாரதம் எவ்விதக் குழப்பமுமின்றி பொருளாதாரத்திட்டம் வகுத்து முன்னேறி வந்தது. ஒரு நாட்டிற்கு அரசியல் திட்டம் வீட்டிற்கு அஸ்திவாரம் போன்றது. ஆழமாக அஸ்திவாரம் போடும் போது வீண் சிலவும், சிரமமும் எதற்கென்று தோன்றுகிறது. ஆனால் அதில்லாவிட்டால் சிறிய காற்று, மழையைக்கூடச் தாங்காமல் வீழ்ந்து விடும்.

சுதந்திர மந்திரி சபையில் சட்ட மந்திரியான டாக்டர்.அம்பேத்கர் அரசியல் திட்டம் வரையும் கமிட்டியின் அக்கிராசனராக இருந்தார். ஆனால் மிக மிக முக்கியமான வேலைகளை எல்லாம் பி.என் ராவ் செய்தார். இவர் மிகவும் கெட்டிக்காரர். அரசியல் திட்டங்களைப் பற்றிய நுண்ணிய பிரச்சினைகளை நன்கு ஆராய்ந்தவர். உலகத்தில் இதர ஜனநாயக அரசியல் திட்டங்களைப்பற்றித் தெளிவாகவும் விவரமாகவும் படித்தவர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சுதந்திரம் அடைவதற்கு முன்னும் சீர்திருத்தங்களைத் தயார் செய்யும் வேலையில் பிரிட்டிஷ் அரசால் நியமிக்கப்பட்டிருந்தார்.பெரும் பாலும் இந்திய அரசியல் திட்டம் அவருடைய வேலைப்பாடாகும். அல்லாடி கிருஷ்ணசாமி அய்யரும் என்.கோபலசாமி அய்யங்காரும் இப்பணியில் சிறந்த சேவை செய்தார்கள். அல்லாடி கிருஷ்ண சாமி அய்யர் இந்தியாவிலேயே சிறந்த வக்கீல். அரசியல் சட்ட நுட்பங்களை ஆராய்ந்து விளக்கு வதில் மிகவும் நிபுணர். கோபால சாமி அய்யங்கார் மிகவும் உறுதி யான கொள்கைகள் கொண்டவர். நீண்ட நாளாக இந்திய அரசியல் பிரச்சினைகளைப் பற்றி தீர்க்கா லோசனை செய்தவர்.

சில முக்கிய பிரச்சனைகள் அரசியல் தலைவர்களால் தீர்க்கப் பட வேண்டியதிருந்தது.

முஸ்லீம்கள், சீக்கியர்கள் ஆங்கிலோ இந்தியர்கள், இந்தியக் கிறிஸ்துவர்கள், ஹரிஜனங்கள் முதலானோருக்கு பிரிட்டிஷார் நிர்மாணித்த அரசியல் திட்டங்களில் தனித் தொகுதிகளும், பொதுத் தொகுதிகளில் ஒதுக்கப்பட்ட ஸ்தானங்களும் அளிக்கப்பட்டிருந் தன. இம்முறைதான் மதச் சண்டை களுக்கு மூலாதாரமென்றும், அதை ஒழித்தாலொழிய ஒற்றுமைக்குவழி ஏற்படாதென்றும் தேசியவாதிகள் திடமான அபிப்ராயம்கொண்டிருந் தனர். ஆனால் இவ்வகுப்பாரனை வரையும் அலட்சியம் செய்து ஒரு தீர்மானம் கொண்டு வந்தால், அவர்கள் நிர்ணய சபையிலிருந்து வெளியேறி விடலாம் அல்லது எதிர்த்துக் கிளர்ச்சி செய்யலாம். புதிய அரசியல் திட்டத்திற்கு மக்களிடம் ஆதரவு குறைந்து போகும். எப்படியாவது அவர்க ளின் சம்மதத்தைப் பெற்று மத வாரிப்பிரதிநிதித்துவத்தை ஒழித்து விடவேண்டுமென்று சர்தார் படேல் நிச்சயித்தார்.முதலில் இந்தியக் கிறிஸ்துவர்கள் சம்மதித்தனர். மேற்குப் பஞ்சாப்பிலிருந்து சீக்கியர்கள் கிழக்குப் பஞ்சாப்பிற்கு வந்து குடியேறியதால் சொந்த மாகவே போதிய பிரதிநிதித்துவம் கிடைக்குமென்று சீக்கியரும் சம்மதித்தனர்.மதவெறி பிடித்த முஸ்லீம்கள் பாகிஸ்தான் போய் விட்டனர். முன்னர் மதவாரிப் பிரதிநிதித்துவத்தை எதிர்த்த முஸ்லீம்களே நிர்ணய சபையில் இருந்தனர். ஆதலால் அவர்களும் ஒப்புக் கொண்டனர். முடிவில் ஹரிஜனங்களுக்கும், ஆதிவாசி களுக்கும் கூட்டுத் தொகுதிகளில் பத்து வருஷங்களுக்கு ஒதுக்கப்பட்ட ஸ்தானங்கள் அவர்கள் எண்ணிக்கை வீதத்திற்கு ஏற்பக் கொடுப்பதென்று முடிவு செய் தனர். வேறு யாருக்கும் விசேஷச் சலுகைக் கூடாதென்று தீர்மானிக் கப்பட்டது.

அடுத்த பெரும் பிரச்சினை, மத்திய அரசாங்கங்களுக்கும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மாகாணங்களுக்கும் அதிகாரப் பிரிவினை. ஆரம்பத்தில் மத்திய அரசாங்கத்திற்கு, பாதுகாப்பு, வெளி நாட்டு விவகாரம், போக்கு வரத்து சாதனங்கள் மூன்றிலும் அதிகாரமிருக்க வேண்டுமென்றும், மீதி அதிகாரங்கள் பிரதேச அரசாங்கத்தின் வசமிருக்கவேண்டு மென்றும் ஏற்பாடாகியிருந்தது. முஸ்லீம் லீக், சுதேச சமஸ்தானங்கள் இவற்றின் ஆதரவைப் பெறவே இவ்வளவு குறுகிய அதிகாரங் களைக் கொண்ட மத்திய அரசாங்கம் நிர்மாணம் செய்யப் பட்டது.

பாகிஸ்தான் பிரிந்து விட்டது. சுதேச சமஸ்தானங்கள் பாரத சர்க்காரின் கீழ் கொண்டு வரப் பட்டன. இப்புதிய நிலைமையில் மத்திய அரசாங்கம் வலுவாக இருக்க வேண்டுமென்ற எண்ணம் மிகுந்திருந்தது. பாரதம் போன்ற மிகப்பெரிய நாட்டில், மத்திய அரசாங்கத்திற்கு மித மிஞ்சிய அதிகாரம் கொடுப்பது அதைப் பலப்படுத்தாமல் எல்லாக் குறை களுக்கும் ஜவாப்தாரி ஆக்குமென் றும், உண்மையான பங்காளி அரசாட்சியே (பெடரல்) நலமென்றும் கருதியவர்களுள் நானும் ஒருவன்.

பிரதேச அரசாங்கங்களுக்கு போதிய அதிகாரம் கொடுக்க வேண்டுமென்று வாதாடியதால் என் பேரில் சர்தார் போன்ற பெரிய தலைவர்களுக்கு ஓரளவு அதிருப்தி ஏற்பட்டது. ஆதி முதல், விடுதலை இயக்கத்தில் வேலை செய்ததால் என்மீது ஓர் புறம் அன்பிருந்தாலும், என்னைப் பிடிவாதக்காரன் என்று ராஜாஜியிடமும் மற்றவர்களிடமும் குறை கூறினார். வியாபாரம் பணிச் சிலாவணி முதலியவற்றில் சில புதிய விசேஷ சலுகைகள் மத்திய அரசாங்கத்திற்கு கொடுக்கப் பட்டன.

பெரியவர்கள் அரசியல் திட்டம் வகுத்து வர, அதன் ஷரத்துக் களை ஒன்று விடாமல் நன்கு பரிசீலனை செய்து குற்றங்களை நீக்கி, கூடியவரையில் அதை ஓர் ஆதர்ஸ திட்டமாக்க வேண்டுமென்று இரண்டாவது வரிசையில் சிலர் தீவிர முயற்சிகள் செய்து வந்தோம். ஸ்ரீமதி துர்க்கா பாய், படேஸ்கர், டி.டி.கிருஷ்ணமாச்சாரி, நான், வேறு சிலர் இந்த கோஷ்டியில் இருந் தோம்.

இந்திய அரசியல் திட்டத்தில் மொழிப்பிரச்சினை மிகவும் சிக்க லானதென்று அனைவருக்கும் தெரியும். ஆதலால் கடைசிவரையில் அதைத் தள்ளிப் போட்டார்கள். அது விவாதத்திற்கு வந்த போது உணர்ச்சிகள் பொங்கி எழுந்தன.

உடனே ஹிந்தியை தேசிய பாஷையாக்கி அமுல் செய்ய வேண்டு மென்று ஒரு சாரார் பிடிவாதம் செய்தார்கள். அவர்களுக்கு புருஷோத்தமன் தாஸ் டாண்டன் தலைவராக இருந்தார். குறைந்தது 20, 30 வருஷங்களுக்கு ஆங்கிலம் பொது பாஷையாக இருக்க வேண்டு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மென்று தென்னிந்திய, வங்காளப் பிரதிநிதிகள் வாதாடினர். இப்பிரச்சினையில் ஜவஹர் லால் நேரு மிகவும் பரந்த நோக்கத்துடன் சமரசம் செய்ய முயற்சி செய்து வந்தார். எல்லா முக்கிய பாஷைகளையும் ஏற்று ஒரு அட்டவணை செய்து அரசியல் திட்டத்தின் அங்கமாக்க வேண்டுமென்றும், அந்தந்தப் பிரதேசம் தனது முக்கிய மொழிகளைப் பிரதேச பாஷையாக உபயோகிக்கலாமென்றும், ஹிந்தி மத்திய அர்சாங்க மொழியாகக் கருதப்பட்டு பதினைந்து வருஷத்திற்குப் பிறகு பூரணமாக அமுல் செய்யப்பட வேண்டு மென்றும் தீர்மானம் ஆனது.

ஒரு சிறிய பிரச்சனையில் பெரும் விவாதமுண்டாயிற்று. எண்கள் எம் முறையில் எழுதப்பட வேண்டும்? ஹிந்தி முறையில் எழுதப்பட வேண்டுமென்றனர் ஹிந்திப்பிடிவாத கோஷ்டியர்கள். உலகெங்கும் உபயோகிக்கப்படும் ரோமன் முறையை ஏற்க வேண்டு மென்றும், 'இது முதலில் இந்திய முறையாக இருந்தது. பின் அரேபியா வழியாக ஐரோப்பா சென்று ஆதிக்கம் பெற்றதென்று'ம், விவாதித்தோம். எண்களைப் பிரதேச பாஷைகளில் எழுதுவதால் வியாபாரம், பாங்குகள் இன்சூரன்ஸ் போன்றவற்றில் குழப்பமும் கஷ்டமும் உண்டாகும் என்பதால் பாஷை என்னவாக இருப்பினும் எண்களை மட்டும் சர்வதேச முறையிலேயே எழுத வேண்டுமென்றும் உறுதியாகக் கூறினோம். இதற்கு நான் முக்கிய பிரசாரகனாக இருந்தேன். ' பின்னர் கோபால சுவாமி அய்யங்கார் எங்கள்கோஷ்டியின் தலைவரானார். பிரதம மந்திரியும் ஆதரித்தார். எங்கள் யோசனை ஏற்றுக் கொள்ளப்பட்டது. புருஷோத்தம் தாஸ் டாண்டனுக்கும் அவருடைய சகாக்களுக்கும் எல்லை மீறிய கோபம் உண்டாயிற்று. சுமார் மூன்று வருஷங்கள் அளவில்லாத பொறுமையுடன் நிர்ணய சபை நடத்தி, காரியத்தைப் பூர்த்தி செய்த பெருமை அதன் தலைவர் ராஜேந்திரப்பிரசாத்தைச் சாரும். 1949ல் திட்டம் பூர்த்தியாகி எல்லாரும் கையெழுத்திட்டோம். 1950ம் வருஷம் ஜனவரி 26ம் தேதி, அதை அமுல் செய்யும் நாளாகக் குறிக்கப் பட்டது. முடிவான பிரதியில் கையெழுத்து இட்ட போது வால்மீகி ராமாயணத்தில், விசுவாமித்திரரைக் கண்டு தசரதர் கூறிய வாக்கியம் நினைவிற்கு வந்தது. இன்று என் பிறப்பு பலன் பெற்றது. வாழ்க்கை சிறந்தது என்று எண்ணினேன்.

**ஜூன் மாதக் கணையாழிக் கவிதைக் கூட்டம் 17-6-95 மூன்றாம் சனிக் கிழமை மாலை ஆறு மணி அளவில் கணையாழி அலுவலகத்தில் நடைபெறும்.**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வனசாட்சி

யூமா. வாஸுகி



வானம் பாதி விழிகள் மூடிய கிறக்கத்தின் உபரி வெளிச்சம் தன் வெளிர் சாம்பல் சருமத்திற்குள் சூழலைத் திணித்திருந்தது. சதுரக் காகிதத்தின் ஒரு முனையில் மட்டும் தொட்டு எழுகின்ற ச்வாலை போல அந்தரத்தில் நிலைத்திருந்தது பெருஞ்சுடரின் கூர்மை. ஒளிப் புள்ளி களைக் கணக்கற்று பிறப்பித்து, மாயைக்குள்ளாக எறிந்து கொண்டி ருந்த துளை, அமானுடக் கருவிலிருந் தது. சப்தங்கள் மாய்திருந்தன. அந்த ஜனக் கூட்டத்திற்கு முன்னே நீளும் ராஜபாட்டையின் முடிவில் ஸ்திர இருக்கையிலிருந்தது இலக்கு. தலையசைத்த கட்டளையால் அழைத்தது. எவற்றாலும் வரையறுக்கப்பட்டு விடாதபடி மாற்றங்கள் தொடர்ந்த முகம். தோற்றங்கள் எதுவாயினும் தனக்குத்தானே, செதுக்கிக் கொண்ட ஒரே பாவனை... தாகம். மற்றொன்று, இன்னும் ஒன்று. மீண்டும் உயிர். அதன் ஆயுதத்தின் கால்பகுதியும் உயிர் நிரம்பவில்லை. ஏராளமாய் மீதமிருந்த இடத்திற் காக ஜனக்கூட்டம் அசைந்து முன்னேகியது.

சவ லட்சணம் மெழுகிட்ட திரள் முகங்கள் நிதானமாய் நகர்ந்தன. அவற்றின் மருட்சியான முறுவலிப்பு, நிகழும் இறுதிக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கணங்களைப் பற்றிய நிஜத்தில் மனந்திரிந்து போனதை வெளியாக்கிற்று.

அறிந்தது முதல் அனுபவித்த காலத்தின் பழைய செதில்களுள் ஒன்றைத் தேர்ந்து கடைசியாக புதுப்பித்துக் கொள்ள விரும்பினார்கள். காலடியில் மிதிபட்ட பிணங்களின் சிதைந்த உறுப்புகள் முயற்சிகளைத் தடுத்தன. தவறித் தோன்றிய ஒன்றிரண்டு நினைவுகளும் அது நடந்த காலத்தின் பரவசத்தை நிரூபிக்கும் வலுவற்றுத் தொய்வடைந்திருந்தன. நிராகரிக்கப்பட்ட தளர்ந்த உடல்கள் தெருவின் உதிரத் தேமல்களின் மேல் கால் படாத கவனத்தோடு சென்று கொண்டிருந்தன. தப்பிக்கின்ற வாய்ப்பு வைத்திருந்த மற்ற திசைக் கூறுகளை, இலக்கு, புகை நூற்கின்ற தன் சிலந்தியைக் கொண்டு மறைத்திருந்தது புகைத் திரையால். மரணித்துக் கிடந்த உடல்களைக்கடந்து இலக்கடையும் தூரம் வரைதான் இருப்பிலிருந்த வாழ்க்கை. ஒருவர் தீர்ந்த கணமே வரிசையின் முடிவு வரையும் அதன் அதிர்வு நீண்டது. முன்னே செல்பவர்களோடு இடித்துக் கொள்ளாமலிருக்க பின் தங்கி நடந்தார்களே தவிர எவருக்கும் தயக்கமில்லை. ஏனெனில் இலக்கின் அழைப்புக் கட்டளையானது, அவர்களின் உணர்வாழத்தில் நின்று, அனுமதிக்கப்பட்ட வழியைச் சுட்டியது.

அவர்களோடுதான், அவர்களில் ஒருவனாக அவர்களைப் போலவே அவனும் நடந்து கொண்டிருந்தான். வழி தவறி இவர்களோடு இணைந்தவன். புதிர்களையும், பயங்கரங்களையும் சுவைக்கக் கற்று விழியிற் தெரிந்தது அனுபவச் சுமை. தேசங்கள் தன் மேன்மையை இவனிடத்திலே இறைஞ்சக் கூடும். இவன் மரம் வரைபவன். பறவைக் கூடுகளின் எளிமையால் நெய்யப்பட்டிருந்தது இவனுடைய ஆன்மா. தொலைவான இருட்கானகங்களின் மரங்களூடாக சலசலத்தோடிய காற்று, அவனைத் தேடிக் காணாமல் சலிப்புற்று, ஏக்கமாய் அருவிச் சாரலோடு கலந்து மலையுச்சிக்குப் போனது. காற்றுப்போக்கில் உராய்ந்து அவன் அண்மைக்காக முனகியது, தன் உள்ளீடற்ற உடம்பில் அவன் பெயரை நிறைத்த மூங்கில். சாலைகளின், கட்டிடங்களின் மேலாகப் பறந்து, அவனது வரவுகாகக் காத்திருந்தன இருப்பிடங்களைக் கைவிட்ட பறவைகள். அவைகளின் பார்வைக்கும், ராஜபாட்டையை மறைத்திருந்தது சிலந்தியின் திரை. மையமிழந்து சோம்பின தாவரங்கள். மரங்களின் ஆராதனைக்கென்ற ஒரே சாதனமாய் தூரிகையிருந்தது. தூரிகையின் இழைக் குச்சங்கள் எப்போது இயக்கப்படுமோ அப்போதெல்லாம் அவனது கித்தான்களில் பெயர்ந்து வாழ்வதற்கு ஆயத்தமாக இருந்தன எல்லாமும்.

அருகில் வந்தவர்களோடு, நட்புத் தன்மையான பேச்சைத் தொடங்குவதற்கும் தடையாயிருந்தது ஒளிப்புள்ளிகள். இறப்பு நோக்கிய ஈர்ப்பு சிந்தனையுள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

புகாது கொஞ்ச நேரம் நீடித்தது சுதந்திர உணர்வு. மிகு தூரத்தில், கண் தெரியாத இடங்களில் புஷ்பிக்கும்மலர்களின் வாசனையை, இருப்பிலேயே நுகரும் புலன் மேய்ந்தது பச்சை உதிர வாடையை.

சமரசம் அல்லது உடன் படிக்கை ஏற்பட்டுவிடக் கூடுமென்ற அச்சம்புரிய ஆரம்பித்தது. அவனது ஒரு தலைதாழ்ந்த வணக்கம் மீட்சிக்கான அமரத்துவச் செய்தி களின் பிரகடனத்தை முறியடிக்கும். வளையக் கூடாதவனாய் பிறப்பித் திருந்தது இயற்கை. முதன் முதலாக தப்பித்தலின் அவசியம் ஆளுமை அற்ற மார்க்கங்களின் பால் உறிஞ்ச முயன்றது. ஒரு சாவு நடந்த அடுத்த வினாடி அனைவருக்கும் ஏற்பட்ட திடுக்கிடல், நடுக்கம் அவனையும் தொற்றியது.

மரம் வரைபவன் நெருங்கிக் கொண்டிருக்கிறான். சமீபத்தி லிருக்கிறது இலக்கு. பலி வேட்கை யில் விரிந்து மின்னும் விழிகள்.. ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமான மரணம். சிரம் துண்டிக் கப்பட்டு- அவயங்கள் சிதைக்கப் பட்டு- வெறுமனே நின்ற இடத்தி லேயே உயிரற்று விழச்செய்து நடந்தேறியது. இலக்கு ஒருவனது தொண்டைக்குள் தன் நாவைச் செலுத்த அது நீண்டு உள்ளிறங்கி, குடலையும், பிறவற்றையும் தன் சுழற்சியால் அறுத்தது. மூன்றாவதா கவோ அல்லது நான்காவது ஆளாகவோ இலக்கின் தரிசனத் திற்குட்படப் போகிறான் வரைபவன்.

வேர்களின் விசித்திர முடிச்சுகளையும், மரப்பட்டை பிளவுகளிடையே கசிகின்ற திரவத் தையும், கிளைகளின் தேடல் பாஷையையும் உள்ளடக்கிய அற்புதங்களின் பட்டியல் கிழிபடப் போவதற்கு முன்னதாக ஒரு முறை நிமிர்ந்ததில் கழன்று விழுந்தது அச்சம். அந்த நிமிடத்தில் மகிமைக்குப் புறம்பான விஷயங்கள் எல்லாருடைய மனங்களிலிருந்தும் சில நொடிகள் விலகி நின்று திரும்பவும் இணைந்து கொண்டன. இயற்கை நிலைப்பின் ரூபங்களிட மிருந்து உருவகிக்கப்பட்ட தீர்க்க தரிசனமிக்க ஆறுதல், பின் நடப்புகளை மரம் வரைபவனிடம் கட்டி முடித்தது.

ஒவ்வொரு பலி முடிந்த பிறகும் முன்னிலும் அதிகமான சக்தியைக் கொண்டது இலக்கு. அடுத்ததை தலையிலிருந்து இடுப்பு வரை சரிபாதியாகப் பிளப்பதென்ற முடிவு. மேலோங்கிய ஆயுதம், உயர்ந்த நிலையிலேயே உறைந்தது. இறுகிய கண்ணாடிக் குழம்பா இருந்த இலக்கின் சிந்தனையுள் புழு ஒன்று ஜனித்து அதன் நெளிவுகளில் ஏற்பட்ட சன்ன விரிசல்கள் எதிர் நின்ற வரைபவனுக்கு யூகமானது. இலக்கு ஆயுதத்தைத் தாழ்த்தியது. இடது கையை உயர்த்தி, விரித்த விரல்களின் முனைகளில் இது காறும் சப்தங்களை விழுங்கிக் கொண்டிருந்த ஒளிப்புள்ளிகள் ஒட்டிக்கொண்டன. இப்போது தான் ஓசை பிறந்தது.

'யார் நீ?

அவனைப்பற்றியும், அவன் சார்ந்தவைகளைப் பற்றியும் சொல்லத் தகுதியான 'வார்த்தை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

களை ஆராய்ந்து களைப்படைந்தான். சம்பிரதாயமாக்கப்பட்ட வார்த்தைகளின் மீது ஏற்பட்ட அவநம்பிக்கை, வினயமற்ற மோனத்தைக் கொடுத்தது. பதிலுக்கென நீளும் அவகாசத்தை இடைமுறித்துச் சொன்னது இலக்கு.

'போகலாம் நீ... வழிபாட்டுக்குரியவர்களை நான் கொல்வதில்லை'.

அவன் புன்னகை தடவிய உதடுகளோடு ஏறிட்டுப் பார்த்தான். கண்ணாடிக் குழம்பின் விரிசல்களுக்கிடையில் புழு இப்போது ஆழமான கீறலொன்றை உண்டு செய்திருப்பலத விளங்கி, இலக்கைக் கடந்து மெதுவாக நடக்கத் தொடங்கினான். மீண்டும் வெளியில் தவழ்ந்தன ஒளிப் புள்ளிகள். அடுத்த பலியிலிருந்து தெறித்த ரத்தம், வரைபவனின் பிடறியில் பட்டு வழிந்தது.


கவிழ்ந்திருந்த புகை ஓடு பிரிந்து மெதுவாக எங்கும் துலக்கமாகிக் கொண்டிருந்த போது எதிர்ப்பட்ட முதலாவது குடிசைக்குள் நுழைந்தான். யாருமற்ற உள்ளிடத்தில் புனிதமும், தூய்மையுமான மணம் விரவி இருந்தது. அதன் கவர்ச்சியான மயக்கம் மனுஷிக அனுபவங்களுக்கு அப்பாற்பட்ட பேருணர்வை பிரத்யக்ஷப்படுத்தியது. அவயங்களின் இணைப்புகளெல்லாம் வியப்பின் கணுக்களாக்கி வரைபவன் நின்று கொண்டிருந்தான். உடன், உடை மடிப்பிலிருந்து உதிர்ந்த ஒளிப்புள்ளி ஒன்றிலிருந்து அதையொத்த பல நூறு புள்ளிகள் பெருகிச் சுழன்றன. குடிசையின் சுவர், கடல் திரவம் போலாயிருந்தது. குளிர் மென்மையின் நீல நிற விசாலத்தினூடே புலப்பட்டுக் கொண்டிருந்தது பெண்ணுருவம். தோன்றிக் கொண்டிருக்கையிலேயே அவள் உடல் நெளிவுகளில் பீறிட்ட நவயௌவன வசீகரம் அவன் நினைவுகளை முற்றுமாய்க் கைப்பற்றியது. உருவம் பூர்த்தியாகும் கட்டத்தை நெருங்கிக் கொண்டிருக்கையில் அவள் இமைத்தாள். அந்த மோகனச் சிமிட்டலுக்கு வயப்பட்டு ஓரடி முன்நகர்ந்து அவளை ஏந்திக் கொள்ளத் தயாராயிருந்தான். கடைசியாக புருவமும், உதட்டின் வரிகளும் துல்லியமடைந்த பின்னர் அவள் முழுமையான வடிவெடுத்து அவனின் அனுஷ்டானத்திற்குத் தன்னைச் சமர்ப்பித்து நின்றாள்.

ஒன்றினது மற்றொன்றின் ஆளுகையென இரு பிழம்புகளின் ஆவேசக் கலப்பில் தோன்றிய சிரேஷ்டக் கிரணங்கள், குடிலெங்கும் தெய்வ சஞ்சாரத்தின் அடையாளங்களைச் சம்பவித்தன. உடல் அதிர்வுகளில் பூத்தெளிப்பாய் ஆன்மா சிலிர்த்து விழித்தது. முயக்கத் தொடர் அலையின் எழுச்சி, துளைத்துச் சென்றது சகல தப்பிதங்களையும். உடல்கள் குழைந்தன. இறுகின. நெட்டுயிர்த்தன. பாதாளத்திற்கும் சிகரத்திற்குமான ஊசலாட்டம். காம பரிபாலனத்தை நடத்திச் சென்ற இச்சையின் நிவர்த்தி. தொலைவே நின்று கொண்டு, வண்ணப் பதாதைகளை வீசி நர்த்தனமாடியது. வேகமான



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




மூச்சுக் காற்று, மலைகளில் தூர்ந்து கிடந்த நீர்ச்சுனைகளை எழுப்பி பொங்கச் செய்தது. கரங்களின் வலுவான ஸ்பரிசத்தேடுதலில் கரை உடைந்து எட்டிய இடத்தில் பாய்ந்தது மகிழ்வு. சூன்யத்தில் நிர்ணயமான வாயில்களிடையில் அடங்கியும், ஆர்ப்பரித்தும் மென் துகிலொன்று இரண்டுடற் கலந்த மாம்ச வாசனையியற்றி களிப்பில் மிதந்தது.


பிணை நிறுத்தி புணரச் செய்து போன யதார்த்தம் திரும்புகையில், சொப்பன உலகு, தன் அளப்பரிய விரிவைச் சுருக்கி மறையும் தருணம் நெருங்கிக் கொண்டிருந்த போது, ஏக காலத்தில் பனி உருக தீவிரங் குறைந்தது அக்னியும். களைப் படைந்து சயனித்தவளின் விலாப் புறங்களில் சிறகுகள் முளைக்கத் தொடங்கின. சிறகுகள் முழு வளர்ச்சி அடைந்த பின் பறந்து போக எத்தனித்த அவளைப் பற்றியிழுத்து இறுதியாக இமைகளில் முத்தமிட்டான் மரம் வரை பவுன். அவள் இமைரோமங்களில் சில, அவன் உதடுகளோடு தங்கியது. அவளின் குழந்தைச் சுவாச மணத்தை ஆழநுகர்ந்து இதயத்தில் பத்திரப்படுத்திக் கொண்ட பின் குடிலின் கதவைத் திறந்தான். வெளியே முன் பார்த்த எதுவுமின்றி செழிப்பின் ஜீவனோடு சூரியனைக் கலந்து, ஆரவாரமாய்க் குலுங்கி அவனை வரவேற்றது பெருங் கானகம். வனங்களின் சாட்சியான வன் திரும்பவும் காட்டிலேயே தன் உலவுதலைத் தொடங்கினான். காப்பிலிருந்த அவளின் இமை ரோமங்கள், இலை நரம்புகளின் நுட்பத்தைச் சொல்வதற்கு ஒரு தூரிகைப்பொருளாக உதவக்கூடும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இதம் தரும் மனை நீங்கி



கண்ணன் மகேஷ்

www.tamilarangam.net

# தி.ஜா. நினைவு குறு நாவல்



சம்பத் தபால் பிரிவிலிருந்து திரும்பிய போது அவன் முகம் வாடியிருந்தது. 'பதவி உயர்வு கொடுத்து சேலத்தில் போட்டு விட்டானே! ஹாட்டஸ்ட் ப்ளேஸ் இன் தமிழ் நாடு...டி.வி.யில் தினமும் வெதர் ரிப்போர்ட் காட்டறானே. பாவம்...'என்று ஆளுக்கு ஆள் கேட்டார்கள். புதவி உயர்வு என்று வரும் போது மகிழ முடியாமல் குடும்பத்தைப் பிரியும் வருத்தத்தையும் கொடுத்து விடுகிறார்களே...

'வாழ்த்துக்கள். சேலத்திலிருந்து மாம் பழம் வாங்கி வாங்க... நடுச்சாலை மாம்பழம்னு கேளுங்க'

'சேலம் தியாசபிஃகல் சொசைட்டில நிறைய மீட்டிங் நடக்கும் நல்லாப் பொழுது போகும்'.

'நிறைய சினிமாத் தியேட்டர் இருக்குது.தினம் ஒரு சினிமாப்பாக்கலாம்'.

'கந்தாஸ்ரமம் போயிட்டு வாங்க... குடும்பத்தைக் கூட்டிக் கிட்டு ஏற்காடு, திருச்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

செங்கோடு, கொல்லி மலை, ஒகேனக்கல், போகலாம். பெங்களூரும் கிட்ட...'

'சேலம் போறதா முடிவு பண்ணிட்டீங்களா சார்?' என்றான் குப்பன்.

'என்ன பண்றது குப்பா?'

'சென்னையிலயே போடச் சொல்லிக் கேட்போம்...'

'குடுப்பானா?'

'ஒரு முயற்சி தானே... அப்ளிக்கேஷன் கொடுங்க. சுறுசுறுப்பா எழுந்திருங்க... சீட்லயே இருந்தா, ஆளுக்காள் வந்து துக்கம் விசாரிச்சுக்கிட்டுத்தான் இருப்பாங்க...'

ஆபீஸ் வாசலிலேயே ஒர் ஆட்டோ பிடித்தனர். சென்ற வேகத்திலேயே திரும்பினர்.

'Do You want to forego your promotion?' என்று அந்த இலாக அய்.ஏ.எஸ் அதிகாரி சீறியதில் இவர்கள் ஓடி வந்து விட்டனர். போட்ட ஆர்டரை மதித்து ஒரு நாலு மாதமாவது அங்கே போய் வேலை செய்யணுமாம்...

சம்பத்தின் அருகில் அமர்ந்த கலைவாணி சொன்னாள்... 'எனக்குத் தான் உங்களைப் பிரியறதில உண்மையிலயே வருத்தம்...I will be missing you sir...I will be missing you ...'

கலைவாணி குட்டை கட்டையாக கண்ணுக்கு ரம்யம்...காது ஜிமிக்கி ஆட, கண்களைச் சிமிட்டி வரிசைப்பற்களைக் காட்டி... சிலர் இதே காம்பவுண்டில் லவ் லெட்டர் கொடுத்து அவள் கிழித்துப் போட்டதிலோ செருப்பைக் கழற்றியதிலோ மனம் உடைந்திருக்கிறார்கள்.

> **சம்பத் மீது வெகு காலமாக அவளுக்கு எரிச்சல்... பார்க்கும் எவரையும், தான் எழுதும் கதைகளில் கொண்டு வந்து விடுவான் சம்பத்...அது குறித்து அவன் மீது எல்லார்க்கும் ஒரு பயம்உண்டு. முன்பு 'மோதிரம்' பத்திரிகையில் இவன் எழுதிய 'ஆந்தை சிரித்தது' குறு நாவலில், டெல்லி எருமை போன்ற திடகாத்திரப்பெண் வர்ணனை அவளைப் பற்றியது தான் என்று அவளுக்குக் கோபம்...**

குப்பன் சொன்ன சரித்திர லிஸ்டில் இவளும் உண்டு. லட்சுமி நாராயணனின் உதவியாளி சம்பத் குறித்து 'பாவம்' என்றாள்...சம்பத் மீது வெகு காலமாக அவளுக்கு எரிச்சல்...பார்க்கும் எவரையும், எந்த சம்பவத்தையும் தான் எழுதும் கதைகளில் கொண்டு வந்து விடுவான் சம்பத்...அது குறித்து அவன் மீது எல்லார்க்கும் ஒரு பயம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உண்டு. பன்னிரண்டு ஆண்டுகள் முன்பு 'மோதிரம்' பத்திரிகையில் இவன் எழுதிய 'ஆந்தை சிரித்தது' குறு நாவலில், டெல்லி எருமை போன்ற திடகாத்திரப்பெண் வர்ணனை அவளைப் பற்றியது தான் என்று அவளுக்குக் கோபம்...

கலைவாணி போனதும் பிரேம் ராஜ் வந்து ஸ்டூலில் அமர்ந்தான்.. பெரும்பாலும் தன் இருக்கையில் இருக்க மாட்டான். வேலை தெரியாது. கற்றுக் கொள்ளும் ஆர்வமும் கிடையாது. வயதில், பதவியில், பெரியவர்களை ஒட்டிக் கொண்டு 'அண்ணா அண்ணா' என்று ஒப்பேத்தி விடுவான். வயதில் சிறியவர் என்றால் 'கண்ணா..' இந்த 'அண்ணா கண்ணா' என்ற இரு வார்த்தைகளில் அவன் உலகத்தையே வசப்படுத்தி விடுவான்...

'நீங்க மேட்னி நடத்துவது உண்டா அண்ணா?' என்றான்.

'ஏய் என்ன நீ திடீர்னு எங்கையோ போயிட்ட? இந்த மத்யான உக்கிர வேலையில், இது என்னக் கேள்வி...?'

'சும்மாச் சொல்லுங்க...'

'கிடையாதுப்பா...'

'இனிப் பிரச்சினையே இல்ல. சேலம் போயிட்டு இல்ல வரீங்க... நீங்க எப்பக் கூப்பிட்டாலும் மன்னி ஒக்கேதான்...'

'அனுபவம் பேசுகிறது...' கோவையில் ஒரு வருடம் பணி புரிய நேர்ந்த போது துடித்துப் போய் விட்டானாம்...

'இப்போதாவது இரண்டு நாள் லீவு. அப்போது ஞாயிறு மட்டும். சனி இரவு முழுவதும் பஸ் பயணம். விடியற் காலையில் சென்னை சேர்ந்து மனைவி வாசக் கதவைத் திறந்தாளோ இல்லியோ கட்டிப் பிடிப்பேன்...'

'ச்சீ...சனியன் பிடிச்சவனே. ஊத்த வாயோடயா?'

'ஊஹூம் அதெல்லாம் பார்க்கிறது இல்ல...'

'இவனுக்கு ஏன் சார் வழுக்கையும் தொப்பையும் விழாது' என்றான் மாதவன்..

******

'ஏம்பா சேலத்துல போட்டான்.. இங்கியே குடுன்னு கேட்க வேண்டியது தானே? ஏன் மெட்ராஸ்ல தர மாட்டேங்கிறான். அவம் மட்டும் இங்கயே வேலை பாக்கறானே...'மகன் முரளியின் கண்களில் கண்ணீர்...

'என்ன ஆப்பீஸர். ப்ரமோஷனோ... அலைஞ்சீங்கல்ல... நல்லாப் படுங்க... அழகா இங்கியே சூப்ரண்டாகவே இருக்கலாம்...' என்றாள் மனைவி.

'அதுக்குத்தான் பரீட்சை பாஸ் பண்ணாதீங்கன்னேன் கேட்டீங்களா...'என்றான் பிள்ளை.

'ஆனா சேலம் நல்ல ஊருதான். மனுஷங்க நல்லவங்கதான்...' என்றான் மைத்துனன்.

சேலத்தில் சம்பத்திற்கு உறவினர்களோ, நண்பர்களோ யாரும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இல்லை. சேலம் போய்ப் பார்த்துக் கொள்ளலாம் என்று திட்டம் ஏதும் இல்லாமல் புறப்பட்டான். ஒரு சூட்கேஸ்...ப்ரீஃப்கேஸ்...தோளில் தொங்கும் ஜோல்னாப்பை...பையில் நீள பாட்டில்...கைலி...ரீடர்ஸ் டைஜஸ்ட்.

சென்ட்ரலுக்கு வந்தான்... ஏற்காடு எக்ஸ்பிரஸ் எந்த பிளாட்பார்ம் என்று பார்த்து அந்த பிளாட்பார்மிற்கு வந்தான். குழாயில் நீர் பிடித்தான். பின்னால் ஒரு கனைப்பு...

'எங்கே பயணமோ ?'

ராமு நின்றார்...



இவன் தணிக்கைப் பிரிவில் சூப்பிரண்டு. அவர் நிர்வாகப் பிரிவின் பல கண்காணிப்பாளர்களில் ஒருவர். ராமு சங்கிலிப் புகையர்...வெள்ளை வேட்டி வெள்ளை முழுக்கைச் சட்டை. ஒல்லி உயரம். முழுமையாக நரைத்த கிராப்... நெற்றியில் ஒற்றைத் திருசூர்ணம்...மீசை கிடையாது...ராமு 'குடியரு'ம் கூட. ஒரு பகற் பொழுதில், கமிஷனர், ஆபீஸ் ரவுண்ட்ஸ் வந்தபோது, இவர் மேல் மாடியில் துண்டை விரித்து ஆனந்த நித்திரையில் இருந்தார். சாராய வீச்சம் வேறு... சேலத்திற்கு மாற்றப்பட்டார். இரண்டு வருடங்களாக சேலத்தில் தான்.

'ஒரு மாசம் லீவு போட்டேன். சென்னைக்கு மாற்றல் கேட்டேன். தரவில்லை... சேலம் தான் போறேன்...'

ரயில் வரும் வரையில் பேசிக் கொண்டிருந்தார் ராமு. அவருக்கு வேறு கம்பார்ட்மெண்ட். 'காலையில் சேலத்தில் சந்திப்போம்' என்று பிரிந்து சென்றார். இவர்களின் பெட்டி, கடைசியாகவும் பெர்த்ஸ் முதலில் ஆரம்பிப்பதாகவும் இருந்ததில், ஏறி வரும் வாசல் கதவு அருகிலேயே இருந்தது. பொதுவாக இம்மாதிரி ரிஸர்வ்டு கம்பார்ட்மெண்டகளில் டிக்கெட் பரிசோதகர் ஏறி கதவைத் தாழ் போட்டு விடுவார். இங்கே அப்படி ஒரு கறுப்புக் கோட்டு ஆசாமியும் ஏறவில்லை. கதவு திறந்தே கிடந்தது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கதவருகே ஒரு காக்கிச் சட்டைக் காரன் நின்றிருந்தான். இரவு பன்னிரண்டு மணிக்கு ஜோலார் பேட்டையில் ரயில் நின்றதும் காக்கிச் சட்டை அவசரமாக முன்னேறி வந்து, லோயர் பெர்த் அருகே குனிந்து நிமிர்ந்து, சட்டென்று காணாமல் போனான்.

'அய்யய்யோ...அவன் எதையே எடுத்துக்கிட்டு ஓடறான் பாருங்க...' மிடில் பெர்த் மிஸஸ் பட்டை நாமம் அலறினாள்.

இன்னொரு மேல் பெர்த் ஆசாமி சரசரவென்று கீழிறங்கினார். 'அய்ய்யே... போச்சே என்னோட நூத்தி அம்பது ரூபா செருப்பு. நேத்து தான் வாங்கினேன்.'

சம்பத்தும் கீழிறங்கிப் பார்த்தான். நல்ல வேளையாக அவனின் பழைய செருப்பிற்கு ஆபத்தில்லை. செருப்பை மாட்டிக் கொண்டு கதவருகே சென்று பார்த்தான். ஜோலார்பேட்டை என்கிற பெயர் பலகை அருகே இவர்களின் கம்பார்ட்மெண்ட்... ப்ளாட்பார இறுதி...சில் வண்டுகள் சத்தம்.... இருட்டு.

சேலம் பயணத்தில் முதல் பாடம்...

ரயில் ஜோலார் பேட்டை தாண்டும் வரை தூங்கக் கூடாது..

சேலத்தில் சுரங்கப்பாதை அருகில் ராமு சிகரெட் குடித்த படி நின்றார்.

'போவோமா?'

சப்வேயில் இறங்குகையில் சம்பத் கேட்டான்...'ராத்திரி கேக்க மறந்து போனேன் ...எங்கே தங்கியிருக்கீங்க..?'

'கவர்மெண்டுல பெரிய மாளிகையாப் பாத்துக் குடுத்திருக் கான்..நீங்களும் வந்து தங்கிக்குங்க'.

'பக்கத்துல தான் உங்க ஆடிட் ஆபீஸ்..போறீங்களா?'

'இவ்வளவு காலைல ஆபீஸ்ல யார் இருப்பாங்க...நான் உங்க ஆபீஸுக்கே வந்துடறேன்...'

******

'வாங்க... வணக்கம்...'

'லீவு முடிஞ்சுதா?'

'இன்னிக்கு வருவீங்கன்னு எதிர்பார்த்திருக்கிறோம்...கூட ஹெட் ஆபீஸ் சூப்பிரண்டையும் கூட்டிட்டு வந்திருக்கீங்க?'

'இவரு இனி சூப்பிரண்டு இல்ல. அதிகாரியா ஜாயின் பண்ண வந்திருக்கிறார்.'

'வெல்கம் டு சேலம்...'

'சரி சம்பத் ஷேவ் பண்ணிக் குளிச்சிட்டு வாங்க...அதுக்குள்ள நான் போய் எங்க ஆபீஸ் தலைவரைப் போய்ப் பாத்திட்டு வந்திடறேன். ஒரு மாசமா நான் லீவு இல்லியா...' கையில் இன்னொரு சிகரெட் ஏறியது...

சம்பத் குளித்து முடித்துவிட்டு வந்த போது மேசை மீது சில பொட்டலங்கள் இருந்தன.

'பக்கத்து மெஸ் இட்லி. சுமாரா இருக்கும். சாப்பிட்டு வையுங்க' என்றார் ராமு. ஏதோ பைலைப் பார்த்த படியே..



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


ஓவியம், குறுநாவல், நாடகம் உள்ளிட்ட, தமிழின் சகல படைப்பிலக்கியத்துறைகளைத் தொட்டு உருவாகும் ஓர் இலக்கியத்தொகுப்புக்காக, தங்களின் நல்ல படைப்புக்கள் அறியப்படவில்லை என்று கருதும் தகுதி வாய்ந்த படைப்பாளிகளிடமிருந்து ஆகச் சிறந்த படைப்புகள் வரவேற்கப்படுகின்றன.

முடிவுத் தேதி–30–08–1995.

முகவரி

ராஜகோபாலன்

2, தொல்காப்பியர் தெரு

ஸ்ரீநிவாஸா நகர் அஞ்சல்

பெருங்களத்தூர்

சென்னை–600 063.


அப்போதும் கையில் சிகரெட் இருந்தது.

'நீங்களும் குளிச்சிட்டு வாங்க'

'ரைட்டோ....'என்று எழுந்தார்.

ராமுவிடம் பஸ் நம்பரைக் கேட்டு சரியான பஸ்ஸில் ஏறினான். பஸ்ஸை விட்டு இறங்கி அந்த அலுவலகத்தைக் கண்டு பிடித்த போது ஆபீஸ் வாசலில் ஒரு கார், ஏழெட்டு ஜீப் நின்றன.... வாசற்படி தாண்டியதுமே ஒருத்தி கறுப்பாக ஒல்லியாக டைப்ரைட்டர் எதிரே அமர்ந்திருந்தாள்.

அவள் மேசை மீது டெலி போனும் இருந்தது. சம்பத் அவளுக்கு குட்மார்னிங் போட்டான்.

'ஜாயின் டைரக்டர் இருக்காரா?'

'இருக்காருங்க...முதல்ல நீங்க எஸ்டாபிளிஷ்மெண்ட் சூப்பிரண் டைப் பாருங்க..'

'எஸ்டாப்ளிஷ்மெண்ட் சூப்ரண்டுக்கு என் வணக்கம். நான் அதிகாரி. இங்க ஜாயின் பண்ண வந்திருக்கேன்...'

குங்குமப் பொட்டு முகம் ஆச்சரியத்துடன் நிமிர்ந்தது. 'அப்படியா.. எங்களுக்கு இன்னும் ஆர்டர்ஸ் வரல்லியே... உட்காருங்க...'

ஸ்டூலில் அமர்ந்து தன்னிடமிருந்த நகலைக் காண்பித்தான். சூப்பிரண்டு அதைப் படிக்கையில் எதிர் சீட் இளைஞன் எழுந்து அருகில் வந்தான். 'சார் நீங்க அதிகாரி...ஸ்டூல்ல உட்காரக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கூடாது....இப்படி நாற்காலில உட்காருங்க...'

'பரவாயில்ல...நான் அப்படி ப்ரஸ்டீஜ் பார்க்கிறவன் இல்ல...'.

பக்கத்து அறையில் இருந்து நான்குபேர் வந்தனர். ' நீங்க ஜே.டி யைப் பாருங்க...!' என்றார் எஸ்டாப்ளிஷ்மெண்ட் சூப்பிரண்டு.

அந்த அறையின் உட்புறம் பதினைந்து இருபது நாற்காலிகள் போடப்பட்டிருந்தன. மகா குண்டு ஆசாமி ஒருவர் நாற்காலியில் சிகரெட் பிடித்தபடி...

சம்பத் தன்னை அறிமுகப் படுத்திக் கொண்டதும் மணி அடித்து, 'வாதி ராஜன்...!'

எஸ்டாப்ளிஷ்மெண்ட் சூப்ரண்டு உள் நுழைந்து, ' இவரோட ஆர்டர் நமக்கு இன்னும் வரல்லை... ஆனாலும் பரவாயில்லை..இவர் கைல இருக்கிற ஆர்ட்ரை பேஸ் பண்ணி நாம அனுமதிக்கலாம்.'

அப்போது ஸ்டெனோ அம்புஜம் வந்து, 'சார் ஹெட் ஆபீஸ்லருந்து போன்...டைரக்டர் ஈஸ் ஆன் த லைன்....' என்றாள்.

'ஜாயிண்ட் டைரக்டர் பரபரப் பானார். ப்யூன் வாசலிலிருந்து ஒயர் இழுத்து டெலிபோனைக் கொண்டு வந்து அவர் மேசை மீது வைத்தான்.

போன் பேசி முடித்த ஜே.டி, 'யப்பா மினிஸ்டர் வர்றாராம்... கூடவே டைரக்டரும். அவங்களை வரவேற்க வேண்டிய ஏற்பாடு களைச் செய்யணும்...சபரியை வரச் சொல்லு..கார் டிரைவரை ரெடி யாகச் சொல்லு...'என்றார். போன், ஒயருடன் வாசலுக்குக் கொண்டு செல்லப்பட்டது. மறுபடி சிகரெட் பற்ற வைத்தார்.

'மினிஸ்டர்ன்ன ஒடனே பதட்டத்துல சிகரெட் அணைஞ்சு போச்சுய்யா...நாலு டீ சொல்லு.. அப்பறம் நீங்க யாருங்க மிஸ்டர்...?'

'நான் அதிகாரி...'

'சரி. இந்த ஆபீஸ்ல எவ்வளவு காலம் வேலை பார்க்க உத்தேசம்?'.

'ஒரு மூணு மாசம்...'

'மூணுமாசமா? எங்களுக்கு அதிகாரியே தேவையில்லை... இப்படியே திரும்பிப் போங்க. இப்ப மெட்ராஸுக்கு ஏதாவது திருவள்ளுவர் இருக்கும்'.

என்ன சொல்வது என்று புரியாமல் சம்பத் நின்றான்.

'ஒருவருஷமாவது இங்க வேலை பாக்கணும் மிஸ்டர்...அப்பத்தான் ஸ்கீமை எல்லாம் புரிஞ்சுக்க முடியும். நாங்களெல்லாம் கூட்த் தான் குடும்பத்தை எந்த ஊர்லயோ விட்டுட்டு இங்க வந்து வேலை பார்க்கிறோம்...என் குடும்பம் திருச்சில...அட்வைஸர் குடும்பம் விழுப்புரத்துல...இப்பத்தான் வாரத்துல ரெண்டு நாள் லீவு விட்டிருக்கான். வெள்ளி போய் திங்கள் திரும்ப வேண்டியிருக்கு. என்ன சொல்றீரு...'என்றது மகா குண்டு.

'ஒரு வருஷமா...?' சம்பத்துக்கு மயக்கம் வருவது போலிருந்தது. சரி இந்த ஆள் நம்மைப்பிடித்து



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வைத்துக் கொள்ளவா முடியும்?. மூன்று மாதத்தில் மாற்றல் வாங்கிக் கொண்டு ஓடி விட்டால் போயிற்று.. என்கிற நினைப்பில், 'சரி இருந்து விடுவோம்' என்றான் சம்பத்.

பிறகு சம்பத் நீட்டிய ஜாயினிங் ரிப்போர்ட்டை வாங்கி மார்ஜினில் சைன் பண்ணி வாதிராஜனிடம் கொடுத்தார் ஜே.டி. 'போங்க...' என்று கை அசைத்தார்.

எதிர், பக்கத்து வீடுகளையும் இந்த அலுவலகத்தினர் வாடகைக்கு எடுத்திருந்தனர். வாதி ராஜனின் செக்ஷன் ஏ செக்ஷன்... பிரிவு பி முதல் ஜி வரையான கண்காணிப்பாளர்கள், ஊழியர்களை அறிமுகப் படுத்தி வைத்தார். தனக்குக் கீழ் இத்தனை சூப்பிரண்டுகள் வேலை செய்யப்போகிறார்களா? என்று நினைத்துப் பெருமைப்பட்டுக் கொண்டான் சம்பத்...ஆனால் படி ஏறி முதல் தளத்திற்கு வந்ததும் அவனின் பெருமிதத்தில் மண்ணைப் போட்டார் வாதிராஜன். ஓர் அறையில் நுழைந்து 'இதான் உங்க சீட் உட்காருங்க' என்ற வாதிராஜன், 'ஏசு...கீழேப்போய் ஒரு விரிப்பு கொண்டு வந்து மேசை மீது விரி' என்றார்.

பி செக்ஷன் அதாவது சம்பளப் பட்டியல்கள் மற்றும் கணக்குகள் பிரிவு.. மற்றொன்று பி.வி.செக்ஷன் அதாவது பிஸிகல் வெரிபிகேஷன் பிரிவு. இந்த இரண்டு பிரிவிற்கும் தான் சம்பத் பொறுப்பு. இந்த இரண்டு சூப்பிரண்டுகள் மட்டுமே

## ஓவிய மேதைகள்

**Botticelli. Sandro (1444–1510 இத்தாலி)**

தெளிவும் நுட்பமுமான கோடுகளால் பெரும்பாலும் சமயக் காட்சிகளை வரைந்தார். ரோமானிய பழங்கதைகளையும் தீட்டினார்.

**BraaQe. Georges (1862–1963 பிரான்சு)**

க்யூபிஸ ஸ்தாபகரில் ஒருவரான இவர் சிற்பியும் ஆவார். இவரது ஓவியங்கள் எளிய புறக்கோடுகளைக் கொண்டிருந்தாலும், ஒரே நேரத்தில் பொருளின் பல கோணங்களைக் காட்டக் கூடியன. சிதைத்து இணைத்தல் கலையில் கை தேர்ந்தவர்.

**Brueghel.Pieter (1520–1569)**

உயிர்த்துடிப்புடன் கிராமியக் காட்சிகளைச் சித்தரிப்பவர். பெரும்பாலான ஓவியங்கள் நூற்றுக் கணக்கான மக்களைக் கொண்டதாக காணப்படுகின்றன.

**Degas. Edgar (1834–1917 பிரான்சு)**

'பாலே' நடனத்தை ஓவியமாக்குவதில் பிரபல்யர். இம்ப்ரஷனிஸ்ட் காலத்தியவர். காலப்போக்கில் பார்வை மங்கிப்போக சிற்பக் கலைக்கு மாறிவிட்டார்

–க்ரிஸாத்திமன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சம்பத்துக்குக் கட்டுப்பட்டவர்கள். 'ஏ' செக்ஷன், அதாவது நிர்வாகப் பிரிவு வாதிராஜனின் செக்ஷன். அட்வைஸர் என்கிற அதிகாரியின் கட்டுப்பாட்டில். சி.டி.இ.எப்.ஜி பிரிவுகள் அந்தந்த ஸ்கீம்களுக்குரிய டைரக்டர்களின் அதிகாரத்தின் கீழ். அஸிஸ்டென்ட் டைரக்டர்களுக்கு சேலம், ஆத்தூர், நாமக்கல், திருச்செங்கோடு, சங்கர கிரி...ராசிபுரம், வாழப்பாடி..ஆகிய ஊர்களில் ஆங்காங்கு அலுவலகம் இருந்தது.

'இந்த ஊரில் எனக்கு என்ன வேலை சார்?' என்று அசட்டுத்தனமாக ஒரு கேள்வி கேட்டான் சம்பத்.

வாதிராஜன் தன் உள்ளங் கைகளைப் பார்த்துக் கொண்டு சற்று அமைதியாக இருந்தார். சட்டென்று நிமிர்ந்து, 'உங்கள் மேசைக்குள்ள ஜாப் சார்ட் இருக்கும். நீங்களாப் பாத்துக்குங்க' என்று சொல்லி எழுந்து இறங்கிப் போய் விட்டார்.

ஒரு வேலையும் இல்லை... உட்கார்ந்து பொழுது போயிற்று... மதியம் மூன்றரை மணிக்கு, ப்யூன் செல்லச்சாமி வந்து டீ வாங்கிக் கொடுத்தான். காவி கிளாசை எடுத்துச் செல்ல அவன் திரும்பி வந்த போது, சம்பத் எழுபத்து ஐந்து காசை எடுத்துத் தயாராக மேசை மீது வைத்திருந்தான்.

சௌக்கியமாக சேலம் வந்து சேர்ந்ததாக வீட்டிற்கு சம்பத் கடிதம் எழுதி முடித்த போது, இது உங்கள்தா சார் என்று ஒரு வாழ்த்து உறையைக் கொண்டு வந்தான் ஏசு.

என்றும் பிரிய அண்ணனுக்கு

பிரேம்ராஜ்.

******

பக்கச் சந்தில் திரும்பி மைதானத்தின் குறுக்கே நடந்து தெருவில் ஏறி பஸ்ஸுக்குக் காத்திருந்தான் சம்பத். அய்ந்து ரோடில் இறங்கணுமா? அஸ்தம் பட்டியில் இறங்கி சின்னத் திருப்பதிக்கு வேறு பஸ் பிடித்துப் போகணுமா? என்று விசாரித்து வைத்திருந்தான். அவன் ராமுவின் ஆபீஸிற்கு வந்த போது நன்கு இருட்டி விட்டது. ஆனால் ஆபீஸில் 'ஜே ஜே' என்று கூட்டம் குறைய வில்லை. சென்னை ஆபீஸில் வேல பார்த்த இரண்டு மூன்று பேர் அப்போது சேலத்திற்கு மாற்றலாகி வந்திருந்தனர். அவர்கள் சம்பத்திடம் பேச ஆரம்பித்து விட்டனர். தெருவில் ரொம்ப தூரம் நடந்து வந்து ஒரு குடிசையில் டீ அருந்தினர்.

'சரியான சுடுகாட்ல போய் ஆபீஸை வெச்சிருக்கான்'

அவர்கள் திரும்பி வந்த போதும் மேனேஜர் ராமுவைச் சுற்றிக் கூட்டம். ஒரு மாத விடுப்பு முடிந்து அன்று தான் திரும்பி வந்திருக்கிறார் அல்லவா? சம்பத்தை ராமு அழைத்தார். 'எனக்கு ஆபீஸில் தங்கப் பிடிக்கவில்லை சம்பத்... உடனே நாம இங்கிருந்து புறப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

படறோம். பேக் அப் யுவர் திங்க்ஸ்.'

டெப்புடி கமிஷனர் ஆபீஸ் மானெஜர் பதவி என்பது சக்தி வாய்ந்தது. எத்தனையோ நிர்வாக அதிகாரிகளின் சாங்ஷன் டி.ஏ இன்னும் எத்தனையோ சொந்த விஷயங்கள் டெபுடி கமிஷனர் கையெழுத்திற்கு ராமுவின் மேல் ஒப்பந்தத்தில் தான் சென்றாக வேண்டும்.

எவனோ ஒருவன் ஆட்டோவிற்கு 'நான் தான் கொடுப்பேன்' என்றான். 'இன்னொருவன் லாட்ஜ் வாடகை என்னது' என்றான்.. இன்னொருவன் 'இன்றிரவுச் சாப்பாடு என் செலவு' என்றான்.

எட்டரை மணிவாக்கில் ஆட்டோ ஏறி ராமுவும் சம்பத்தும் நிர்வாக அதிகாரிகள் இருவரும் சேலத்தின் அழுது வடிந்த ஒதுக்குப்புறத்தை விட்டு பிரகாச மான விளக்குகள் எரிந்த மையப் பகுதிக்கு வந்தனர். பேலஸ் தியேட்டர் அருகில் படு சுத்தமான, நல்ல லாட்ஜிற்கு வந்தனர். சிறிய அறை.. இரண்டு கட்டில்கள் ...பாத்ரூம் அட்டாச்டு. மின் விசிறி...பளபளப் பான சுவர்கள்...

சாப்பிட்டு வந்த பிறகு கையில் சிகரெட் ஏந்தி ஆங்கில தினசரியுடன் கட்டிலில் சாய்ந்தார். ராமு.

சம்பத் யோசித்தான். அவரது உத்தியோக தோரணையில் அவர் எவர் செலவிலாவது ஒசியில் காலம் கழிப்பது சரி. அவரோடு ஒட்டிக் கொண்டு நாமும் எவ்வளவு காலம் ஒட்டுவது? கழற்றிக் கொள்ள வேண்டியது தான். அடுத்த நாள் காலையிலும் சம்பத்தை பர்ஸைத் திறக்க விடவில்லை. ராமுவின் அடியார் கூட்டம். சம்பத் கூசிப் போனான்.

'சரி. இந்த ஆபீஸ்ல எவ்வளவு காலம் வேலை பார்க்க உத்தேசம்?'.

'ஒரு மூணு மாசம்...'

'மூணுமாசமா? எங்களுக்கு அதிகாரியே தேவையில்லை. இப்படியே திரும்பிப் போங்க. இப்ப மெட்ராஸுக்கு ஏதாவது திருவள்ளுவர் இருக்கும்'.

என்ன சொல்வது என்று புரியாமல் சம்பத் நின்றான்.

'ஒரு வருஷமாவது இங்க வேலை பாக்கணும் மிஸ்டர். அப்பத்தான் ஸ்கீமை எல்லாம் புரிஞ்சுக்க முடியும்.

******

பர்ஸ்ட் கேட்டில் இறங்கிய போது மணி ஒன்பதரை 'ரொம்பச் சீக்கிரம் ஆபீஸ் போகிறோம்' என்று நினைத்தான். ஆனால் வழி தவறி விட்டான். பஸ் இறங்கிய பக்கமே வயல் பள்ளத்தில் இறங்காமல் தெருவைக் குறுக்கே கடந்து



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எங்கோ போய் விட்டான். அந்தச் சந்தில் திரும்பி இந்தச் சந்தில் திரும்பி வியர்த்துக் களைத்து... என்ன மறதி....?யாரைக் கேட்டாலும் 'ஜாயிண்ட் டைரக்டர் ஆபீசா.... அப்படி ஏதும்'... ஒரு வழியாக அவன் ஆபீஸ் சென்று சேர்ந்த போது மணி பத்தே கால்...

வருகைப்பதிவேட்டில் ஒப்பமிட அவன் வாதிராஜனை நெருங்கிய 'போது, 'மேலே போங்க. அட்டென் டென்ஸைக் குடுத்து அனுப்பறேன்' என்றார்.

சம்பத் மாடிக்குச் சென்று அமர்ந்ததும் 'குட்மார்னிங் சார்...' என்கிற கீச்சுக் குரலில் ப்யூன் பார்வதி அட்டென்டன்ஸ் எடுத்து வந்தாள். சைன் பண்ணின சம்பத் 'ஜே.டி இருக்காராம்மா' என்றான்.

இல்லே சார். காலைலயே கலெக்டர் ஆபீஸுக்குப் போய் விட்டார்' என்றாள் பார்வதி.

'குட்மார்னிங் சார்' என்று நாற்காலியைத் தள்ளிக் கொண்டு அருகில் வந்தார் பி.வி சூப்ரண்டு கண்ணப்பன்.

அவருக்கும் சம்பத்தின் அறை யிலேயே மேசையும் விரிப்பும் போடப்பட்டிருந்தது. அவரின் குமஸ்தாவுக்குத் தனி மேசை இல்லை. அவனுக்கு நாற்காலி மட்டும் தான். கண்ணப்பனின் மேசையைப் பகிர்ந்து கொண்டான்.

கண்ணப்பன் திங்கட்கிழமை களில் மட்டுமே அலுவலகம் வருவார். மீதி நாட்களில் டெப்போக் களுக்குப் போய்விடுவார். டெப்போக்களில் இருப்புகளைச்சரி பார்த்து, கூடுதல் குறைவு அறிக்கை தயாரிக்க வேண்டும். அன்று அவருக்கு ஏதோ டி.ஏ தொகை வந்திருப்பதாக அறிந்து அலுவலகம் வந்திருந்தார். அதிகாரி பதவி ஏற்றிருப்பதாகச் சொல்லவும் மாடி ஏறி வந்திருக்கிறார்.

குள்ளமான மனிதர். பைஜாமா மாதிரி பேண்ட் போட்டிருந்தார். அரைக்கைச் சட்டை. கோடுகள் போட்டது. சதுர மூக்குக் கண் ணாடி. உலோகக் கம்பி. முற்றிலும் நரைத்த மேல் வழுக்கை விழுந்த தலை. சிரித்த போது சொத்தைப் பல் தெரிந்தது. பேசும்போது மூச்சு இரைத்தது.

'சரி வந்ததே வந்தேன். உங்களோடு ஒரு நாள் இருந்துட்டுப் போறேன். டேய் செல்லச்சாமி சாருக்கும் எனக்கும் டீ வாங்கிட்டு வாடா...'என்றார் கண்ணப்பன்.

வயதில் பெரிய மனிதர் தன் பக்கத்தில் நின்று கொண்டு பேசுவது என்னவோ போலிருந்தது சம்பத்துக்கு. 'வெங்கிட்டு, ஒரு மடக்கு நாற்காலியை என் பக்கத்துல போட்டு வையுங்களேன்.'

'நான் போடறேன் சார்' என்று ஒரு கறுத்த இளைஞன் சிரித்தபடி எழுந்தான். 'சார் என் பேரு வசந்த குமார். இங்க பி.வி செக்ஷன்ல ஜூனியர் அசிஸ்டெண்ட். நேத்து நான் சி.எல்'.

'ஆமா இந்த ஆள் கிட்ட



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எச்சரிக்கையா இருங்க... உங்களை ஏமாத்தி எல்லா ரெக்கார்டுலயும் கையெழுத்து வாங்கிடுவான்' என்றார் கண்ணப்பன்.

'எந்த பைல் ஆனாலும் எங்க சூப்ரண்டு சைன் பண்ணினாத்தான் உங்ககிட்ட வரும். உங்களை எப்படி சார் ஏமாத்திட முடியும்?' என்று சிரித்தான் அந்த இளைஞன்.

'வணக்கம் சார்...பணப் பட்டு வாடால இருந்துட்டேன். அதான் உடனடியா வந்து பார்க்க முடியலை. நேத்து நான் லீவு' என்ற படி அருகில் வந்தார் 'பி' பிரிவு சூப்பிரண்டு கோமேதகம். நல்ல சந்தன நிறமாக நடுத்தர உடல்வாகுடன் இருந்தார். அரைக்கைச் சட்டையும் பேண்டும் போட்டிருந்தார்.



அன்று இரு சூப்பிரண்டுகளும் வந்து விட்டதால் அவர்கள் பார்த்து அனுப்பிய பேடுகள் சம்பத்தின் மேசை மீது நிறைந்திருந்தன.

'பெட்ரோல் பில்களை மட்டும் உடனுக்குடன் பார்த்து அனுப்பி விடுங்கள் சார். இல்லையேோ டைரக்டர் வீராசாமி சத்தம் போடு வார். கார் பராமரிப்பும், கட்டுப் பாடும் அவருடையது. டிரைவர் களும் நம்மை நச்சரித்துக் கொண்டே இருப்பார்கள்' என்ற கோமேதகம் அதற்கு முன்னால் நீங்கள் நம் அட்வைஸ் ஆபீஸரைப் பார்த்தீர் களா? நேற்று அவர் ஆபீஸில் இல்லையாமே?' என்றார்.

கோமேதகம் அமர வசந்த் ஸ்டூல் போட்டான்.

'நன்றாக இருக்கிறதே... நீங்கள் பேசுவது. இவரும் ஆபீஸர். அவரும் ஆபீஸர். இவர் ஏன் அவரைப் போய்ப் பார்க்க வேண்டும். அவர் கூப்பிட்டால் மட்டும் இவர் போனால் போதும்' என்றார் கண்ணப்பன்.

டீ வந்தது.

'இன்னும் ரெண்டு டீ வாங்கி வாப்பா' என்று கண்ணப்பன் பத்து ரூபாய் நோட்டைக் கொடுத்தார்.

'அதற்கில்லை சார். அவர் இந்த ஆபீஸிற்கே சம்பளம் தருகிறவர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அதனால் தான் சொன்னேன். பார்ப்பதும் பார்க்காததுவும் சார் இஷ்டம்'.

'பார்த்து விட்டால் போகிறது. இந்த ஆபீஸில் எல்லாரையும் நானும் தெரிந்து கொள்ள வேண்டியது தானே' என்றான் சம்பத்.

ஒன்றைத் தெரிந்து கொள்ளுங் கள் ஆபீஸர் சார். இந்த ஆபீஸில் மூவாயிரம் ரூபாய் சம்பள விகிதத் தில் பன்னிரண்டு டெபுடி டைரக்டர்ஸ் இருந்தாலும் அவர்கள் உங்களுக்கு அதிகாரிகள் இல்லை. அட்வைஸ் அதிகாரியும் அஸிஸ் டண்டு டைரக்டரும் இரண்டாயிரத்து இருநூறு ரூபாய் சம்பள விகிதத்தில் இருந்தாலும் அவரும் உங்களுக்கு அதிகாரி இல்லை. இவர்களை எல்லாம் விட நீங்கள் வாங்கும் இரண்டாயிரம் ரூபாய் சம்பளம் குறைவானது தான். ஆனால் நீங்களும் அதிகாரி தான். மேற் சொன்ன எந்த அதிகாரியும் உங்களைக் கூப்பிட்டு, என்ன வேலை செய்தீர்கள்? ஏன் செய்தீர்கள்? என்று விசாரிக்கும் அதிகாரம் இல்லாத வர்கள். நீங்கள் ஜாயிண்ட் டைரக்டர் ஒருவருக்குத் தான் பதில் சொல்லக் கடமைப்பட்டவர். உங்களுக் கான இரண்டு செக்ஷன்கள். அதன் முழுக் கட்டுப்பாடும் உங்களுடைய தனி அதிகாரம் தான்' என்றார் கண்ணப்பன்.

சென்னையில் தலைமை அலுவலக சூப்பிரண்டாக சம்பத் இருந்த போது மேலதிகாரி அவனை ஒரு நாளைக்குப் பத்துத் தடவையா வது கூப்பிட்டுப் பேசுவார். இங்கே ஜே.டி சம்பத்தைக் கூப்பிடவே இல்லை.

'அட்வைஸர் மகா நச்சு சார். வீட்டில் ஒரு கிழம் இருந்து தொணத் தொணப்பது போல இந்த ஆபீஸில் அதன் நச்சுப் பொறுக்க முடியாது. அவரைப் பார்த்து விடுங்கள். நேற்று ஜாயின் பண்ணியும் இன்று வரை அவரைப் பார்க்கவில்லை. மரியாதை தெரியவில்லை என்று கமெண்ட் அடிக்கும்' என்றார் கோமேதகம்.

'ரொம்ப நேரம் ஆச்சி சார். கீழே போய் தம் அடிச்சிட்டு வர்றேன்'. என்று கீழே இறங்கிச் சென்றார்.

'அட்வைஸரையும் தான் பார்த்து விட்டால் போயிற்று. அந்தக் குறையும் ஏன்?'.

சம்பத் எழுந்தான். சுருட்டி விட்டுக் கொண்ட கைகளை முழுசாகப் பிரித்துவிட்டுக் கொண்டு படியிறங்கி பக்கத்து வீட்டில் (ஆபீஸில்) நுழைந்தான்

'திருட்டுத்தனம் பண்ற பயல் களை உச்சி வெயில்ல நடு ரோட்ல நிக்க வெச்சிச் சுடணும். கேம்ப் போகாமலேயே வூட்ல படுத்திருந் திட்டு, பத்துப் பதினைந்து நாள் டி.ஏ. போட்டீங்கன்னா பாஸ் பண்ணிடுவேன்னு நினைக்கறீங் களா? நான் என்ன இளிச்சவாயனா? மண்டைல மசாலா இல்லாதவனா? இந்த ஆபீஸ் பியூன்கள வெக்க வேண்டிய இடத்துல வைக்கணும்...

(குறுநாவல் தொடர்ச்சி 55ம் பக்கம்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

6



# புதிய வேதாளக் க(வி)தைகள்

முஸ்தபா.

தன் முயற்சியில்
சற்றும் தளராத விக்ரம் குமார்
கூரை விசிறியை எட்டி
குட்டி வேதாளத்தைக் கட்டிப் பிடித்து
தோளில் வைத்துக் கீழிறக்கியபோது
வேதாளம் சொன்னது...
"ஹலோ! கமான் மிஸ்டர் விக்ரம் குமார்,
வீர சுந்தரியை வீர சேகரன் மீட்ட கதையைக் கேளும்"

உறவும் வேண்டாம் பணமும் வேண்டாம் என்று
முகத்திலடித்தாற்போல் பதிலைச் சொல்லி
திருப்பி அடித்த சுந்தரி மேல்
கோபம் கொண்ட வீர சேகரன், தலைவருக்கு
என்ன பதில் சொல்வதென்று குழம்பிய போது
உடன் இருந்த தளபதி வீரமாறன்,

'வீர சுந்தரியைத் தலைவரே பார்த்துக் கொள்வார்
கவலைப்படாதீர்' என்றான்.

'இந்தச் செய்தி அவருக்கு எப்படித் தெரியும்'
என்று சேகரன் கேட்க,
'உங்களோடு வந்த தளபதி வீர தேவன்
தலைவரின் உளவாளி என்பது உங்களுக்குத் தெரியாது
எனக்குத் தெரியும்' என்றான்.
'கூப்பிடு அவனை... நெரிப்பேன் கழுத்தை இப்போதே'
என்று கர்ஜனை செய்த சேகரனை சமாதானப்படுத்தி
பிறகு பார்த்துக் கொள்வோம்' என்றான் வீர மாறன்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சுந்தரியை நினைத்து வருத்தம் மேலிட
மிகவும் கவலையாய் இருந்த போது
படபடத்து வந்தமர்ந்தது ராஜாளி பருந்து .
காலில் வழக்கம் போல் குழலில் மடித்த தலைவன் செய்தி.
தவிரவும் நூலில் கோர்த்து
கழுத்தில் மாட்டிய இன்னொரு கடிதம்.
வீர சேகரன் பிரித்துப் படித்தான்.
வீர பிரதாபன் அனுப்பிய செய்தி
நாலே வரிகளில்

*முக்கியமான வேலை ஒன்று*
*காத்திருக்கிறது உனக்காக*
*உடனே வரவும் தாமதமின்றி.*
*தலைவர் ஆணை*

மற்றொரு கடிதம் சுந்தரி அனுப்பியது.
என் ப்ரிய கணவருக்கு
வீர சுந்தரி விடுக்கும் அவசரச் செய்தி.
என்னைக் கடத்தி வந்து விட்டான்
உங்கள் தலைவன் வீர பிரதாபன்.
வேறு வழியின்றி அவன் சொல் கேட்கும்
அடிமை ஆனேன். ராஜாளியை
அனுப்பி வைக்கும் வாய்ப்பு கிடைத்தது.
அனுப்பியுள்ளேன் ரகசியச் செய்தியை.
நீங்கள் வந்தால் ஆபத்து.
ஆணையிட்டிருக்கிறான் உங்களைக்
கழுவிலேற்றிக் கொன்று விட.
உங்கள் தலைவரின் உண்மை சொரூபம்
இங்கு வந்த பின் தான் தெரிந்தது எனக்கு.
இந்த இடத்தின் பெயரே கஞ்சா மலைக் காடு.
காட்டின் நடுவே
குகையின் முகப்புடன் பெரிய மாளிகை.
பிரதாபனின் சாம்ராஜ்யத்தில் அவனே சர்வாதிகாரி
மற்றவரெல்லாம் அடிமைகள்.
அடியாட்கள்...
அந்தப்புரத்தில் கடத்தி வந்த கன்னியர் உண்டு.
நீங்கள் நம்பும் லட்சியம் கொள்கை
எல்லாம் வெறும் ஏமாற்று.
இவனது லட்சியம் கஞ்சா வளர்த்து
உங்கள் மூலம் வெளிநாடுகளுக்குக்
கடத்திச் சென்று பணம் சம்பாதிப்பது தான்.
அந்த வகையில் ஏராளமாக
குவித்து விட்டான் சொத்தும் சுகமும்.
ஆயுதம் தாங்கிய காவல் படை
எப்போதும் உண்டு இவனுடனே.
காட்டினுள் நுழைந்த அந்நியர்கள்
திரும்பியதில்லை உயிருடனே.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விலைக்கு வாங்கிய போலீஸ், அதிகாரிகள்
இதுபோல் பலரும் இவனது அடிமைகள்
உங்களைப் போன்றவர் அறிந்த முகமும் வேறொன்று
அவனுடைய உண்மை சொரூபத்தை
இப்போதாவது தெரிந்து கொள்ளுங்கள்.
இயக்கத்தைக் கலைத்துவிட்டு
புதிய வாழ்க்கை தொடங்குங்கள்.
இங்கிருந்து நான் மீள முடியாது.
என் கடைசி வேண்டுகோள் ஒன்று...
விரைவில் நானும் மடிந்திடுவேன்.
தங்கைகளைப் பாதுகாப்பது தங்கள் பொறுப்பு.
மூத்த தங்கை லோக சுந்தரி
எல்லா வகையிலும் உங்களுக்கு ஏற்றவள்.
முறைப்படி அவளை மணந்து கொண்டு
இல்லற வாழ்க்கை தொடங்குங்கள்...
வீர பிரதாபனின் அழைப்பை ஏற்று
இங்கே வந்தால் உங்கள் உயிர் தப்பாது.
இது நிச்சயம்'.

சுந்தரியின் கடிதம் படித்து கற்சிலையான சேகரன்
மனம் கொதித்து சபதம் செய்தான்.
வீர பிரதாபனை ஒழிப்பேன்.
சுந்தரியை மீட்பேன்.

தலைவருக்கு எழுதினான் மறுமொழி ஒன்று
வெற்றி வேல் வீர வேல்.
உடனே புறப்படுகிறேன்.
இட்ட கட்டளையையும் செய்து முடிப்பேன்..

ராஜாளியின் கழுத்துக் குழலில் கடிதம் வைத்து
தீனியும் போட்டுத் திருப்பி அனுப்பினான்.
அடுத்துச் செய்வது என்னவென்று
ஆழ்ந்து யோசித்த சேகரன்
சுந்தரியின் சகோதரிகளைப்
பாரப்பதென முடிவு செய்தான்.
வீரமாறனை அழைத்துக்கொண்டு
ஜீப்பில் ஏறி கடுகி விரைந்தான்.
வீர சுந்தரியின் வீட்டில் சகோதரிகள் நால்வரும்
அழுத கண்ணும் சிந்திய மூக்குமாக
அரற்றிய படியே இருந்தனர்.

'நாளை மாலைக்குள் சுந்தரியை அழைத்து வருகிறேன்.
இந்தப் பெண்களுக்குப் பாதுகாப்பாக
அதுவரை இங்கேயே இரு வீர மாறா...'

வீர மாறன் சிரித்துக் கொண்டே
'சரி' என்றான்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

போலீஸ் துணையுடன் பிரதாபனை ஒழித்து
சுந்தரியை மீட்பேன் என்று சபதமிட்டவன்
ஆட்டோ பிடித்து, கமிஷனர் நந்த கோபாலைச்
சந்திக்கச் சென்றான்.

'வீர பிரதாபனின் படையைச் சேர்ந்தவன்.
அவனைப் பிடித்துக் கொடுக்க நானே வந்தேன்'.

பலமாதங்களாக பிரதாபனை
பிடிக்க முயன்று பலனில்லாமல்
கவலையில் இருந்த கமிஷனர்
சேகரன் சொன்னதைக் கேட்டுச் சுறுசுறுப்பானார்.

'மிகவும் நல்லது. இதை மட்டும் நீ
நடத்திக் கொடுத்தால் உன்னையும் உன் சகாக்களையும்
தண்டனையின்றி விடுதலை செய்கிறோம்'

கஞ்சாமலைக்காட்டை முற்றுகையிட்டிருந்த
இன்ஸ்பெக்டர் ஜெனரல் ஆசீர்வாதத்திற்கு
செய்தி அனுப்பினார்.

பிரதாபனைப் பிடித்துக் கொடுக்க
அவனுடைய தளபதி ஒருவர் முன் வந்திருக்கிறார்.
உங்களிடம் அவரை அனுப்புகிறேன்.
அவர் சொல்வது போல் நடந்து
திட்டத்தை நிறைவேற்றுங்கள்.

வீர பிரதாபனைப் பிடிக்க
சேகரனுடன் போலீஸ் படையும் விரைந்தது.
ஐ.ஜி.ஆசீர்வாதம் வீர சேகரனை
ஆர்வமாக வரவேற்று ரகசியமாகத் திட்டம் தீட்டினார்கள்.

'நான் இன்னும் அவனது
விசுவாசமிக்க தளபதி என்றே
நினைத்துக் கொண்டிருக்கிறான்.
நான் முதலில் போகிறேன்.
தக்க சமயத்தில் சமிக்ஞை தருவேன்.
பின்னோடு தகுந்த ஆயுதத்துடன் பதுங்கி வாருங்கள்.
நான் குரல் கொடுக்கும் முன்
எந்த நடவடிக்கையும் எடுக்க வேண்டாம்'.

என்ற வீர சேகரன் காட்டினூடே தனியே நடந்தான்.
குகை வாயிலில் காவலர் இருவர்
தடுத்து நிறுத்தினர்.
'சின்னத் தலைவர் வந்திருக்கிறார்' என்று
தலைவருக்குச் சொல்லுங்கள்' என்றதும்
'வெற்றிவேல் வீர வேல்'
என்று வணங்கி வழி விட்டனர்.

வீர பிரதாபன் சிம்மாசனத்தில்– அருகே வீர சுந்தரி.
கொதித்த மனத்தை உள்ளே அடக்கி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

'வெற்றி வேல்... வீர வேல்' என்றான் சேகரன்.

'ஆஹா வந்துவிட்டாயா' என்று
முன்னே வந்து கட்டிக் கொண்டான் வீர பிரதாபன்.

'தங்கள் கட்டளை தலைவா
ஆணையிடுங்கள்' என்றான் சேகரன் பணிவாக.
வீர சுந்தரிக்கு சமிக்ஞை செய்தான் கண்களால்.

'பார்த்தாயா உன்னை மணந்த சுந்தரி
இப்போது என் வசம்.
துரோகம் செய்ய நினைத்தவர்களுக்கு
இதுவே தண்டனை. இப்போது இவள் என் ஆள்.
சொன்னவற்றைச் செய்து முடிப்பாள்'
என்றான் பிரதாபன்.

'கட்டளையிடுங்கள் என்ன செய்ய வேண்டும்'
என்றான் சேகரன்.

'போலீஸ் ஐ.ஜி.ஆசீர்வாதம் முற்றுகையிட்டு
தொல்லை கொடுக்கிறான்.
தீர்த்துக்கட்ட வேண்டும் அவனை
அதற்கென்ன செய்யலாம்?'.

சேகரன் சொன்னான், 'தற்கொலைப் படைத் தலைவி
சுந்தரி உயிர்த்தியாகம் செய்யவும் துணிந்தவள்...
அவள் இடுப்பில் கட்டிய பெல்ட்டில்
வெடி குண்டு வைத்து அனுப்புங்கள்.
ஆசீர்வாதத்தை மட்டுமின்றி போலீஸ் படையையே
தூள் தூளாக்கும் பயங்கர குண்டு.
கூடவே அவளுடன் நானும் சென்று
நடத்திக் காட்டுவேன்'

'சபாஷ்! நல்ல யோசனை...
'சுந்தரி இந்தத் தியாகத்திற்கு நீ
முழுமையாக சம்மதிக்கிறாயா?' என்றான் வீர பிரதாபன்.

சம்மதித்த சுந்தரியை அழைத்துக் கொண்டு
வீர பிரதாபனின் துப்பாக்கி குண்டுகள்
எட்டாத தொலைவு சென்றதும்
வீர சேகரன் உதட்டைக் குவித்து சீழ்க்கை அடித்தான்.
திபுதிபுவென்றுபோலீஸ் படைகள் வந்து குமிந்தது.

'முற்றுகையிடுங்கள் குகை வாசலை.
பிரதாபன் தப்பிவிடாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

'நன்று செய்தாய் சேகரா' என்று
முன்னே வந்தார் ஆசீர்வாதம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சேகரன் போலீஸ் மைக்கில் கூவி அழைத்தான்.

'வீர பிரதாபா...உன் முகமூடி கலைந்து விட்டது.
போலீஸிடம் சரணடைந்து விடு. இல்லையெனில்
உன்னையும் உன் மாளிகையையும் தகர்த்து விடுவோம்.'

மறுமொழியாக பிரதாபனின் அட்டகாசச் சிரிப்பு
இடியாய்க் கேட்டது. 'முட்டாள் வீர சேகரா...
வீர சுந்தரியை விடுவித்துவிட்டோமென்று
வீண் ஜம்பம் கொள்ளாதே...
அவளுக்குப் பிணையாக என் வசத்தில்
நான்கு பெண்கள்... சுந்தரியின் சகோதரிகள்
என்னைப் பிடிக்க படை நுழைந்தால்
இவர்களைக் கண்டந்துண்டமாக வெட்டி விடுவேன்.
குகைக்குள் நுழைபவரும் தப்ப முடியாது'

லோக சுந்தரி, திரிபுர சுந்தரி,
குண சுந்தரி, சொப்ன சுந்தரி'.
குகை வாசலில் நான்கு சகோதரிகளும்
கட்டப்பட்ட நிலையில் நிறுத்தப்பட்டனர்.
அவர்களுக்குப் பின்னால் துப்பாக்கியுடன்
நின்றிருந்த வீரமாறனைப் பார்த்து
அதிர்ந்து போனான்சேகரன்.
கதையைப் பாதியில் நிறுத்திய வேதாளம்
அடுத்துக் கேட்டது ஒரு கேள்வி..
'வீர சுந்தரியின் தங்கைகள்
வீர பிரதாபனின் பிடியில் சிக்கியது யாரால்?
இதற்கு சரியான விடை தெரிந்தும் நீ கூறாவிட்டால்
உன் தலைக்குள் அணுகுண்டு வெடிக்கும்'

விக்ரம் குமார் சொன்னான்,
'வீர பிரதாபனின் உளவாளி வீரமாறனே காரணம்'.
'சரியாய்ச் சொன்னீர், சபாஷ்" என்று
விக்ரம் குமாரின் மௌனம் கலைந்தால்
விட்டத்தில் பாய்ந்து வேதாளம்
மறுபடியும் ஏறிக்கொண்டது கூரைவிசிறியில்.

**அடுத்த இதழில்**


## வீர சந்தரியின் உயிர்த்தியாகம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# உள்ளது உள்ளபடி



## மு்ஸ்தபா

செவாலியே விருது பற்றி கே.என். கிருஷ்ணசுவாமி. மேலும் பல தகவல்கள் தந்திருக்கிறார்.

சிவாஜிக்கு முன்பு சத்யஜித் ரேக்கு இவ்விருது வழங்கப்பட்டிருக் கிறது. அப்போது இந்த அளவிற்கு விளம்பரப்படுத்தப்படாததால் இவ் விருது பற்றி தமிழ் நாட்டில் கேள்விப்படவில்லை. இந்த ஆண்டு இவ்விருது நிருபமா நித்யானந்தத் திற்கு வழங்கப்பட்டிருக்கிறது.

******

கேட்காமல் வழங்கப்பட்ட கலைமாமணி விருதை இந்திரா பார்த்தசாரதி ஏற்க மறுத்ததில் ஆச்சர்யமில்லை. முதலில் இது விருது அல்ல. பட்டம். பெரும்பாலும் திரைப்படக் கலைஞர்களுக்கே வழங்கப்படுவது. ஐந்து சவரன் சங்கிலியும், லாக்கெட்டும் வருகிறது என்பதைத் தவிர இலக்கிய ரீதியில் இப்பட்டத்தினால் பெருமை ஏதும் இல்லை.

இசை, நாடகம், நடனம், திரைப்படம் போன்ற கலைத் துறையில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு கலைமாமணி ஏற்றம் தருகிறது. குறிப்பாக அதிகம் பிரபலம் ஆகாத, வெளிச்சத்திற்கு வராத கிராமிய கலைஞர்களுக்கு இவ்விருது வழங்கப்பட்டால் அவர்களுக்கு உண்மையிலேயே பெருமை சேர்க்கும்.

******



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**குமார், திருச்சி**

**ஜெ.ஜெ. VS சு.சு. யார் ஜெயிப்பார்கள்?**

ஜெ.ஜெ. தேர்தலில். சு.சு. கோர்ட்டில்.

---

**சுப்புராமன், மதுரை**

**சேஷன் அரசியலில் குதிக்கப் போகிறாராமே?**

ஆசை யாரை விட்டது? சமீபத்தில், 'சண்டே' பத்திரிகையில் வெளியாகி இருக்கும் சேஷனின் பேட்டியின் சில பகுதிகள்–

நான் அரசியலில் இறங்க விரும்பவில்லை. ஆனால் அதிலிருந்து தப்ப முடியாத கட்டத்தில் இருக்கிறேன்.

***

எனக்கு கவர்னர் பதவி தருகிறேன் என்று பிரதமர் சொன்னார். நான் கவர்னரானால் என் மனைவி governess (ஆயா) ஆகிவடுவார். எங்களுக்குக் குழந்தையில்லை. எந்தப் பதவியும் தரத் தயாராக இருப்பதாக அவர் சொன்னார். எனக்குப் பொருத்தமான பதவிகள் இரண்டு தான் ஒன்று பிரதமர் பதவி. மற்றொன்று ஜனாதிபதி பதவி.


***

இப்போதெல்லாம் நான் ஏதாவது திருமணத்திற்கு அல்லது பொது நிகழ்ச்சிக்குப் போனால் எல்லாரும் என்னை மொய்த்துக் கொள்கிறார்கள். இந்தியாவின் பிரச்சினைக்கெல்லாம் தீர்வு என்னிடம் இருப்பதாக நினைக்கிறார்கள். இப்பிரச்சனைகளைத் தனி நபர் தீர்த்து வைக்க முடியாது. அந்த அனுமாரே வந்தாலும் கூட.

அடிப்படைப் பிரச்சனை எல்லாத் துறைகளிலும் ஒழுக்கம் குறைந்து விட்டது. அரசியல், நிர்வாகம், தொழில்துறை என்று, ஒழுங்கீனம் எல்லா இடத்திலும் அதிகரித்து வருகிறது. அதுவே முக்கிய பிரச்சனை.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




இதம் தரும் மனை நீங்கி *குறுநாவல் தொடர்ச்சி*

ஏம்மா ஸ்டெனோ...ஹெட் ஆபீஸக்குப்போன் போடுன்னேனே. சொல்லி எத்தனை நேரம் ஆச்சு?'

வாசற்படி ஏறியதுமே ஸ்டெனோ மேசை மீது டைப்ரைட்டரும் அருகில் டெலிபோனுமாக இருந்தாள். அவளின் இடக்கைப் புறம் திரை தொங்கிய அறையின் உட்புறம் மேற்படி நபர் இருந்தார். அவர்தான் அட்வைஸர்.

சம்பத் உள்ளே நுழைந்து 'குட்மார்னிங் சார்' என்றான். மேசை சுத்தமாக இருந்தது. மேசை மீது அலாரம் கடிகாரம். ஒரு காலை மேசை மீது தூக்கி வைத்துக் கொண்டிருந்தார்.

மொட்டை அடித்து மயிர் வளர்ந்து கொண்டிருக்கிறதா? அல்லது தலையே அப்படியா? மிக அகலமான அரைக்கைக் காமராஜர் வெள்ளைச் சட்டை. கறுப்புக் குண்டு.

எதிரில், நல்ல வேளையாக ஒரு மர நாற்காலி இருந்தது. சம்பத் அதில் அமர்ந்தான்.

'ஆமா நீர் ஒரு அதிகாரி தான.. உமக்கு ஜாயினிங் ரிப்போர்ட் கூட எழுதத் தெரியாதா?'

சம்பத்துக்கு ஏடுத்த எடுப்பில் அந்தக் கேள்வி கோபத்தைத்தந்தது.

'அதில் என்ன குறை?'

'ஒரு அதிகாரி ஆகப்பட்டவர்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இங்கிலீஷில் தான் எழுதணும் எதையும்'.

'அப்படி ஒன்றும் இல்லை. ஆட்சி மொழி தமிழ் . தமிழில் தான் எழுதணும்....தமிழில தான் ஒப்பமிட ணும்'.

திரையைத் தள்ளிக் கொண்டு உள்ளே வந்த வாதிராஜன் 'ஆமா சார். அது தான் சரி' என்றார் .

'சரி. உம்ம செக்ஷன்ல கணக்கு கள் ஒழுங்காகவே வைத்துக் கொள்ளப்படவில்லை. மாதாந்திர அறிக்கைகள் தலைமை அலுவலகத் திற்குப்போவதே இல்லை. நானும் எத்தனையோ மாதங்களாகத் தலை பாடமாக அடித்துக் கொள்கிறேன். கண்ணப்பனும், கோமேதகமும் குப்பையாக வைத்திருக்கிறார்கள். நீராவது ஒழுங்கு செய்யும். இன்ஸ்பெக்ஷனிலும் ஆடிட்டிங் கிலும் மாட்டினால் தெரியும்...'

'நான் என் சம்பந்தப்பட்ட செக்ஷனில் எல்லாவற்றையும் கண்ணாடி மாதிரி வைத்துக் கொள்வேன் சார்'.

சரி போங்க...உங்க செக்ஷன் ஆளுங்க சோம்பேறிங்க...அவங் களை நல்லா வேலை வாங்குங்க...'

இதை சம்பத் மாடி ஏறி வந்து சொன்ன போது இரண்டு சூப்ரண்டுகளுக்கும் கோபம் வந்து விட்டது.

வாலியும் சேதுவும் கட்டுக் கட்டாக வரவு சலான்களையும், செலவு வவுச்சர்களையும்எடுத்துப் போட்டனர். கருவூலக் கணக்குடன் ஒத்திசைவு செய்யப் பட்டு மாதா மாதம் அதிகாரி சான்றுடன் தலைமை அலுவலகத்திற்கு அனுப்பப்பட்ட முத்திரையுடன்.

'வேலையே நடக்கலைன்னு அட்வைஸர் எப்படி சார் சொல்ல லாம். உங்களுக்கு முன் இருந்த அதிகாரியிடம் கையெழுத்து வாங்கி குறித்த தேதியில் அனுப்பி யிருக்கிறோமா இல்லியா? அவருக்கு என்ன வாயில வந்ததை எதை யாவது பேசிக்கிட்டே இருப்பார். ஏதோ உதார் விடுவார்'.

'ரொம்ப ராவடிப் பண்ற மனுஷன் சார் '.

மெல்ல ஒரு மணி ஆயிற்று.

'ஏம்பா வெங்கிட்டு... கேரியர் எடுத்துக்கிட்டு மெஸ்ஸுக்குப் போய் சாப்பாடு எடுத்தாந்து அதிகாரிக்குக் கொடுத்துடேன்' என்றார் கண்ணப்பன்.

'இருக்கிறது ஒரு கேரியர். அதுல அட்வைஸருக்கு சாப்பாடு எடுத்தாந்து கொடுத்திருக்கேன். அவரு எப்ப கேரியரைக் காலி செய்து கொடுப்பாரோ' என்றான் வெங்கிட்டு.

'அப்படிப்பட்ட அதிகப்படி மரியாதை எல்லாம் எனக்கு வேண்டாம்பா...நடந்தே போய்ச் சாப்பிட்டு வருவோம்' என்றான் சம்பத்.

மாமி மெஸ்ஸில் தயிருடன் ஏழு ரூபாய்க்கு சாப்பாடு ருசியாக இருந்தது.

'ஓமலூர் போறேன் சார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வர்றீங்களா. டெப்போ இன்ஸ்பெக்ஷன் பண்ணலாம். ஆனா நீங்க ப்ரோக்ராம் போட்டு ஜே.டி கிட்ட பெர்மிஷன் வாங்கணும்...'என்றார் கண்ணப்பன்.

'வேணாம்..நீங்க போயிட்டு வாங்க...இந்த மாசம் முடிய அஞ்சு நாள் தான இருக்கு. ஆபீஸ் பைல்ஸ் எல்லாம் படிச்சுப் பாக்கறேன்'. என்றான் சம்பத்.

படிச்சுப் பார்க்க என்ன இருக்குது. நீங்க கையெழுத்துப் போட்டீங்கன்னா, யாரும் தயங்காம மேல மேல கையெழுத்துப்போட்டு அனுப்பிடுவாங்க...'என்றான் வசந்த குமார்

கண்ணப்பன் பஸ்ஸூக்குப் போனார்.

சம்பத்தே அங்கீகரிக்க வேண்டிய கோப்புகள் இருந்தன. அவன் கையெழுத்திட்டதும் வசந்த் கொண்டு சென்று தளத்தில் பல டைப்பிஸ்டுகளுக்கும் பிரித்துக் கொடுத்து விட்டு வந்தான். தட்டச்சிட்ட பிறகு அவை மீண்டும் சம்பத்திடம் வராமல் ,

ஒப்பம் சம்பத்
அதிகாரி

உண்மை நகல் உத்தரவுப்படி

என்று தட்டச்சிட்டு கண்காணிப்பாளர் எவர் கையொப்பமாவது பெற்று தபால் அனுப்பும் குமஸ்தாவிடம் சென்று விடும்.

ஒவ்வொரு டெபுடி டைரக்டரின் கையெழுத்திற்கு நான்கு நான்கு பைல் பேடுகள். ஜே.டியின்

**Cezanne.Paul (1839- 1906 பிரான்சு)**

சட்டப் படிப்பை உதறிவிட்டு ஓவியக் கலையில் ஈடுபட்ட இவரின் ஓவியங்கள் நிலப்புற அமைப்புகளைச் சித்தரிப்பன அதீத வண்ணமும் திடமும் பெரியதுமான தூரிகைக்கோடுகள் கொண்டிருப்பன. பொருளினைப் பற்றிய விவரணைகளை விடுத்து அதன் அடிப்படை வடிவத்தையும் வண்ணத்தையும் வெளிப்படுத்துவதில் ஆர்வம் கொண்டிருந்தார். அந்நாளைய இளைஞர்களின் உத்வேகமாகத் திகழ்ந்தார்.

**Constable John (1776-1837 இங்கிலாந்து)**

நிலப்புறவமைப்புக் காட்சிகளை வடிப்பவர். இதமான ஞாயிறின் ஒளியும், வளமையான வண்ணங்களும் -கிராமியச் சூழலில்- சித்தரிக்கப்படும் பெரும்பாலான ஓவியங்களில், யதார்த்தத்தோடு தெளிவும் மிளிரும்.

**Fra Angelico (1387-1455 இத்தாலி)**

சமய ஓவியங்களில் பிரபலமான இவர் ஒரு சந்நியாசி. இவரது ஓவியங்கள் கூர்மையும் தெளிவும் ஆழ்ந்த அமைதியும் கொண்டு துலங்கும்.

**-க்ரிஸாத்திமன்**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கையெழுத்து வேண்டி சில பைல்கள் அவர் மேசைக்கு சென்றன. அந்திப் பொழுதாயிற்று.

'போவோமா வசந்த்?'

'மேசையைக் க்ளீன் பண்ணிட்டீங்களா? பழைய அதிகாரி அப்படியில்லை... எல்லாம் கேம்ப் போயிட்டு வந்து கவனிச்சுக்கலாம்னு கட்டிப் போட்டு, நாலு நாளைக்கு கேம்ப் போயிடுவாரு. சிப்பந்திகள் அலை மோதுவாங்க பாருங்க, பாவமா இருக்கும். யாரோடயோ கடன் மனுக்களைக் கட்டி வெச்சா எப்படி?'

'நான் எப்பவுமே- உங்களை மாதிரி ஜூனியர் அஸிஸ்டெண்டா இருந்த நாள்களிலேயே- மேசை மேல நிலுவை வெக்கவே மாட்டேன்' என்றான் சம்பத்.

படி இறங்கினார்கள். வரிசையாக நின்ற ஜீப்களின் டிரைவர்கள் 'வணக்கம் சார்' என்றனர்.

'மவராசன்யா...பைல் எதையும் தன் மேசைல பாக்கி வைக்கிறதே இல்ல. காலைல ஜி.பி.எஃப். லோன் போட்டேன். மத்தியானம், பேடு அட்வைஸர் கிட்டப் போயாச்சு. இது மாதிரி அதிகாரியை நான் பார்த்ததே இல்ல...' என்று டிரைவர்கள் சம்பத் பற்றிப் பேசினார்கள்.

எல்லாப் ப்யூன்களையும் அட்டெண்டர்களையும், டிரைவர்களையும் 'வாங்க... போங்க' தான். கவனிச்சியா?'

'ஏறுங்க சார் போவோம்...' என்று சைக்கிளைத் தள்ளிக் கொண்டு வந்தான் வசந்த்...

'கொஞ்சம் காலார நடப்போமே வசந்த்...'

பஸ் நிறுத்தம் வரை நடந்தனர்.

தெருவில் நின்று டவுன் பஸ் வரும் வரை நிறுத்தி வைத்துப் பேசினான். பஸ் வந்ததும் 'டாட்டா' காண்பித்து விடை பெற்றான். சம்பத் சேலத்தில் இருந்த காலம் வரை இப்படி வசந்தின் வழி அனுப்புதல் தொடர்ந்தது.

முள்ளுவாடி கேட் அருகில் இறங்கி நடந்த போது சிவசக்தி விநாயக கந்தாவில் (என்ன அபத்தமான பெயர். விநாயகரை அல்லவா முதலில் வைக்க வேண்டும்.) காபி சாப்பிட்டு அறை திரும்பினான் சம்பத்.

ராமு வந்திருக்க மாட்டார். முன்புறம் பொது டி.வி.யில் படம் பார்த்தோ பேப்பர் படித்தோ பொழுது போக்க வேண்டும் என்று நினைத்தான். ஆனால் ராமு சிகரெட் ஊதியபடி அறையில் இருந்தார்.

'ஒரு நாளைக்கு என்ன சார் இவ்வளவு சிகரெட்'...

'கவலை தான், சம்பத்... இரண்டு ஆண்டுகள் ஆயின.. சேலம் வந்து. சென்னைக்கு மாற்றல் கேட்டு அலுத்துப்போச்சு. வரவர உடம்பும் சொன்ன படிக்கேட்பதில்லை. ஓட்டல் சாப்பாட்டில் வயிறும் ரிப்பேர் ஆகி விட்டது. சேலம் டு மெட்ராஸ் போய் வந்து இங்கேயும் தங்கி ஏகப்பட்ட கடன் ஆகி விட்டது. அதைப்பத்தி நம் மேலதிகாரிகளுக்கு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

என்ன கவலை. தாங்கள் மட்டும் சென்னையிலேயே சௌக்யமாக இருந்து சாயங்காலம் ஆனா பெண்டாட்டி பிள்ளைகளைப் பாக்க முடியுது...தனி மனித சோகங்களை அவங்க காதுல போட்டுக்க மாட்டாங்க....எங்க வீட்லயும் திட்டறாங்க..

ஆனது ஆயிட்டுது... போதும் நீங்க உத்தியோகம் பார்த்தது... வாலண்டரி ரிட்டயர்மெண்ட் எழுதிக் கொடுத்துட்டு வாங்கன்னு... சர்வீஸ் ரெண்டு வருஷம் இருக்கு.. ஏ.சி.பிரமோஷன் வரணும் எனக்கு. அப்பவாவது மெட்ராஸ்ல குடுக்க மாட்டானான்னு ஒரு சபலம். நாகர்கோவில்ல போட்டுடுவானோ என்னவோ?'

சென்னைக்கு மாற்றல் கிடைக்காதது பற்றி ராமு புலம்பினாலும் அவர் ஒரு ஆபீஸ் மேனேஜர் என்பதால் அவர் பை எப்போதும் கனத்துத்தான் இருந்தது. பார்ட்டி தயவில் அவரின் எல்லாச் செலவுகளும் ஓடி விடும்.

'இந்த ஊர்ல பெரும்பாலும் மலையாளிகள் நடத்தும் ஹோட்டல் தான்' என்றார் ராமு.

சாப்பிட்டுத் திரும்புகையில் எத்தனை நாட்களுக்கு ராமுவுக்குத் தொல்லை கொடுப்பது என்று நினைத்தான் சம்பத். ஓர் இடத்தில் கொட்டை கொட்டை எழுத்துக்களில் எழுதி இருந்த விளம்பரம் அவன் பார்வையில் பட்டது

திருச்சூர் லாட்ஜ். அறைகள் மாத வாடகைக்குக் கிடைக்கும்.

பேஷ் பேஷ்.. இந்த லாட்ஜைப் பார்த்தால் என்ன ராமு சார்?'

'பார்த்தால் போச்சு..' என்று ராமு சிகரெட் பற்ற வைத்துக் கொண்டு படி ஏறினார்.

'ரூம் வாடகைக்கு இருக்குமா? சார்...'

'சாருக்குத்தான்' என்றார் ராமு அங்கிருந்த குட்டை பெஞ்சில் அமர்ந்தபடியே...

'இங்கே காலியே இருக்காது... உங்க அதிர்ஷ்டம் நேத்துத்தான் ஒருத்தர் காலி பண்ணினாரு...'

> 'இந்த லாட்ஜில் பெண்கள் கூடத் தங்குவது உண்டா?'
> 'வருமானமே அவங்களால தான சார்... பின் பக்கம் அஞ்சு ரூம் எதுக்கு என்று நினைத்தீர்கள். டெய்லி வாடகை என்றுபெயர். பகல் நேரத்துலயே கிராக்கியோட வருவான். இரண்டு மூணு மணி நேரம் இருப்பார்கள். போய் விடுவார்கள். பாட்டில் எல்லாம் கூட உடை படும்' என்றான் ரகுராம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

'வாடகை என்ன? ரூமுக்கு எத்தனை பேர்...'

'மூணு பேரும் உண்டு...நாலு பேரும் உண்டு...ஆனா உங்க ரூம்ல ரெண்டு பேர்தான்...கார்னர் ரூம்... போய்ப் பாத்துட்டு வேணா வாங்க'.

மொட்டைத் தலையும், அழுக்கு லுங்கியும், கலர் பனியனுமாக நின்ற அறைப்பையன் சம்பத்தை அழைத்துச் சென்றான்.

தெருவைப்பார்த்த அறைமுதல் அறை. அறையின் முன் புறம் சிறிய நடை...குட்டைச்சுவர். அங்கே ஒரு இரும்பு மடக்கு நாற்காலி போட்டு அமரலாம். நின்று தெருவை வேடிக்கை பார்க்கலாம்.

அடுத்த அறை பூட்டி இருந்தது. அந்த அறையில் இருப்பவர் எங்கோ வெளியில் போயிருந்தார். பூட்டும் சாவியும் அவரின் சொந்தம். அவர் திரும்பி வரவேண்டும்.

முதல் இரண்டு அறைகளை அடுத்து ஒரு வழி...அது குளி, கழிவறைகளுக்குச் செல்லும் பாதை. இதில் மூன்று. அதில் மூன்று அறைகள். திறந்த வெளியில் ஒரு குழாய் மேடை. வெறுமனே முகம், கை கால் கழுவ...நடை பாதையில் சைபர் வாட் பல்ப் எரிந்தது.

அய்ந்து அறைகள் கடந்தால் ராமு உட்கார்ந்திருக்கும் இடம் வந்து விடும். இன்னும் அந்தக் 'கை வாடையில் மேலும் அய்ந்து அறை களாம். அவை தினசரி வாடகைக் காம்.

'இன்ஸ்பெக்டடா?'என்றார் ராமு.

'மாத வாடகை இருநூற்றி இருபத்தி அய்ந்து ரூபா முன் பணமாகச் செலுத்தி வரணும். இடையில் காலி பண்ணிணீங்கன்னா பணத்தைத்திருப்பித் தர மாட்டோம். இருந்து கழிச்சிட்டுத் தான் போவணும்', என்றான் லாட்ஜ் முதலாளி இளைஞன்.

சம்பத் இருநூற்றி இருபத்தி அய்ந்து ரூபாய் கொடுத்தும் அவனுக்கு ரசீது ஏதும் தரப்பட வில்லை. இளைஞன் ஒரு நோட்டில் குறித்துக் கொண்டு, 'சரி எப்போ வேணா வந்து ஆக்குபை பண்ணுங்க' என்றான்.

'இன்னும் ஒரு மணி நேரத்துல சார் வருவாரு' என்று ராமு எழுந்தார்.

இந்த லாட்ஜுக்கு எதிர் லாட்ஜ்தான் 'இப்போது ராமு இருப்பது. அந்த லாட்ஜின் கம்பீரம் என்ன? வழவழப்பு என்ன? இப் போது தங்கப்போகும் லாட்ஜின்.... சரி ஏதோ ஒன்று அவசரத்திற்கு...

ஒரு மணி நேரமும் ராமு கைகளைத் தலைக்கு அண்டைக் கொடுத்து கட்டிலில் சாய்ந்து கால் மீது கால் போட்டு கண்ணையும் மூடிக் கொண்டிருந்தார்.

'நான் கிளம்பவா சார்?' சம்பத் எழுந்தான். மணி இரவு பத்தை நெருங்கிக் கொண்டிருந்தது.

'ரைட்டோ. ஆல் த பெஸ்ட். அடிக்கடி சந்திப்போம்.' என்று ராமு கை குலுக்கினார்.

'உங்க உதவிகளை மறக்க



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மாட்டேன்'.

'ஓ... நோ. திக்கற்றவர்க்கு தெய்வமே துணை...நம்மை மாதிரி குடும்பத்தைப் பிரிந்து வாழறவங் களுக்கு நாம தான் பரஸ்பரம் துணை...'

முதல் அறை திறந்திருந்தது. சம்பத் ப்ரீஃப் சூட்கேசுடன் வரவும் கட்டிலில் படுத்திருந்த வாலிபன் எழுந்து, 'வெல்கம், அயாம் ரகுராம்' என்று கை குலுக்கினான்.

சம்பத்தின் வயதில் பாதி கூட இருக்காது அந்த இளைஞனுக்கு சொந்த ஊர் குருவாயூராம். ஏதோ கம்பனியில் சேல்ஸ்மேன். பையைத் தூக்கிக் கொண்டு தர்ம புரி, ஹோசூர், ஈரோடு, கோயம் புத்தூர் என்று அலையும் வேலை.

கட்டிலை ஒட்டி சுவரோரம் சூட்கேஸை வைத்தான் சம்பத். ப்ரீஃப்கேஸைத் தலையணையாக வைத்துக்கொண்டான். ஜமக்காளத் தையும் போர்வையையும் எடுத்து கட்டில் மீது போட்டான்.



'குடி தண்ணீர் இருக்குமா? இங்கே...'

'போய்க்கொண்டு வருவோம்..' என்று பாட்டிலுடன் புறப்பட்டான் ரகுராம். சட்டை போட்டுக் கொண்டு கதவைப் பூட்டி படி இறங்கினான்

'ஏன் டி,வி பக்கத்துல ட்ரம்ல குடி நீர் இருக்குதே'

'அய்ய கண்டவன்ல்லாம் அதுலக் கைவிட்டு மோள்ளுவான். வியாதி வரும் நீங்களும் இது மாதிரி ஒரு பாட்டில் வாங்கிடுங்க.'

பக்கத்து ஒட்டலில் நுழைந்து தண்ணீர் பெற்று மீண்டனர்.

'டெய்லி இப்படியா? ஒட்டல் காரன் தப்பா நினைக்க மாட்டானா?'

'தினம் அவன் ஹோட்டல்ல தான நாம சாப்பிடறோம்...'

இவர்கள் திரும்பி வந்ததும் 'என்னா குருவாயூர்... புச்சாத் தண்ணி பிடிச்சாந்தியா? கொண்டா குடிப்போம்' என்று கூடவே ஓர் இளைஞன் வந்தான்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

'காருகுடி கனகா... நீ போய் இதே மாதிரி வாங்கிட்டு வா...' என்றான் ரகுராம்.

'காரக்குடின்னு ஒழுங்காச் சொல்லத் 'தெரியலை. இவனெல்லாம் பி.ஏ. கிராஜுவேட்டாம் சார்..' என்றபடி உள்ளே வந்து கட்டில் மீது அமர்ந்தான். 'நான் அஞ்சுல இருக்கேன் சார்'.

'உங்க பேரு என்ன கனகாவா?'

'கனகாம்பிகா சிட்பண்ட்ஸ்ல வேலை பார்க்கறேன். அதனால அப்படிக் கூப்பிடறான். இவன் வேலை பார்க்கிற ஒயின் கம்பெனி பேரைச் சொல்லிக் கூப்பிடலாமா சார்... அதென்ன? பாக்கெட் டிரான்சிஸ்டரா? எடுங்களேன் பாட்டுக் கேட்போம்..'

ஏதோ சினிமாப் பாட்டை சத்தமாக வைத்து விட்டு தாளம் போட்டான். 'என் பேரு ஆறு முகம் சார்'.

'சிட் பண்ட்ஸ்ல உங்களுக்கு என்ன சம்பளம். என்ன வேலை?'

'பில் கலெக்டர் வேலை.... என்னப் பொல்லாத சம்பளம்... தொள்ளாயிரம் ரூபா...'

'தொள்ளாயிரத்துல இருநூறு ரூபாய் வாடகைக்குக் கொடுத்துடறீங்களே..'

'ஆமா சார். மத்த செலவுகளைக் குறைச்சுக்க வேண்டியது தான். இங்க ஒரு ஆச்சி மெஸ்ல சாப்பிட்டுக்கறோம்.'

'ரேடியோவின் வால்யூமைக் குறையுங்களேன்.'

'அது பாட்டுக்கு பாடட்டுமே சார். பிடிக்கலையா..?'

ஆறுமுகம் குள்ளமாக ஒல்லியாக இருந்தான். தலை வழுக்கை. பின் மண்டையில் மட்டும் மயிர். நீளப்பற்கள். சாயம் போன கைலி. முண்டா பனியன். அதில் பல ஓட்டைகள். சம்பத் கொட்டாவி விடுவது கண்டு, 'படுங்க சார்' என்று டிரான்ஸிஸ்டரை நிறுத்திக் கொடுத்து விட்டுச் சென்றான்.

ஒன்றுக்கு இருக்க சம்பத் புறப்பட்டான். அதே சமயம் அங்கே வந்த இருட்டு நிற இளம் பெண் ஒருத்தி குழாயடி மேடையில் வழித்துக் கொண்டு உட்கார்ந்தாள். சம்பத் திடுக்கிட்டான்.

அவள் சம்பத்தைப் பார்த்தாள். ஆனால் எழுந்திருக்கவில்லை.,. காரியத்தை முடித்துக் கொண்டு கால் அலம்பாமல் சென்றாள்.

'இந்த லாட்ஜில் பெண்கள் கூடத் தங்குவது உண்டா?'

'வருமானமே அவங்களால தான சார்...பின் பக்கம் அஞ்சு ரூம் எதுக்கு என்று நினைத்தீர்கள். டெய்லி வாடகை என்றுபெயர். பகல் நேரத்துலயே கிராக்கியோட வருவான். இரண்டு மூணு மணி நேரம் இருப்பார்கள். போய் விடுவார்கள். பாட்டில் எல்லாம் கூட உடை படும்' என்றான் ரகுராம்.

'அவர்களுக்கு லெட்ரின்...?'

'இதே தான். இவர்களுக்கு மட்டுமா? கீழே கடை வைத்திருப்பவன் எல்லாம் மேலேறி வருவான்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஒரு ரூபாய் கொடுத்து... நமக்கு ஏன் வியாதி வராது. நான் இந்த மாசத்தோட போயிடுவேன். எதிர் லாட்ஜில் சொல்லி வச்சு அட்வான் சும் கொடுத்தாச்சு. இதை விட நூறு ரூபாய் தான் அதிகம்...'

'எனக்கும் ஒரு ரூம் சொல்லி வையுங்க...'

******

காலையில் பல் தேய்க்கவும் வேறு காரியம் பண்ணவும் க்யூவில் நிற்க வேண்டி வந்தது. அறைக்குத் திரும்பிய போது ரகுராம் படுத்தே இருந்தான். 'பாத்ரூம்ல கூட்டம் குறையட்டும் சார்'.

அந்த லாட்ஜில் நிறையக் கல்லூரி மாணவர்கள் இருந்தனர். மூன்றாவது அறையில் குரியர் சர்வீஸ்... நாலாவதில் போர்டு போட்டுக் கொண்டு வக்கீல். அய்ந்தாவதில் நிறையத் தையற் கலைஞர்களை வேலைக்கு வைத்திருக்கும் பெரும் டெய்லர். அவரின் கடை எதிர் சந்தில். அவர் கனகாவுக்கு அறைத் தோழர்.

பாத்ரூம் காலியானதும் சம்பத் நுழைந்தான். பாதிக் குளியலில் 'டொக்...டொக்... எவ்வளவு நேரம்யா.. வெளிய வா...'

சம்பத் ஈரத் துணிகளைத் தோளில் போட்டுக்கொண்டு அறை திரும்பியதும், அறை வாசலில் கைகளை மடக்கி விட்ட படி ஆறுமுகம் நின்றான்.

நெற்றியில் விபூதிக் கீற்று.

'பாவம் கல்லூரி மாணவர் களுக்கு லேட் ஆயிடிச்சி போலி ருக்கு.. கதவைத் தட்டிட்டாங்க...'

ஆறுமுகம் சிரித்தான். 'என் குரலைக் கண்டு பிடிக்க முடிய லியா... நான் தான் விளையாட்டுக் குத் தட்டினேன். நீங்க கதவு மேல போட்டிருந்த கைலி நல்லா இருந்தது. ரைட் குடுத்துலாமான்னு பாத்தேன்'.

'கேட்டாக் குடுத்திருப்பேனே...'

'ஊஹூம் அதுல த்ரில் இல்ல..'

சேலம் டவுன் பஸ்களில் சென்னை போல அவ்வளவு நெரிசல் இல்லை. முள்ளுவாடி கேட் அருகே அடுத்தடுத்து பஸ்கள் வரும். பெரும்பாலும் பத்து மணிக்கு முன்னதாக தன் சீட்டில் இருப்பான் சம்பத். பத்து நிமிடங்களில் பார்வதி 'குட்மார்னிங்' என்று அட்டென் டண்ஸ் எடுத்து வந்து நீட்டுவாள். சில சமயம் போக்குவரத்து தடைபட்டு பஸ் சந்து பொந்துகள் சுற்றி வந்தால் லேட் ஆகி விடும். அப்போதுகளில் வாதிராஜன் பெருந்தன்மையாக அவன் பெயருக்கு முன்னே முகாம் என்று போட்டு வைப்பார். ரொம்பவும் மரியாதை தெரிந்த மனிதர் என்று சம்பத் நினைத்தது உண்டு.

கண்ணப்பன், வாரம் ஒரு முறை தான் அலுவலகம் வரலாம் என்கிற விதிப்படி முகாம் போய்விட்டார். கோமேதகமும் மற்ற உதவி யாளர்களும் சம்பத்தின் அருகில் உள்ள ஸ்டூலில் அமர்ந்து பேசு வார்கள். கொஞ்சம் ஆபீஸ் வேலை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

யும் நடக்கும். சம்பத்தின் அறையில் அவனும் வசந்த குமாரும் தான் எப்போதும்.

'நீங்கள் தினமும் ஆபீஸ் வந்தால் உங்களுக்கு வேலை இருக்காது சார். நீங்களும் கேம்ப் போகணும் சார். டூர் ப்ரோக்ராம் போட்டு ஜே.டியின் அனுமதிக்கு அனுப்புங்க' என்றான் வசந்த்.

ஓமலூர், வீரபாண்டி, ராசிபுரம் நாமக்கல், மோகனூர், திருச்செங் கோடு, கொளத்தூர் , மேட்டூர். முதல் பதினைந்து தினங்களுக்கு ஒரு நிகழ்ச்சி நிரல் போட்டு அனுப் பினான். அனுமதிக்கப்பட்டது என்று கையெழுத்தாகி வந்தது.

மெஸ்ஸைத் தாண்டித்தான் வசந்த குமார் தன் வீட்டிற்குப் போகணும். அதனால் மதியச் சாப்பாட்டிற்கு அவன் சம்பத்தைத் தன் வண்டியில் வைத்து அழைத்துச் செல்வான். பெரும்பாலும் பிற்பகல் உணவிற்கு வீட்டிற்குச் செல்பவர் எவரும் சீக்கிரம் திரும்புவதில்லை. வெற்றிலையும், பவுடரும் போட்டுக் கொண்டு - இவர்களை சம்பத்தின் கடலூர் நண்பன் எம்.டி.எல். (மிட் டே லவ்வர்) என்பான்.

மெஸ் தெரு முனையில், வேம்பும் அரசும் திருமணம் செய்து கொண்ட சதுர உயர சிமெண்ட் மேடை உண்டு. வெய்யில் நேரத்திற்கு சுகமாக காற்று. பத்து நிமிடம் அங்கே அமர்ந்து விட்டுத்தான் ஆபீஸுக்கு வருவான் சம்பத்.

'குட்மார்னிங் சார்...'என்று ஒரு குண்டுப்பெண் வந்து நின்றாள். 'நாலு நாள் லீவுல போனேன் சார் இன்னிக்குத்தான் வந்தேன்'

பரங்கிப்பழச்சிவப்பு. மூக்குக் கண்ணாடி இந்துமதி.

'உங்களுக்கு இவங்களும் ஒரு அசிஸ்டெண்ட் சார். இவங்க பேட்ஸூம் உங்க மூலம் தான் ஜேடிக்குப் போகும்' என்றான் வசந்த்.

'எங்கே இருக்கீங்க?'

'புது பஸ் ஸ்டாண்டு பக்கம்.'

'அப்ப பஸ் ஏறாதீங்க- நடந்தே வாங்க... உங்க உடம்பு கரையட்டும்'

'நீங்க தான் பாக்கி. என் உடம்பைக் கிண்டல் பண்ண. நீங்களும் பண்ணி ஆச்சு...' இந்து நடு விரலால் மூக்குக் கண்ணாடியை மேலேற்றினாள்.

'பரவாயில்லை'. என்று வெகுளி யாகச் சிரித்த இந்து, 'நீங்க எழுத் தாளரா சார். நீங்க ஜாயின் பண்ணின அன்னிக்கு ஒரு க்ரீட்டிங் வந்தது. அதுல எழுத்தாளர்னு போட்டிருந்ததாம். ஜே.டியோட அஸிஸ்டெண்ட் சொன்னாங்க' என்றாள்.

'ஆமா'.

மறு நாள் சனிக்கிழமை ஆபீஸ் விடுமுறை. ஆறு முகத்திற்கு ஆபீஸ் உண்டு என்று போய் விட்டான். காலைச் சிற்றுண்டிக்குப் பிறகு ஒரு வேலையும் இல்லை.

கதை எழுத நோட்டைப்பிரித்து வைத்துக் கொண்டு ஒரு கதை எழுதினான். அவ்வப்போது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கதவைப் பூட்டிக்கொண்டு ம சாப்பிட்டு விட்டு வந்தான். மதியம் சாப்பாடு. சாயங்காலம் அய்ந்து மணிக்கு வாக்கில் கதை எழுதி முடிந்தது.

பழைய பஸ் நிலையம் பக்கம் வாக்கிங். இரவில் ஆறுமுகத்துடன் அரட்டை. ரேடியோ சங்கீதம்

ஞாயிற்றுக்கிழமை ஆறுமுகம் சம்பத்தின் கூடவே இருந்தான். புதிய பஸ் ஸ்டாண்டு, அய்ந்து ரோடு லீ பஜார், சேலம் ஜங்ஷன், குகை என்று பஸ்ஸில் ஏறி, ஆறுமுகம் வழி காட்ட எல்லா இடங்களையும் தெரிந்து கொண்டான்.

மதிய உணவிற்கு பிறகு உறக்கம்.

மாலையில் சொர்ண மங்களாம்பிகா சமேத சுவனேஸ் வரர் ஆலயத்தை வலம் வந்து பிரகாரத்தில் அமர்ந்த போது, வெள்ளிக் கிழமை இரவில் ஜன சமுத்திரம் அலை அடித்த கோவில், வெறிச்சோடி இருப்பது கண்டு வியக்காமல் இருக்க முடியாது. எல்லா வீட்டு டி.வியிலும் தமிழ் சினிமா... இப்போது தன் வீட்டாரும் சினிமா பார்த்துக் கொண்டிருப் பார்கள். சம்பத் அருகில் இல்லாதது பற்றி வருத்தமாகப் பேசிக் கொள்வார்கள்என்று நினைத்தான். சம்பத் இருக்கும் லாட்ஜிலும் டி.வி. யின் எதிரில் எப்போதும் கூட்டம் தான். லாட்ஜின் அறைகளில் தங்கி இருப்போரும், கீழே கடைகளில் வேலை செய்வோரும். சம்பத் டி.வி

Greco El (1548-1614 கிரேக்கம்-ஸ்பெயின்)

வெளிப்பாடும், அசல்தனமும் கொண்டுமிருந்தன இவரது படைப்பு கள். பெரும்பாலான சமயப் படங் கள், நீண்டும், திரிபு கொண்டும் கொடூரமானதாகவும் இருந்தன. எனினும், இதன் தாக்கத்தில் நாடகத்தோடு, மாயத்தன்மையும் பொதிந்திருந்தது.

Hogarth.William (1697-1764-இங்கிலாந்து.

ஓவியரும் செதுக்குனருமான இவரின் படைப்புகள், லண்டனில் நடைபெறும் கொடுமைகளையும் தீமைகளையும் பரிகசித்தன. அறநெறி சம்மந்தப்பட்ட வெளிப் பாடுகளை மிக நுட்பமாக கொண்டிருக்கும் இப்படைப்புகள் அவ்வப்போது படைப்புரிமை மீறி திருடப்பட்டன. வாழ்வின் முழுப் பரிமாணத்தோடு இயல்பாய் சாதாரண மக்களை வெளிப்படுத்தி னார்.

Holbein. Hans. The Younger (1497-1543-ஜெர்மனி)

உருச் சித்திரம் வரையும் இவரது படைப்புகளில் ஒளியும், நிழலும் தீவிர முரண் கொண்டிருக்கும். இங்கிலாந்தின் ஹென்றிVIIIன் உருவச் சித்திரம் மிகவும் பிரசித்த மானது.

–மிருத்யு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

யின் பக்கம் திரும்புவதே இல்லை. அதே போல லாட்ஜ் முதலாளிகள் வாங்கும் தினத் தந்தியையும் கூட்டம் மொய்க்கும். இவன் தெருவில் நடக்கையில் முகப்பில் தொங்கும் தினசரிகளைப் படிப்பதோடு சரி. ஒரு சமயம் சென்னைக்கு வந்திருந்த எழுத்தாளர் ஜி. நாகராஜன்,' மன நிம்மதி வேண்டுமா? நியூஸ் பேப்பர் படிக்காதீர்கள்' என்று சொன்னதைக் கடைப்பிடிக்கிறானோ என்னவோ!

மறுநாள் காலையில் சென்னையிலிருந்து சம்பத்தின் மனைவி கடிதம் எழுதியிருந்தாள். ரூபாய் அதிகம் ஆனாலும் டீஸண்டான லாட்ஜில் ரூம் பார்த்து தங்குங்கள், என்று எழுதியிருந்தாள். அட்ரஸ் தான் ஜே.டி என்பதற்குப் பதிலாக ஏ.டி ஆபீஸ் என்று எழுதியிருந்தாள்.

அடுத்த நாள் சென்னைக்குச் செல்ல வேண்டியிருந்ததால் ராஜாஜி மார்க்கெட் வரை நடந்து- வழியெங்கும் கொட்டிக் கிடக்கும் மாம்பழக் கடைகள்- ஒரு கடையில் இரண்டு டஜன் நடுச்சாலை மாம் பழம் பேரம் பேசி வாங்கினான்.

முச்சந்தியில் ஒரு சிறிய கோவில். ஆனால் பிரும்மாண்டமான பிள்ளையார்.

'இது என்ன கோவில்' ஆறுமுகம்.

'இவர்தான் ராஜகணபதி. கேள்விப்பட்டதில்லையா? சேலம் என்றாலே ராஜகணபதியும் மாரியம்மனும் நினைவிற்கு வர வேண்டும்'.

*அய்யா ராஜ கணபதி! ப்ரமோஷன் என்ற பெயரில் என்னைத் தூக்கி உம் ஊரில் போட்டு விட்டார்கள். நீர் தான் என்னை மறுபடியும் என் குடும்பத்துடன் சேர்க்க வேண்டும்.*

என்று மானசீகமாக் பெட்டிஷனை பிள்ளையாரிடம் சமர்ப்பித்து விட்டு உண்டியலிலும், குருக்கள் தட்டிலும் காசு போட்டான்.

புதன் கிழமை எல்லோர்க்கும் சம்பள் நாள். சம்பத்துக்கு இல்லை. எல்.பி.சி என்ற லாஸ்ட் பே சர்ட்டிபிகேட் பழைய ஆபீஸிலிருந்து வந்தால் தான் இந்த ஆபீஸில் சம்பளம் வாங்க முடியும். பழைய ஆபீஸிலிருந்து சர்ட்டிபிகேட் வரவில்லை. கோமேதகம் தன் செக்ஷன் கதவுகளை மூடிக் கொண்டு பணம் எண்ணி, பெயர்கள் எழுதிய கவரினுள் போட்டுக் கொண்டிருந்தார். ஜே.டி, டி.டி.க்களைக் கூட்டி தன் அறையில் மீட்டிங் நடத்திக் கொண்டிருந்தார். ஜாயின் பண்ணிய அன்று ஜே.டியின் முகத்தைப் பார்த்தவன் தான் ஒருவாரமாக அவர் இவனைக் கூப்பிடவே இல்லை.

'நீங்க கிளம்பிப் போகலாம் சார் நாங்க பாத்துக்கறோம்.'

'ஜே.டி எப்ப உங்களக் கூப்பிட்டாலும் இப்பத்தான் கிளம்பிப் போனாரும்போம்'. என்றான் வசந்த் சிரித்தபடி. அன்று கண்ணப்பன் ஆரம்பித்து வைத்த வழக்கம் சம்பத் ஒரு வருஷத்திற்கு அதையே கடைப்பிடித்தான்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வெள்ளிகளில் மதியம் இரண்டரை ஆனால்புறப்பட்டுவிடுவான். யாரும் கவனிக்காதபடி தெருவில் இறங்கி பள்ளத்திலிருந்து ஏறி வரும் டவுன் பஸ்ஸைக் கையைக் காட்டி அஞ்சு ரோடில் இறங்கி, கள்ளக் குறிச்சி அல்லது ஆத்தூர் பஸ் பிடித்து ஒரு மணி நேரப்பயணத்தில் ஆத்தூரில் இறங்கி, ஏதோ கண்ணில் பட்ட ஒட்டலில் மதிய உணவு முடித்து விட்டு வெளியே வந்தால், பஸ் ஸ்டாண்டிலிருந்து திருவள்ளுவர் புறப்பட்டுக் கொண்டிருப்பார். கை காட்டி நிறுத்தி, ஜன்னலோரம் அமர்ந்து, இரவு பத்து மணிக்கு சென்னை வந்து சேரல்.

ஒரு பைலில் வாதிராஜன் ஏதோ எழுத, சம்பத் மறித்து எழுத, ஜே.டி. சம்பத்தின் குறிப்பைத்தான் ஏற்றார். இதனால் வாதிராஜன் சம்பத் ஆபீஸ் வரத் தாமதமானால் தகவல் இல்லை என்று குறித்தார். தகவல் இல்லை என்று நீர் ஏன் போட்டீர் என்று சம்பத் கேட்க, 'நீங்கள் நாளை கேம்ப் போவதென்றால் இன்றே மூவ்மெண்ட் ரிஜிஸ்டரில் எழுதுவது தானே' என்றார்.

'அப்பா...' கட்டிக் கொண்டான் முரளி... சம்பத்திற்கு அழுகையே வந்து விட்டது.

'ஒரு வருஷம் பாக்காம இருந்தது மாதிரி ஆயிட்டது' என்றாள் மனைவி.

'வாங்க உங்களுக்காக சாப்பிடாமக் காத்திருக்கிறோம்' என்றார் கேரளாவிலிருந்து வந்திருந்த மைத்துனர். தினமும் அப்பாவின் ஞாபகமாக சம்பத்தின் கைலி மீது படுத்து உறங்குகிறானாம் முரளி...

இவளும் சம்பத் முகாம் போய் விடும் நாட்களில் அவன் கைலியை தோள் மீது போர்த்திக் கொண்டு விட்டு வேலைகளில் ஈடுபடுவது வழக்கம். மூன்று நாள் லீவு ஓடியே போய் விட்டது. ஞாயிற்றுக்கிழமைகளில் படுக்கையிலிருந்து எழுந்திருக்கும் போதே அன்றிரவு பயணப்பட வேண்டுமே என்ற எண்ணம் வருத்தத்தைத் தந்தது. 'அய்யயோ அப்பா ராத்திரி போய்டு வார்றா..' என்பாள் மனைவி. முரளியும் 'ஆமாம்மா' என்பான் சோகமாக..

இந்தப் புலம்பலும், வருத்தமும், சோகமும் ஒவ்வோர் ஞாயிறும், ஒரு வருஷம் முழுவதும் நீடித்தது.

இரவு எட்டரைக்குப் புறப்பட்டான். ஒரு மைத்துனன் சாம்பைக் கொண்டு வந்து நிறுத்தினான். பிரியா விடை...ரயில்வே ஸ்டேஷனில் விட்டு விட்டு வந்தான் மைத்துனன். ரயிலில் ஏறி, கோட்டையில் இறங்கி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

திருவள்ளுவர் பஸ் நிலையம் வந்தான். 'சேலத்திற்கு ஒன்றும் கூட்டம் இருக்கப் போவதில்லை' என்று அலட்சியமாக வந்த சம்பத் திகைத்துநின்றான்.

'திருவள்ளுவர்–அண்ணா–ஜீவா எதிலுமே இடம் இல்லை.

இப்போது சென்ட்ரல் ஓடி ஏற்காடு எக்ஸ்பிரஸிலும் ஏற முடியாது. நாளை எப்படித்தான் ஆபீஸ் போவது?.

திருவள்ளுவர் பஸ்ஸ்டாண்டின் வெளியே பெரியார் பஸ் நின்று கொண்டிருந்தது. கள்ளக் குறிச்சி. அதன் உள்ளும் பயணிகள் நின்றனர்.

'இந்த பஸ் எத்தனை மணிக்குங்க...?'

'பத்தே முக்காலுக்கு... ஆனா புல்லாயிடுச்சுன்னா எடுத்துடு வோம்' பீடி பிடித்துக் கொண்டிருந்த டிரைவர் சொன்னான்.

'புல்லாயிடிச்சி போலருக்கே. நின்னுக் கிட்டே போக முடியாதே.'

'நீங்க வேணா அந்த முன் சீட்ல போய் உங்கார்ந்துக்குங்க.டிரைவர் சொன்னதா சொல்லுங்க'

சம்பத் உட்காரப்போன போது கண்டக்டர் சத்தம் போட்டார். 'யாருப்பா அது...?'

'மணி நாந்தான் சொன்னேன்' என்றார் டிரைவர்...

'ஆங்... எனக்கும் இடம் வையுங்க...'

பத்து நிமிடங்களில் பஸ் புறப்பட்டது. டிக்கெட் வாங்கியதும் சம்பத் ஆழ்ந்து உறங்கிப்போனான்.

**ஆம்பூரு கத்திரிக்கா...**
**வேம்பூரு துப்படிக்கா...**
**உட்டாலங்கிடி கிரிகிரி**
**என் மனசு மயங்குதடி கண்ணம்மா.**

கண் விழித்துப் பார்த்தான் சம்பத். இரவு மணி பன்னிரண்டு. டீ குடிப்பதற்காக மாமண்டூரில் நின்றிருந்தது.

இறங்கி நாலணாக் கொடுத்து ஒன்றுக்கு இருந்து விட்டு பஸ்ஸில் ஏறினான். விட்ட தூக்கம் பிடித்துக் கொண்டது.

கள்ளக் குறிச்சியில் பஸ் நின்றபோது மணி அய்ந்து. பக்கத்திலேயே சேலம் பஸ் நின்றது. ஏறி அமர்ந்து டிக்கெட் வாங்கி மறுபடித் தூக்கம்..

காலை ஏழரைக்குச் சேலம். குளியல் இத்யாதிகள் முடிந்து சரியாக ஆபீஸுக்குபோய் விட்டான்.

'அன்னிக்கு நீங்க போனதும் ஜே.டி உங்களைக் கூப்பிட்டார்'

'அய்யய்யோ!...'

'ஒண்ணும் பயப்படாதீங்க. என்ன ஆயிடும்?. நீங்களும் அதிகாரி' என்றான் கோமேதகம்.

சீப்பை எடுத்து தலையைப்படிய வாரி முகத்தை அழுந்தித் துடைத்துக் கொண்டு சென்றான்.. ஜே.டி. ஏதோ சந்தேகம் கேட்டார். சம்பத் விளக்கம் சொன்னான். ஜே.டி. அட்வைஸரைக் கூப்பிட்டார். அவர் ஏதோ சொன்னார். 'நீர் இப்படிச் சொல்றீரு... அவரு அப்படிச் சொல்றாரோ' என்றார் ஜே.டி.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எப்போதுமே சம்பத்துக்கு 'நீர் கீர்' மரியாதை பிடிக்காது. 'உமக்கு எது பிரியமோ அதை வைத்துக் கொள்ளும்' என்று வந்துவிட்டான்.

சம்பத் சொன்னது தான் சரி என்று வாதிராஜனிடம் ஜே.டி. சொன்னதாகத் தகவல் வந்தது.

இரவு முழுவதும் தூங்காததால் சம்பத்தின் உடம்பு முழுவதும் வலித்தது. 'படுத்து ஓய்வு எடேன்' என்று உடம்பு கெஞ்சியது. எப்படி முடியும். வாலி வரவு சலான் களை -ஆயிரம் இருக்கும்- சம்பத்தின் மேசையில் அடுக்கினான். சேது அடுக்கடுக்காக செலவுச்சீட்டுகளை.

'இதுல எல்லாம் கையெழுத்துப் போட்டுடுங்க. இன்னிக்கே தபால்ல அனுப்பனும் தலைமையகத்துக்கு.

அன்றிரவு படுக்கையில் விழுந்த போது, அடடா! தூக்கம் என்பது (படுக்கையில் படுத்துத் தூங்குவது என்பது) இவ்வளவு சுகமான விஷயமா என்று நினைத்தான்.



அடுத்த நாள் ப்ரோக்ராம் படி அவன் ஓமலூர் செல்ல வேண்டும்.

அரை மணிப் பயணத்திலேயே ஓமலூர் வந்து விட்டது. டெப்போ மேனேஜர் அப்போது தான் கடையைத் திறந்து கொண்டிருந்தார். அதிகாரி என்றதும் முகம் மலர்ந்து உடனே காபி வரவழைத்தார். கேஷ் புக், ரசீதுப் புத்தகம், ஒரு மாத வரவு, கருவூலத்தில் செலுத்திய தொகை... அரை மணியில் வேலை முடிந்துவிட்டது. மேனேஜர் ஏதேதோ பேசிக் கொண்டேயிருந்தார். சம்பத் குடும்பம் பற்றி, சம்பத்திற்கு முன்பு இருந்த அதிகாரி சாலை விபத்தில் இறந்தது பற்றி....

'இருங்க சாப்பிட்டு விட்டுப் போகலாம்'

'அதெல்லாம் வேணாம்'.

'நீங்க அப்படிச் சொல்லக் கூடாது. நாற்பது டெப்போல நீங்க எந்த டெப்போவை செக் பண்ணப் போனாலும் நாங்க மேனேஜர்ஸ் சாப்பாடு போட்டுத்தான் அனுப்பு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வோம். நீங்க சாப்பிட மறுத்தீங் கன்னா, நீங்க எங்கள அவமதிச்சதா வருத்தப்படுவோம்...'

'இது வேறயா...?'

அவன் சாப்பிட்டு விட்டு பஸ் ஏறினான். அய்ந்து ரோடில் இறங்கி வேறு பஸ் பிடித்து ஆபீஸ் சென்றான். பைல்ஸ் பார்த்தான்.

மறு நாள் ஆபீஸ் டூடி. முன் தினமே எல்லா பைல்ஸையும் பார்த்து விட்டதால் வேலையே இல்லை.

வியாழக்கிழமை ஒரு நாள் சங்கரகிரி கேம்ப் போய் மதியம் ஆபீஸ் திரும்பினான். ஜே.டி. அழைத்து, 'எதுக்காக இப்படி வேகாத வெய்யில்ல ஆபீஸ் வருகிறீர். ஒரு நாள் ஆபீஸ் வாரும். மறு நாள் கேம்ப் போய்ட்டு வாரும். அன்று ஆபீஸ் வரவேண்டாம். அடுத்த நாள் வந்தால் போதும். ஆனால் எச்சரிக்கை. திங்களும் வெள்ளியும் ஆபீஸ் வரணும்...'

ரொம்ப நல்லதாகப்போயிற்று. செவ்வாய் வியாழன்களில் கேம்ப் போனால் பிற்பகல் இரண்டு மணிக்கெல்லாம் அறைக்குத் திரும்பி விட முடிகிறது. படுத்திருந்து நல்ல ஓய்வு. இருட்டும் வேளையில் மிக்கேல் கான், சிந்தியா ரோக் நடித்த இங்கிலீஷ் படங்களுக்குப் போய் விடுவான். இந்த இரு பெண்களும் போடும் சண்டைக்கு முன்னால் நம் ஊர் விஜய சாந்தி எல்லாம் சும்மா. வியாழன்களில் சினிமா போகும் அவசரத்திலும், ராஜ கணபதியைத் தரிசனம் செய்து உண்டியலில் காசு போட்டு, வழியில் யதிராஜ மடத்தில் நுழைந்து ராகவேந்திரருக்கு நமஸ்காரம் செய்யாமல் போக மாட்டான்.

வெள்ளிகளில் கேம்ப் போனால் விரைவாக சென்னைக்கு பஸ் ஏற முடியாமல் வேலை இழுத்துவிடும். ஆபீஸில் என்றால் பன்னிரண்டரைக்கு வீதிக்குத் தாவிவிட முடிகிறது.

முதல் வாரத்தில் அவதிப்பட்ட பிறகு சம்பத் எச்சரிக்கையாகி பிரதி சனி காலைகளில் மைத்துனனை விரட்டி, திருவள்ளுவரில் ஞாயிறு இரவுப்பயணத்தை உறுதிப்படுத்திக் கொள்வான்.

ஞாயிறு இரவுகளில் பாதி தமிழ் சினிமா தான் பார்க்க முடியும். எட்டு மணி ஆனதும் மிதமாகச் சாப்பிட்டு, எட்டே காலுக்கே புறப்பட்டு, சில சமயம் மைத்துனனின் சாம்ப் சவாரி. சில சமயம் (பெட்ரோ இல்லை அல்லது வண்டி ரிப்பேர் காரணங்களால்) பஸ்ஸில் போய், பத்துமணிவரைக் காத்திருந்து, வழக்கமான பயணிகள் வந்தாயிற்றா என்று மனசுக்குள்ளேயே அட்டென்டண்ஸ்... ஃப்யர் சர்வீஸ் சூப்பிரண்டு மாமா- பிள்ளை எவனாவது பஸ் ஏற்ற வருவான்.

'டே என்னடா. கடைசி சீட் குடுத்திட்டான். முன் சீட் மாத்தித் தரமுடியுமான்னு கண்டக்டரைக் கேளு...ஒடம்பு சரியில்லேன்னு சொல்லு'.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இன்னொருத்தி ஆசிரியையோ? வாரம் தோறும் கனமான லெதர் பேக் கொண்டு வருவாள். தலையை உச்சிக்கு மேல் தூக்கி வாரி இருப்பதில் அவளுக்கு நாக தேவதை என்று பெயர் வைத்திருந் தான் இவன். கர்ம சிரத்தையாக அவளின் பனங்காய் மண்டை அப்பா கையில் ஸ்டிக், பாண்ட், ஸ்லாக், மூக்குக் கண்ணாடி.... பஸ் கிளம்பும் நேரம் வரை இருந்து டாட்டா காட்டி விட்டுப் போவார்.

பஸ் கிளம்பிய உடனே சம்பத்தைத் தூக்கம் தழுவிவிடும். பன்னிரண்டு மணிக்கு மாமண்டூரில்

**மெரினாபீச் ஓரம் காதல் பண்ணுதாம்.**
**பெத்த தாயை மறக்கச் சொல்லுதாம்.**
**ஆஆஆ...ஏஏஏ...ஓஓஓ...லேலேலே**
**சின்ன வயசுல அதுவும் நம்ம சைசில...**

என்று கானாப் பாடல் பாடும் போது விழிப்பு வரும்

நாலணா ஒன்றுக்கு. மறுபடி நாலஸ்ரை மணிக்கு ஆத்தூரில் தெரு ஓரம் டீ சாப்பிட நிற்கையில் ஒன்றுக்கு.

அய்ந்தே முக்காலுக்கு சேலம். அறைதிரும்பி ஏழுமணிக்கு அலாரம் வைத்து விட்டு மீண்டும் தூக்கம்.

சில காலைகளில் மூன்று மணிக்குப் பக்க பஸ் ஷெட்டில் 'டர்...புர்'என்றுதொடர்ந்து ரிப்பேர் பார்த்தால் தூக்கம் அவ்வளவுதான். நேர் எதிரே உள்ள ஓட்டலின் மாடி முகப்பு வெளிச்சம் கண்ணை உறுத்தும். ஜன்னலைச் சாத்தலும்.

ஒரு மாதத்திற்குப் பிறகு எதிரே இருந்த டீசெண்ட் லாட்ஜின் இரண்டாவது மாடி அறைக்கு மாறினான்.

இந்த லாட்ஜில் ஏற்கனவே ராமுவோடு வந்துதங்கிய அனுபவம் உண்டு.

சொந்த ஊரையும் வீட்டையும் பிரிந்து இந்த லாட்ஜில் வந்து வாடுவோர் தான் எத்தனை பேர்? அரசு மருத்துவமனை கண் டாக்டர் பரதன் (கையில் எப்போதும் சிகரெட்)பட்டை விபூதி (கைகளிலும் கோடுகள்)

எல்.ஐ.சி முதலீடு கார்ப்பரேஷன் ஜார்ஜ், சிறு சேமிப்புத் துறை இஸ்மாயில்.

'அய்யோ.... சொந்த ஊர் கிடைக்காத ஆத்திரத்துல எத்தனை பேரின் கண்களைக் குருடாக்கு கிறானோ அந்த டாக்டர்' என்று சிரித்தான் வசந்த்.

'அப்படி எல்லாம் இல்ல. சொந்த சோகத்தை வேலையில் காண்பிப்பதில்லை' என்றார் பரதன்.

ஒரு ஃபைலில் வாதிராஜன் ஏதோ எழுத, சம்பத் மறித்து எழுத, ஜே.டி சம்பத்தின் குறிப்பைத்தான் ஏற்றார்.

இதனால் வாதிராஜன் சம்பத் ஆபீஸ் வ்ரத் தாமதமானால் தகவல் இல்லை என்று குறித்தார். தகவல் இல்லை என்று நீர் ஏன் போட்டீர் என்று சம்பத் கேட்க, 'நீங்கள் நாளை கேம்ப் போவதென்றால் இன்றே



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மூவ்மெண்ட் ரிஜிஸ்டரில் எழுதுவது தானே' என்றார். அப்படியே சம்பத் செய்து வந்தான்.

கோவை எக்ஸ்பிரஸ் சேலத் திற்கு மாலை நாலுக்கு வந்து சென்னை வர இரவு பத்தரை ஆகி விடும். பொகாரோ ஸ்டீல் எக்ஸ்பிரஸ் திருவனந்தபுரத்தில் இருந்து எல்லாப் பெட்டிகளும் காலியாக பிற்பகல் மூன்றுக்கு வரும். சென்னை சேரும் நேரம் இரவு ஒன்போது மணி.

சமயங்களில் பொகாரோவைப் பிடிக்கப் பரபரப்பான் சம்பத். அய்ந்து நிமிடங்களே இருக்கும். காளிமுத்து தன் மோட்டார் சைக்கிள் பின்னால் சம்பத்தை ஏற்றி வந்து, டிக்கெட் வாங்கி சுரங்கப்பாதையில் ஒடி, சம்பத் தொற்றியதும் ஜிக் என்று ரயில் புறப்பட... ஸ்டேஷனுக்கு வெளிய நின்று காளிமுத்து கை அசைக்க... சிலசமயம் வசந்தும் சம்பத்தை சைக்கிளில் வைத்துப் பொகாரோ பிடிக்கவிரைவதுண்டு.

சேலம் வந்து நான்கு மாதங்கள் ஆனதும் சென்னை அலுவலகம் சென்று மாற்றல் கேட்டு நின்றான் சம்பத்.

ஒரு வருடம்ஆகாமல் கிட்டே வராதே என்று டைரக்டர் சீறியதில் ஒடி வந்து விட்டான். டைரியில் ஒவ்வொரு மாத இறுதியிலும் குறித்தான். நான் சேலம்வந்து ஒன்று இரண்டு....மூன்று...

பன்னிரண்டு மாதங்கள் ஓடி விட்டன.

சம்பத்தின் ஒன்று விட்ட மைத்துனர் 'இதோ நாளையே உன்னை சென்னைக்குக் கொண்டு வர நான் ஆயிற்று' என்று ஒரு சப் இன்ஸ்பெக்டரிடம் -ஏதோ மந்திரிக்குப் பாதுகாவலர் அவர்- அறிமுகப்படுத்தினார்

'உங்க இலாகா மந்திரி கிட்ட இருக்கிற இன்ஸ்பெக்டரும் நானும் தோஸ்துங்க...'

ராமுவிற்குப்பதவி உயர்வு தந்து நாகர்கோவிலுக்குப் போட்டு விட்டார்கள். ராமு வருத்தத்துடன் சென்றார்.

போலீஸ்காரன் வீட்டிற்கு நடையாய் நடந்ததுதான் மிச்சம். பெருந்தொகையை காணிக்கையாக எதிர்பார்த்தோ என்னவோ போலீஸ் இன்ஸ்பெக்டரும் 'இதோ... அதோ' என்றார். வீட்டில் அவர் இல்லை என்றால் அவரின் பணியிடமாகிய மந்திரி வீட்டிற்கே சென்று பார்ப்பான்.

'சே நானும் ஒரு மந்திரி ஆகி இருக்கணும். இந்த நாட்டில் அது தான் சக்தி மிகுந்த பதவி'.

பொறுக்க முடியவில்லை. நாளை முதல் இருமாத லீவில் சென்று விடப்போகிறான் சம்பத். வருவது வரட்டும்.

அன்று அவனுக்கு சேலத்தில் கடைசி நாள் என்பதால் காளிமுத்து வின் வீட்டில் விருந்து. தெருவில் காளிமுத்துவின் பைக் உறுமி உதறி நின்றது.

'போவோமா? சார்'



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பொருண்மை அற்ற போழ்துகளில்

நா. கண்ணன்



நியூயார்க் ஜான் எஃப் கென்னடி சர்வ தேச விமான நிலையம். எல்லோரும் காலில் சக்கரம் மாட்டிக் கொள்ளாத குறையாக ஓடிக் கொண்டிருந்தனர். இங்கிருந்து பார்த்தால் எல்லாம் தெரிகிறது. வண்டி மை போன்ற கருமையான ஜனங்கள், பால் வெள்ளையாக பல மாந்தர்கள், கொஞ்சம் மஞ்சளும் வெள்ளையும் கலந்த குள்ளமான மனிதர்கள், மாநிற ஜனங்கள், தொப்பி வைத்தவர்கள், குல்லா போட்டவர்கள், ஒல்லிகள் குண்டுகள், ஃபுல் ஸ்கர்ட்டு, மினி ஸ்கர்ட், மடிசார்... ஆங் மடிசார்!

'சீனிவாசா போயிட்டு வர்றேன். ஒடம்ப பத்திரமாப் பாத்துக்கோ. இந்த குளிரிலே இருந்து என்ன ஆராய்ச்சி பண்ணறையோ. உங்க



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அப்பா இருந்தா சொல்வார். கழுதைக்குத் தெரியுமா கற்பூர வாசனைன்னு'.

'ஏம்மா, நீயே அப்படி உன்னைத் தாழ்த்திக்கறே? எனக்கு எங்கேர்ந்து மூளை வந்திடுத்து? உன்னோட, அப்பாவோட மூளைதானே...'

'அவரோட மூளைன்னு வேணா சொல்லு. எனக்கு எப்ப இருந்தது. இருந்திருந்தா இப்படி மடிசார் புடவையும் அதுவுமா ஒண்ணுமே போட்டுக்காம அலையற ஊர்ல வந்து நிப்பேனா?'

'உனக்கு இவாளக் கேலி பண்ணாட்டா முடியாதே... போறச்சே எஸ்க்லேட்டர்ல பாத்து ஏறு. கால் தடுக்கிடாம... பிளேன்ல போரடிச்சா, வாக் மேன்ல பாட்டுக் கேளு. நித்யஸ்ரீ நன்னா பாடறான்னு ஒரு சி.டி. வாங்கினேன். அதை உனக்கு கேசட்ல போட்டிருக்கேன். ஊருக்குப் போன உடனே போன் பண்ணு...சரிம்மா.போய்ட்டு வா...'

'வரேண்டாப்பா...போன உடனே எனக்கு இருக்கு ஹரிகதா காலட்சேபம். உனக்கு உன்னோட கான்பிரன்ஸ்... அடுத்த வாரந் தானே உன்னோட புது தியரியைப் பத்திப் பேசப்போற. பகவான் இருக்கான். கவலைப்படாம நன்னா பண்ணு...'

சரிம்மா... உன் ஆசீர்வாதம்.

மடிசார் மாமி எஸ்க்லேட்டரில் கால் தடுக்கி விழாமல் ஏறி பறந்து விட்டாள்.நித்ய ஸ்ரீ பாட்டைத்தான் ரொம்பக்கேட்க முடியவில்லை. 'டேக்ஆஃப் போது உபயோகிக் காதே. லாண்டிங் போது அணைத்து 'விடு' என்று பாதி நேரம் கேட்க விடாமல் செய்து விட்டனர். இருந்தாலும் மாமி கேட்டிருக்க முடியாது. ஏனென்றால் மாமி மீதி நேரம் தூங்கி விட்டாள்.

ஒரு வாரம் ஓடி அந்த நாளும் வந்தது. தியரிடிகல் பிஸிக்ஸ் எனும் இயற்பியல் துறையில், சக்கைபோடு போடும் வெங்கடேச ஸ்ரீவத்ஸ சீனிவாசன் என்ற சீனு அன்று இயற்பியலின் அடிப்படையை உலுக்கும் தன் கோட்பாட்டை, நியூயார்க் அகாதமி ஆப் ஸயின்ஸ் என்ற பேரறிஞர் கழகத்தில் விண்டு வைக்கப் போகிறான்.

ரோட்னி நிகோலஸ் சீனுவை அறிமுகப்படுத்தி வைத்து ஒரிரு வார்த்தைகள் பேசினார். அதில் சில வார்த்தைகள் உலகத்திலேயே அதிகமாக அறிமுகமான இயற் பியல் சமன்பாடு. ஐன்ஸ்டைன் என்ற மாமேதையின் $E=MC^2$ என்ற சமன்பாடு. 'ரிலேட்டிவிட்டி என்பதும் இச் சமன்பாடும் ஒன்றென ஆகிவிட்டது. டாக்டர். சீனிவாசன் இன்று அதற்கு புது விளக்கம் தரப்போகிறார். சென்ற வருடம் இக்கோட்பாட்டை பிஸிகல் ரெவியுவில் வெளியிட்ட போது அதிக பரபரப்புக்கு உள்ளான கருத்து இது. நமது கழகத்தில் இன்று அவர் பேச வந்திருப்பது இக்கோட்பாட்டை மீண்டும் கேட்டு விவாதிக்க நமக்கு ஒரு வாய்ப்பை தந்திருக்கிறது'.

பின் சீனு பேசினான்.

'மற்ற துறைகள் போல் இயற்பியலும் வளர்ந்து வருகிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வளர்தலின் முக்கியமான அடையாளம் கேள்விகள்... நல்ல, சிந்திக்க வைக்கும் கேள்விகள். இதுவரை நாம் புரிந்து கொண்ட வற்றைப் பற்றிய கேள்விகள். கேள்விகள் இன்றி வளர்தல் இல்லை. பின் நவீனத்துவ இயற்பியல் காலத்திலிருக்கும் நாம், பழைய இயற்பியல் சமன்பாடு களைக் கேள்வி கேட்டு, புதிய விளக்கம் கிடைக்குமாவெனப் பார்க்க வேண்டும். ஐன்ஸ்டைன் சொல்வான், 'நான் அறிய விரும்புவது எல்லாம் அந்தக் கடவுள் நினைவு என்ன என்பது தான்'. கடவுளுக்குப் புதிய விளக்கங்கள் தேவைப்படும் கால மிது. ஐன்ஸ்டைனின் பிரபலமான சமன்பாட்டில் பொருண்மை, சக்தி, ஒளிவேகம் வருகின்றன. அதாவது பொருண்மை என்ற ஸ்தூலமான வஸ்து, திரியும் போது சக்தியாக மாறுகிறது. உதாரணமாக சூரியனின் சக்தி இரண்டு நீர்வளி அணுக்கள் சேர்ந்து ஹீலியம் அணு வாக மாறுவதால் ஏற்படுகிறது என்று நம்பப்படுகிறது. வானியல் புத்தகத்தை எடுத்துப் புரட்டினால் சொல்லும்– 'இரண்டு நீர்வளி அணுக்கள் இணையும் போது கொஞ்சம் பொருண்மை இழப்பு நடக்கிறது. அந்த இழப்பானது சக்தியாக மாறிவிடுகிறது' என்று.

*****

மெட்ராஸில் டிசம்பர் சீசன் ஆரம்பித்து விட்டது என்றால் எல்லா சபாக்கும் எதாவது ஒன்று தந்தாக வேண்டும். பாட்டு,

**இயற்பியல் பிரபஞ்சத்தில் இருப்பதெல்லாம், எடையில்லா சக்தியின் தன்மைகளும், அகண்ட, சக்தி மயமான, எங்கும் நிறைந்த மின் காந்தபுலமும் தான். இவை இரண்டின் செயல்பாடுகள் சேரும் போது பொருண்மை என்றொரு தோற்றம் நிகழ்கிறது'.**

நாட்டியம், கொட்டுமேளம், பஜனை, பாகவதம் ஏதாவது ஒன்று. மயிலை ஆர்.ஆர் சபாவில்... மன்னிக்க... ரஸிக ரஞ்சனி சபாவில் பாகவதம் தொடங்கியது. மாலை நான்கி லிருந்து ஆறுவரை ஒரு பிரசங்கம். பின் ஏழு மணியிலிருந்து ஒன்பது மணிவரை அடுத்த பிரவச்சனம். இப்படி எட்டு நாட்கள், ஜேசுதாஸ் பாட்டுக் கச்சேரிக்குக் கூடுவதுபோல் இதற்கும் சபை நிரம்பி வழியக் கூட்டம் கூடுகிறது.வராண்டாவில் உட்கார்பவர்கள் பார்க்கத் தோதாக வீடியோ ஒலி பரப்பு வேறு...

'சார் இந்தவசி ஒரு பிரவச்சனம் கூடவிட்டுப் போகக் கூடாதுன்னு ஒரு வாரம் லீவு போட்டுட்டேன். மேல் அதிகாரி கொஞ்சம் அழுதான். அவனுக்கு என்ன தெரியும் பாகவதத்தின் பெருமை..

வாசலில் இரண்டு பேர் பேசிக் கொண்டார்கள்.

*****



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பழைய விளக்கம், பொருண்மை என்ற அடிப்படை விஷயம் சக்தி என்கிற அடிப்படையான விஷயமாக மாறுகிறது என்று சொல்கிறது. நாங்கள் என்ன சொல்கிறோம் என்றால் பொருண்மை என்ற அடிப்படை வஸ்துவே இல்லை. அதாவது பிரபஞ்சத்தில் இருப்பதெல்லாம் சக்தி மயமாகவே இருக்கின்றது. (இது முதல் குண்டு. போட்டு விட்டு கொஞ்சம் மினரல் வாட்டர் பருகினான்).

ஐன்ஸ்டைன் சமன்பாடு சொல்வதெல்லாம், எவ்வளவு சக்தி தேவைப்பட்டால் பொருண்மை இருப்பது போன்ற ஒரு தோற்றத்தைத் தர முடியும் என்பது தான். இவ்வகையில் நோக்கினால் அச்சமன்பாட்டிற்கு 'வெயிட்' கூடுகிறது. அதாவது, இருப்பது, சக்தியும்; அதன் தன்மைகளும் (Energy and Electric charges) தான். இவை இரண்டும் சேர்ந்து பொருண்மை போன்றதொரு தோற்றத்தைத் தருகின்றன. இயற்பியல் பிரபஞ்சத்தில் இருப்பதெல்லாம், எடையில்லா சக்தியின் தன்மைகளும், அகண்ட, சக்தி மயமான, எங்கும் நிறைந்த மின் காந்தபுலமும் தான். இவை இரண்டின் செயல்பாடுகள் சேரும் போது பொருண்மை என்றொரு தோற்றம் நிகழ்கிறது'.

சீனு ஒரு உதாரணம் கொடுத்தான். அதை உங்களுக்கு சொல்வதானால் இப்படியிருக்கும். அதாவது நீங்கள் இப்போது படித்துக் கொண்டிருக்கும் கணையாழி புத்தகத்திற்கென்று தனியாக பொருண்மை கிடையாது. அதாவது எடை இல்லை என்று அர்த்தம். இயற்பியல் வார்த்தையில் சொல்வதானால், இந்த கணையாழி என்ற புத்தகம் பல்லாயிரக்கணக்கான சக்தி தன்மைகள்; அகண்ட சக்தியுள்ள மின்காந்தப் புலத்தில் பதிந்து கிடக்கின்றன. பதிந்துள்ள அச்சக்தியின் தன்மைகள் மீது மின்காந்தப் புலம் நிகழ்த்தும் எதிர் வினைதான் உங்களுக்கு ஒரு புத்தகம் கையிலிருப்பது போன்ற தோற்றத்தைத் தருகிறது.புத்தகம் ஏதோ ஸ்தூலமான வஸ்து போலவும் அதற்கொரு எடை உண்டு என்பது போலவும் தோன்றுவதெல்லாம் மின் காந்தப்புலமும், சக்தியின் தன்மைகளும் சேர்ந்தே நடத்தும் செயல்பாடுகளால்தான்

*****

சீனுவின் அம்மாவும் பிரவசனத்திற்கு கிளம்பிக் கொண்டிருந்தாள். பழைய பாரதி பாடலொன்று எம்.எஸ். சுப்புலட்சுமியின் இனிய குரலில் தவழ்ந்து கொண்டிருந்தது.

**ஆதியாஞ் சிவனுமவன் சோதியான**
**சக்தியுந்தான்**
**அங்குமிங்கு மெங்குமுளவாகும்-ஒன்றே**
**யாகினுலுகனைத்தும்சாகும்-அவை**
**யன்றியோர் பொருளுமில்லை**
**அன்றியொன்றுமில்லையிதை**
**ஆய்ந்திடில் துயரமெல்லாம் போகும் – இந்த**
**அறிவுதான் பரமஞானமாகும்.**

மாமி பாட்டைக் கேட்டுக் கொண்டே வெளியே கிளம்பி, பஸ் ஸ்டாண்டில் வந்து நின்ற 12 ஏ பல்லவனில் ஏறி உட்கார்ந்தாள்.
*****



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பொருண்மை (mass) என்பது தான் என்ன? ஒரு பொருளுக்கு பொருண்மை தோன்றுவது அதன் தன்னியல்பான தயங்கலாலும் புவியீர்ப்பினாலும் தான். கலிலியோ, பொருள்களின் தன்னியல் தயங்கலைச் சொல்லும் போது, 'எந்தப் பொருளுக்கும் ஒரு உந்து சக்தி கொடுக்கும் போது நகர்கிறது. உந்து 'சக்தி' இல்லா விடில் 'சிவனே' என்று நின்று விடுகிறது. மீண்டும் சக்தி கொடுத்தால் நகர்கிறது.' நியூட்டனும் யோசித்துப் பார்த்தான். இயற்கையில் பொருளுக்கு தன்னிச்சையான தயங்கல் எங்கிருந்து வந்தது என்று. அவனும் அவனுக்குப் பின் வந்தவர்களும் இதற்குச் சரியான விளக்கம் காணவில்லை.

எங்களது ஆராய்ச்சி கோடி காட்டுவது என்னவென்றால் பொருள்களின் தயங்கல் இயல்பு, எங்கும் பூரணமாய் நிறைந்துள்ள மின்காந்தப் புலத்தினால் வருகிறது. இதை நாம், பாழ், நிலைப் புலம் Zero Point Field-ZPF எனலாம். இது உலகிற்கு கடல் போல் பின் புலமாக அமைகிறது. இந்த மின் காந்த வீச்சு, அண்டம் முழுவதும் சரி நிகராக, நிறைவாக அமைந்திருப்பதால், இதை உணர்வதோ, அளப்பதோ முடிவதில்லை. இவ்வீச்சு, பூச்சியத்திலிருந்து ஆரம்பமாகிறது. அதற்கு பின் புலம் சூன்யம்தான். இந்த zpf, உள்ளும் புறமும் எங்கும் நிறைவாய் இருப்பதால் இதைத் தனியாக அறிவது கடினமாக இருக்கிறது. ஒரு பொருள், வெளியில், அதி வேகமாக விரைந்து முன்னேறும் போது இப் பின்புலம் கலங்குவதால் அதன் இருப்பு உணரப்படுகிறது'.

சீனு மீண்டும் மினரல் வாட்டர் குடித்தான்.

*****

12-A நகர்ந்து, குலுங்கி, சப்தித்து, ஒடித்து, வளைந்து மயிலை நோக்கி நகர்ந்து கொண்டிருந்தது.

'இந்த ஜே.கே என்ன சொல்ல வருகிறார் என்பதைப் புரிந்து கொள்வதற்குள் தலையைப் பிய்த்துக் கொள்ள வேண்டியிருக்கிறது'.

பின்னால் பேசும் பேச்சு மாமி காதில விழுந்தது. **என்ன புரியலேங்கிறா?**

கொஞ்ச நேரம் கழித்து ஆழ்ந்த யோசனைக்குப் பின் ஒருவன் சொன்னான். 'தன்னலம், சுயம் நான், அகந்தை எல்லாம் எண்ணத்தின் பிறப்பால் விளைவது. எண்ணமோ எப்போதும் ஓடிக் கொண்டேயிருப்பது. எண்ணம் பழைய காலத்தில் ஆரம்பித்து கொஞ்ச நேரத்தில், எதிர் காலத்தில் -கற்பனையில்- சஞ்சரித்துக் கொண்டிருக்கிறது. அதாவது எண்ணத்திற்கு திசை தேவையாய் இருக்கிறது. கிழக்கு, மேற்கு, தெற்கு வடக்கு. அது ஓடிக் கொண்டிருக்கும் வரை 'நான்' இருந்து கொண்டே இருக்கிறது. எண்ணம் எந்தத் திசையிலும் ஓடாமல், திக்கு இல்லாமல், 'சிவனே' என்று நிற்கும் போது 'நான்' இருப்பதில்லை. இருப்பதெல்லாம் ஒன்று தான். அப்போது அது எங்கும் நிறைந்து



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இருக்கிறது... சபாஷ்... இப்போது புரிந்துவிட்டது., எண்ணம் ஓடாமல் இருக்கும் போது விழிப்பு தான் மிஞ்சுகிறது. விழிப்புதான் இறைமை'

இவர்கள், பேச்சு கவனத்தில் இருக்கும் போது, பல்லவன் விரைவாய் ஒரு வளைவில் ஒடிக்க, அவன் தலை, மாமி உட்கார்ந்திருந்த சீட் கம்பியில் 'ணங்' என்று மோதி 'அம்மா' என்ற ஒலியுடன் அந்த சம்பாஷணை முடிந்தது.

*****

இந்த zpf எப்படி முதலில் தோன்றியது. குவாண்டம் இயற்பியல் தான் இதற்கு விடை சொல்லும். சக்தியே இல்லாத பாழ் நிலையிலும் அணுக்களின் அடிப்படைத் துகள் களான ஒளிச்சான்கள்-photons ஒரு பாதி நிலையில் இருந்தோ இல்லை இல்லாமலோ இருக்கலாம். ஒரு சராசரியாய் பார்த்தால் இப்படி இருக்கின்ற நிலையிலுள்ள ஒளிச்சான்கள் ஒன்று சேரும்போது அண்டத்தில் அபரிதமான சக்தி தோன்றி விடுகிறது ஏனெனில் zpfன் சக்தி அடர்த்தி,' அலை வரிசைக்கு மும் மடங்கு என்ற விகிதத்தில் பெருகிவிடுவதால் முதலில் தோன்றிய சக்தி பிரும்மாண்டமானதாக இருக்கும். இருந்தாலும் முடிவில் தோன்றிய சக்தி-இதைக் குவாண்டம் இயற்பியல் வார்த்தையில் சொல்வதானால்- இச்சக்தியில் உள்ள zpf உண்மையாக(real) இருக்கலாம், அல்லது தோற்றமாக (virtual)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இருக்கலாம்.

மாக்ஸ் பிளாங் தொடங்கி எத்தனை விஞ்ஞானிகள் இப்படியொரு புரிதலுக்கு உதவியிருக்கிறார்கள் என்று சீனு சொன்ன இயற்பியல் சமன்பாடுகள் எல்லாம் இப்போதைக்கு வேண்டாம்.

*****

மேகத்தில் மின்னல் பளிச்சிடுகிறது. க்ஷண காலம் தான். அதற்குள் மகா சக்தியை, மகா ஜோதியைக் கொட்டி விடுகிறது. இத்தனை சக்தி இப்போது தான் மின்னலாய்த் தோன்றினாலும், இதற்கு முன் அது இல்லாமல் இல்லை. இல்லாதது எப்படித் தோன்றமுடியும்? ஸயண்டிஸ்ட்கள் 'எப்போதும் எங்கேயும் மின்சாரம் நிறைந்திருக்கிறது' என்கிறர்கள். ஆனால் சாதாரணமாக அது தெரிவதில்லை. பின் எப்போது தெரிகிறது? நீராவி மேகமாக மாறித் திரிகிற போது, ஒன்றாக இருக்கிற மின்சாரம், சில பகுதிகளில் வல அம்சமாகவும்(+) சிலவற்றில் இட அம்சமாகவும்(-) பிரிந்து நிற்கிறது. பிற்பாடு மழைச் சமயத்தில் மேகங்களில் ஒருவிதமான நெரிசல், குமுறல் உண்டாகிற போது- வல அம்ச பகுதிகளும் இட அம்ச பகுதிகளும் நெருங்குகிற போது- இந்த அம்சங்கள் ஒன்றையொன்று சரேலென்று ஆகர்ஷித்துக் கொள்கின்றன. இப்படித் தாவிக்கலக்கும் போதுதான் எங்கும் நிறைந்திருக்கிற மின்சாரம், நமக்குத் தெரிகிற மாதிரி, இத்தனை சக்தியுடன் மின்னலாக வெளிப்படுகிறது.

**நியூட்டனின் இயற்பியலின் பொருண்மை, அதன் தன்மையான தயங்கல் இவையெல்லாம் ஏதோ ஸ்தூல வஸ்து போல் எண்ணிக் கொண்டிருப்பதை மாற்றிக் கொள்ள வேண்டிய காலம் வந்தாகிவிட்டது. பொருள்களின் உள்ளேயிருக்கும் அம்சம் Zpfஆல் கவரப் படும் போது ஏற்படும் நிகழ்வே பொருட்களின் தயங்கல் என்பது. மின்நிலைச் சமனான நியூட்ரான் துகளுக்குக் கூட இது பொருந்தும்.**

எங்கும் ஒன்றாக இருந்த போது இருப்பதே தெரியாமல் இருந்த மின்சாரம், இரண்டாகப் பிரிந்து, பிறகு மறுபடி ஒன்றாக சேருகிற போது பெரிதாக ஜொலிக்கிறது. ஒலிக்கிறது இடியாக...

இது ஜட சக்தியான மின்சாரம். இந்த ஜட சக்திக்கு ஆதாரம் இதைப்பிறப்பித்த சித் சக்தி- ஞான சக்தி- அறிவுச் சக்தி. தன் சக்தியை அறிந்து கொள்ளாமலேயே எங்கேயும் பரம்பொருளாக அது இருக்கிறது. அப்புறம் பாஸிட்டிவ் நெகட்டிவ்வாகப் பிரிகிறது. அதைத் தான், 'சிவன்' ,'சக்தி' என்கிறோம். தமிழில் 'இடது', 'வல்து' என்று மின்சாரத்திற்குச் சொல்கிறோமே அது தான் மிகவும் பொருத்தம். ஏனென்றால் ஈசுவரன் வலப் பக்கமும், அம்பாள் இடப்பக்கமும் இருப்பது தான் அர்த்த நாரீஸ்வரர் கோலம்'.

வாசலில் யாரோ வருவதைப் பார்த்து உரத்து வாசித்துக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கொண்டிருந்த மீனாள் நிறுத்தி னாள்.

'ஏண்டி நிறுத்திட்டே அப்பறம் என்ன சொல்றா பெரியவா?'

'பெரியம்மா வந்திருக்கா பாட்டி'

'யாரு...? கோமாவா...வா வா சரியான நேரத்திற்குத் தான் வந்திருக்கே...மீனா அருள் உரை வாசிச்சுண்டிருக்கா'

'பேஷ். பேஷ். நான் கதா காலட்சேபத்துக்குப் போயிண்டி ருக்கேன். அம்புஜம் வராளான்னு கேட்டுட்டு போகலாம்னுதான் வந்தேன். போற வழியிலதான இருக்கு வீடு. டீ மீனா, கொஞ்சம் ஜலம் கொடு'.

*****

எங்கள் கோட்பாட்டிற்கு, 'பாழ் நிலைப்புலம்' மிகவும் அத்தியாவசிய மானது. இப்புலத்தில் ஒரு பொருள் விரையும் போது, புலம் கலங்கு கிறது. இக்கலங்கல் விரையும் வேகத்தைப் பொறுத்து அதிகமாகிறது. இக் கலங்கலை அளவிட முடியுமா...?

முடியும். இப்படி அளவிடக் கூடிய கலங்கல் தான் இதுவரை பொருண்மையுடன் இயைந்த தயக்கம் (inertia)ஆகக் கருதப்பட்டு வந்திருக்கிறது. நியூட்டனின் இயற்பியலின் பொருண்மை, அதன் தன்மையான தயங்கல் இவை யெல்லாம் ஏதோ ஸ்தூல வஸ்து போல் எண்ணிக் கொண்டிருப்பதை மாற்றிக் கொள்ள வேண்டிய காலம் வந்தாகிவிட்டது. நடப்பது என்ன வெனில் பொருள்களின் உள்ளே யிருக்கும் அம்சம் Zpfஆல் கவரப் படும் போது ஏற்படும் நிகழ்வே பொருட்களின் தயங்கல் என்பது. மின்நிலைச் சமனான நியூட்ரான் துகளுக்குக் கூட இது பொருந்தும். ஏனெனில் உள்ளிருக்கும் குவார்க் துகள்கள் மின் அம்சமுள்ளவை. இதை இப்படிப் புரிந்து கொண்டால் பின் புவியீர்ப்பு விசையைப் புரிந்து கொள்வது சுலபம். எப்படி பொருள்களின் இயல்பான தன்மை யான தயக்கம், பொருள்களின் உள்ளிருக்கும் மின் அம்சத்திற்கும்; பாழ்நிலைப் புலத்திற்கும் இடையில் நடக்கும் நிகழ்வால் உருவாகிறதோ அதே போலத்தான் புவியீர்ப்பு என்பதும் உருவாகிறது.

மின் அம்சமுள்ள துகள் பாழ் நிலைப்புலத்தில் இருக்கும் போது, இடையில் ஏற்படும் கவர்தலால் மின் காந்த அலைகளை உருவாக்கு கிறது. இதனால் பொருள்களின் உள்ளுள்ள மின் அம்சம் அதிர்வடை கிறது. அதிர்வடைந்த நிலையில் மின் காந்தப் புலத்தை உருவாக்கு கிறது. இப்படி துகள்களின் உள்ளே யிருந்து தோன்றிய இரண்டாவது மின் காந்தப் புலங்கள் ஒன்றை யொன்று சந்திக்கும் போது ஆகர்ஷித்துக் கொள்கின்றன. இந்தக் கவர்தலை நாம் புவியீர்ப்பு எனலாம். எனவே புவியீர்ப்பு என்பதும், மின் காந்தப்புலத்தின் வெளிப்பாடே... ஐன்ஸ்டைனின் $E=MC^2$ என்ற சமன்பாட்டை மீண்டும் நோக்கினால் தெரிவது என்ன? சக்தியும் பொருண்மையும் சமமாகக் கூடியவை என்றா? பொருண்மை என்பதே இல்லாத போது சமன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எங்கிருந்து வரும்.? எனவே ஐன்ஸ்டைன் சமன்பாடு சொல்தெல்லாம் பொருண்மை என்பதும் சக்திதான்'

சீனுவிற்கு சில நிமிடங்களே பாக்கியிருந்தன.

*****

கோமா மாமியும், அவள் தங்கையும் ஆர்.ஆர். சபாவிற்குள் நுழைவதற்குள் பிரவச்சனம் ஆரம்பமாகியிருந்தது. சபை நிரம்பியிருந்தது. பிரபஞ்சம் எப்படித் தோன்றியது என்று பாகவதம் சொல்வதை விளக்கிக் கொண்டிருந்தார்.

'முதலில் பரமார்த்த சொருபமான ஈஸ்வரன் ஒருவனே இருந்தான். அவனிடத்திலிருந்து பிரக்ருதி உண்டாயிற்று. ப்ருகிருதியிடமிருந்து மகத் தத்துவம் உண்டாயிற்று. மகத் தத்துவத்திலிருந்து அகங்காரத் தத்துவம் அகங்காரத்திலிருந்து ஆகாசம் உண்டாச்சு. ஆகாசத்திலிருந்து வாயு... வாயுவிலிருந்து அக்னி. அக்னியிலிருந்து நீர். நீரிலிருந்து பூமி. பூமியிலிருந்து பசு, பட்சிகள், ம்ருகங்கள் என்று எல்லாம் ஈசுவரனிடத்திலிருந்து வருகின்றன. இதைத்தான் நம்மாழ்வார் என்ற பெரியவர்.

**ஒன்றும் தேவும் உலகும் உயிரும்**
**மற்றும் யாதும் இல்லா**
**அன்று நான் முகன் தன்னோடு**
**தேவர் உலகோடு உயிர் படைத்தான்.**

என்கிறார்.

**சர்வம் விஷ்ணு சொருபம் என்று** சொல்வது இதனால்தான். இதைப் பிரகலாதனின் அப்பா புரிந்து கொண்டிருந்தால் ஹிரண்ய வதம் நிகழ்ந்திருக்காது.

**எங்கும் உளன் கண்ணன் என்ற மகனைக் காய்ந்து**
**இங்கில்லையால் என்று இரணியன் தூண் புடைப்ப**
**அங்கு அப்பொழுதே அவன் வீயத் தோன்றிய**
**என் சிங்க பிரான் பெருமை ஆராயும் சீர்மைத் தேர்.**

எனவே பிரபஞ்சம் ஈஸ்வர சங்கல்பத்தால் தோன்றியது. அதைப் படைத்து, காத்து, அழித்து, ஒரு பெரிய ஊழிக்கூத்தை ஆடிக் கொண்டிருக்கிறான். அது அவனது லீலை. விளையாட்டு.

**ஊழி தோறும் தன்னுள்ளே படைத்து, காத்து**
**கெடுத்துழலும்**
**ஆழி வண்ணம் என் அம்மான்...**
**வாழி மனமே! கை விடேல்**
**உடலும் உயிரும் மங்க வொட்டேல்.**

என்பது திருமாலிருஞ்சோலை மங்களாசாசனம்.

கூட்டத்தில் நிறையப் பேர் புரிந்த மாதிரித் தலையாட்டிக் கொண்டிருந்தனர்.

*****

சீனு உண்மையான விஞ்ஞானி என்பதால் தங்கள் கோட்பாட்டிலுள்ள குறைகளையும் சுட்டிக் காண்பித்தான். அவைகளுக்கான விடைகளை எப்படி அடைய முடியும் என்றும் தேடி காட்டினான். தாங்கள் இக்கோட்பாட்டை வெளியிட்ட ஒரு வருஷத்திற்குள் மேற் கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகள் எப்படி தங்கள் கருத்தை வலிவூட்டியுள்ளன எனச் சொன்னான். புவியீர்ப்பு என்பதை மின் காந்தப் புலத்தின் வெளிப்பாடு எனக் கொண்டால், எதிர்காலத் தொழில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நுட்பம், புவியீர்ப்பையும் கையாள லாம் என்பதை விளக்கினான்.

இலை மறை காய் மறையாக அவன் கோடி காட்டியது என்ன வெனில் எடை என்னும் தன்மையை இலகுவாக்கி அந்தர் தியானம் ஆகும் வித்தைகள் எதிர்காலத்தில் சாத்தியப்படும் என்பதே.அதாவது புஷ்பக விமானம் இத்யாதி...

அவன் பேச்சு முடிந்தது. நிறையக் கைதட்டல். பல கண்களில் ஆச்சர்யம்... பூரிப்பு. சில கண்களில் அவ நம்பிக்கை. 'சரிதான் இன்னொரு கதை' என்பது மாதிரி. நிறையக் கேள்விகளுக்குப் பதில் சொன்னான். அங்கு இதுவரை சாது வாக உட்கார்ந்திருந்த பாஸ்கரன் எழுந்து சில விளக்கங்கள் கேட்டார்.

'இன்று நீங்கள் சொன்ன கோட்பாட்டிற்குப் பின் புலமாக இந்திய சமய தத்துவங்களிலிருந்து பல விளக்கங்கள் தர முடியும் இப்போது அமெரிக்க பல்கலைக் கழகங்களில் பாட நூலாக வைக்கப் பட்டுள்ள ஒரு யோகியின் வரலாறு என்ற புத்தகத்தில், யோகானந்தர், யோக பலத்தால், ஸ்தூலமான, பொருண்மையுடையது போன்று காட்சியளிக்கும் இந்த உடலை, அதன் அடிப்படை நிலையான சக்தி நிலைக்கு மாற்றி, ஒரிடத்திலிருந்து வேறொரு இடத்திற்குப் போகும் யோக சித்திகளைப் பற்றிப் பேசு கிறார். இவையெல்லாம் இப் பொழுதே சாத்தியப்படக் கூடியவை தான் என்பது இதனால் விளங்க வில்லையா?'

சீனு, தான் இந்தியன் என்பதை விட, விஞ்ஞானி என்பதே சபைக்குப் பொருந்தும் என்பதை உணர்ந்து பதில் சொன்னான்.

'இந்திய சமய விசாரங்களில் இப்படிப் பூடகமான விஷயங்கள் உள்ளதை நானும் அறிவேன். குவாண்டம் இயற்பியலுக்கு இப்படி யொரு பின்புலம் வேண்டும் என்று சொல்வாரும் உளர். அவசிய மில்லை என்று சொல்வாரும் உளர். சமயம் என்ற உடனேயே உண்மைக்கு ஒரு பூச்சு வந்து விடு கிறது. வழிபாடு, புராணங்கள், மூடநம்பிக்கைகள் இவை உண்மையை அண்ட வொட்டாமல் தடுத்து விடுகின்றன. இப் போதைக்கு அறிவியல் தன் காலில் நிற்பதுதான் பலம். இக்கோட்பாடு தவறானால் களைந்து எறியப் படலாம். புதிய தொழில் நுட்பத்தால், புவியீர்ப்பு கையாளப்பட்டு பலன் கிடைத்தால் அது வெளிச்சமான உண்மையாகும். மானுடம் முழுவதும் அதைப் பயன்படுத்த முடியும்.

விஞ்ஞானிகளுக்கு கோவில் இருப்பதாக இதுவரை இல்லை. நன்றி.

கூட்டம் அத்துடன் முடிந்தது.

ஆதாரம் Beyond $E=Mc^2$-
B-Halsch, A.Rueda and
H-E.puthoff

THE SCIENCES-(Nov-Dec-1994)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கவிதைகள் தேர்வு - சுஜாதா

# இலக்குமிகுமாரன் ஞானதிரவியம்

## ராத்திரி

படிக்கட்டில் சரசரக்கிறது
பழுத்த இலைகள்.

தூங்குகிறவன் மீதும்
பொழிந்து போகிறது நிலா.

நிறைவாக நிற்கிறது வேம்பு.

தென்னையோலையில் சடசடக்கிறது
ஆந்தை.

மின்சாரம் ஒருமுறை
சென்று மீள்கிறது.

டார்ச்சை முறைத்துக் கொண்டு
உட்கார்ந்திருக்கிறது வெள்ளெலி.

நெஞ்சு நனைய நீர் பருகி
செம்பருத்தி வேரில் கொப்பளிக்கிறேன்.

சரசரக்கிறது படிகளில்
பழுப்பிலைகள்...

தொடைமீது
கால் விழுகிறது மீண்டும்.

அவன் தூக்குப் போட்டுக் கொண்ட
சட்டத்திற்குக் கீழே
உட்கார்ந்திருக்கிறது பூனை.

# விக்ரமாதித்யன்

அது பாட்டுக்கு
அது.
அவன் பாட்டுக்கு
அவன்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அவள் பாட்டுக்கு
அவள்.
தப்பிப்பிறந்ததெல்லாம்
தையாரே தையாரே தையாரே...

■

நாலாம் நாள்
நண்பர் 'க' வாங்கித்
தந்தது வின்டேஜ்.

முந்தா நேற்று
தோழர் 'வீ' ஊற்றிக்
கொடுத்தது ஒல்ட் ஸ்காட்ச்

நேற்று
சிநேகிதன் 'அ' கூட இருந்து
குடித்தது ப்ளூரிப்பன்.

இன்று தொழில் கூட்டாளி 'பா'
தயவில் ஜானக்ஷா

வார ஆரம்பம்
ஈழத்தமிழ்க்கவிஞன் 'ஆ'
இஷ்டத்துக்கு 5000,

இவனுக்கென்று
இல்லாத நாள் வாழ்வு
விருப்பம் தெரிவு பொழுது.

■

எழுதியதும்
எழுதாதிருப்பதும்
எழுதி வருந்தியதும்
எழுதாதிருப்பதற்கு
வாடுவதும்
எழுதத் தானே கதை...



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## காசி மாரியப்பன்

ஓலமிடும் தொடர்வண்டி
பாலமதிர புகைகக்கி ஓடிப்போயொழியும்.

குரைப்பனைய பேச்செழுப்பி
ஒலிபெருக்கி உயிர்க்குறைக்கும்.

மனிதரழைக்கும் சங்கொலி
பெருங்குரலில் தாக்கிச் சாயும்.

மல்லாத்தித் தரையதிர
சுழன்றொலி வேகச் சக்கரம்
சவ்வைக்கிழித்து மூக்கடைக்கும்.

சிறு துளைப் பெரு கூர் நீராய்
பீய்ச்சித் தாக்கி காற்றொலிப்பான்
ஆள் விலக்கி முன் பாயும்.

கேட்டொடுங்கும்
ஆன்றவிந்தடங்கிய தோடுடை நற்செவி
சற்றும் பொறுக்காது
தாழ் சார்த்தும்,
வாசல் கேட்கும்
ஈனக் குரலொலித் தொடர்பல் கேட்டு.

## புத்தகன்

**உடன் பாடு**

உனக்குமெனக்குமான
விவாதத்தை
இத்தோடு நிறுத்திக் கொள்வோம்.

உன் வழியில் நீயும்
என் வழியில் நானும்
இன்ன பிறர் வழியில் இன்ன பிறரும்
நடந்தேறட்டும்.

உன் வழியில்
ஒருவனை நீயும்,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

என் வழியில்
ஒருவனை நானும்
இலக்காக்கிக் கொள்வோம்.
முடிந்தால்
அவனுக்கு முன் செல்லும்
எவனையாவது
இலக்காக்கி வைப்போமே...

ஊர் முழுக்க பவனி வரும்
உன் பேனாப் பணி-

அட்டைப்பட அலங்காரமின்றி
சொற்பத் தாள்களோடு
சின்ன இறகுகளோடு
இல்லங்களில் அடைகாக்கும்
என்னுடையவைகள்.

காலப்போக்கில்
நாம் உடன்படலாம்.
நான் நானாகயின்றி
நீ நீயாக இல்லாதிருக்கும் ஓர் தினத்தில்.

**பா. ராஜா ராம்.**

## நகர்தல்

தூங்குகிற மகனை
அருகே கிடத்தி படுப்பது வழக்கம்.

நான்- மகன்- இவள்
என்று துவங்கும் தூக்கம்.
சிறுநீர் கழிக்க எழும் போது
நான்- இவள் - மகன் என்றிருக்கும்.

பிறகு இவளுக்காக போக
எழுகையில்
நானும் இவளும் போக
மகன் கிடப்பான்
கதவோர இடுக்கில்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எப்ப, எப்படி நகர்வானோ?
இல்லை,
அவன் அப்படியே கிடக்க
நானும் இவளும் தான்
நகர்கிறோமோ என்னவோ?

பிரக்ஞையின்றி நகர்வது
நன்றாகத்தான் இருக்கிறது.
நானானாலும்
இவளானாலும்
மகனானாலும்.

## சூத்ரதாரி

## இறந்தவர்களின் நகரம்

அகாலத்தில் வந்தது உன் அழைப்பு
என்பதால் ஆயத்தமாய் வரவில்லை நான்.

பறவைகளைத் தொலைத்துவிட்ட
மரங்களனைத்தும்
மௌனமாய் நின்றிருந்தன.

இலைகளின் ஈர இசை- ஏனோ தெரியவில்லை
எலும்புக் குருத்துக்குள் தீச்சொரிந்தது.

கறுப்பைப் போர்த்திக் கொண்ட
வண்ணங்களின் இறுதிச் சாயல்
சாம்பலாகிக் கொண்டிருந்தது.

கல்லறை சதுரங்களின் நெற்றி மேட்டில்
அலுமினியச் சிலுவைகள்.

எண்களில் நின்றிருந்தாய் நீயும்.
அழைப்பு மணியின் அலறலில்
வரவேற்ற நீ
உன் முகத்துடன் இருக்கவில்லை.

முன்னொரு நாளில் உன்னில் கண்ட
மழலையின் முதல் புன்னகை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ரேகையின்றி அழிந்து போயிருந்தது.

அபத்திரத்தைச்சொல்லி நழுவியது
காற்றின் துண்டு.

நீயெதற்கு வேண்டுமானாலும் அழைத்திருக்கலாம்.
அது முக்கியமில்லை இப்போது.

பத்திரமாயிருந்தால் அன்றொரு நாள்
உள்ளங்கையில் ஒப்படைத்த
என் நேசத்தைத் திருப்பிக் கொடு.

## மகுடேசுவரன்

வாரச்சந்தையில் கூவிக் கூவி
உள்ளாடைகள்
விற்றுப் பிழைக்கிறாயாம்.

தெரிந்த சிலரிடம்
என் நலம் விசாரித்தாயாம்.

மருள் கண்கள்
பள்ளங் கண்டு விட்டனவாம்.
சில ஆண்டுகளுக்கு முன்
ஓர் ஏழையின் இதயத்தில்
பார்வையால் குளிர் பொழிந்தவை அவை.

கவ்வுதலுக்குத் தப்பிய அவ்விதழ்கள்
காய்ப்பேறிவிட்டனவாம்.
அவற்றின் கடைகளில் புண்கள் கூட.

அந்தச் சௌந்தர்யம் மொத்தமும்
அடுத்தடுத்து ஈன்றதில்
முற்றாக வடிந்து போயிற்றாமே..

ஆண்டவா...!
கேள்விப் பட்டு,
நினைவுகளை இழுத்துப்போர்த்தித்
தேம்பும் நிலை வேண்டுமா?
பிரிவுகளுக்குப் பின்
தகவலற்றுப் போய்விடக் கூடாதா?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## செய்யாறு வி.பாலு

வழக்கமாய் டவுனிலிருந்து
புறப்படும் என் சைக்கிள்.
ஆறுமைல் அத்தியூருக்கு
வருவதென்னவோ வாடிக்கைதான்.
எதிர் காற்றில் எம்பி மிதிக்கையில்
மார் விரிந்து மூச்சு வாங்கையில்
என்ன பொழைப்புடா?
சவுக்குத் தோப்பையும், ஏரிக்கரையையும்,
ஜல்லி பெயர்ந்த ரோட்டையும்,
கடந்து போகையில் மாடு மேய்க்கும் சிறுவன்
என்னைப் பார்த்துவிட்டுக்
கத்துவான் அடுத்தவனிடம்.
டேய்..! மணி பன்னண்டு...
ஊர்க்கோடி
ஓட்டைப் பள்ளிக் கூடத்துப் பக்கத்திலிருக்கும்
துருப்பிடித்த சின்ன தபால் பெட்டியைத்
திறந்து பார்க்கையில்
வழக்கம் போல் எதுவும் இருக்காது.

## தேவகுமாரன்

### வேண்டல்

உனக்கென்ன மஹாராணி
ஊரெல்லாம் தாஜ்மஹால்.
கிழம் கூட வழியும்- ஏன்
பிணமே கூட வந்து குடை பிடிக்கும்.
பெருமைதானே...
நீ வரும் நேரத்திற்காக
கடிகாரம் காத்திருக்கும்.
அரை நிக்கர் உட்காரும்
இள மீசை எழுந்திருக்கும்.
அல்லி மல்லியெல்லாம் அமிர்தாஞ்சன் தடவும்.
இத்தனை யுத்தம் ஏன்
என்னிடம் சரணடையேன்...?

www.tamilarangam.net

# கணையாழியின் பரிணாம வளர்ச்சி

**வே. சபாநாயகம்.**

இந்த இதழில் ஒரு புதிய அம்சம், கடைசிப்பக்கத்தில், கடைசி விமர்சனம் என்ற தலைப்பில் தொடங்கியது... தமிழ் நாட்டில் மாதக்கணக்கில் ஓடி ஓய்ந்து, புது டெல்லிக்கு வரும் திரைப்படங்களைப் பற்றி உண்மைகளைச் சொல்லிவிடுவது இப்பகுதியின் முக்கிய நோக்கம் என்று குறிப்பிட்டிருந்தார் ஆசிரியர்.

அரசாங்க அழைப்பின் பேரில் டில்லி வந்து ஒரு நாள் நாடகம் நடத்திய சேவா ஸ்டேஜ் குழுவினரின் பாஞ்சாலி சபதம் நாடகம் பற்றியும், சர்வர் சுந்தரம் பற்றியும் ஆசிரியர் கி.க காரசாரமான விமர்சனங்களை இப்பகுதியில் எழுதியிருந்தார்

தலை நகர் பகுதியில் கே.ஸ்ரீ. அவர்கள் இந்த ஆண்டு கூடிய பாராளுமன்றத்தில் வெளியான மத்திய சர்க்காரின் வரவேற்கத்தக்க கொள்கை மாற்றத்தைப் பாராட்டி எழுதியிருந்தார். தாஷ்கண்ட் உடன்பாடு, புதிய தலைவர் இந்திரா காந்தி ஆகிய இரு விஷயங்கள் பாராளுமன்றத்தில் கேள்விக்குறிகளாக இருந்ததையும் சித்தரித்திருந்தார்.

ஒரு தலைமுறைக் காலமாக நாடகக் கலையில் ஈடுபட்டிருந்த நாடகக் கலைஞர் எஸ். வி. ஸகஸ்ரநாமம் அவர்களைப் பேட்டி கண்டு வெளியிட்டதுடன் அட்டையில் போட்டுக் கௌரவித்திருந்தது கணையாழி. பேட்டியின் போது கு.அழகிரிசாமியும் உடன் இருந்திருக்கிறார்.

சங்கீத மேதைகள் பவனி தொடரில் இம்மாதம் ஃபிடில் வித்வான் கோவிந்த சாமிப்பிள்ளை பற்றி, கும்பகோணம் ராஜமாணிக்கம் பிள்ளை சிறப்பித்து எழுதியிருந்தார்.

கமல் என்பவர் எழுதிய ரசமான துணுக்குகள் ராஜாஜி, சாமுவேல் ஜான்சன் ஆகியோரின் சொல்சாதுர்யங்களை வெளிப்படுத்தின. காந்திஜியின் களி மண் வைத்தியம் இன்று உலகம் முழுவதும் ஏற்கப்பட்டிருப்பதை ஒரு பெட்டிச் செய்தி தெரிவித்தது.

இம்மாதம் வெளியாகியிருந்த மூன்று சிறுகதைகளில் ந. முத்துசாமி எழுதியிருந்த கரு வேலமரம் அவரது கிராமமான புஞ்சையை நிலக்களனாகக் கொண்டு சிறப்பாக அமைந்திருந்தது.

பி.ஏ. கிருஷ்ண மூர்த்தி எழுதியிருந்த கடிதம் என்கிற கதை புதுமையானதொரு உத்தியுடன் படைக்கப்பட்டிருந்தது.

மானிடவியல் என்ற தலைப்பில் சு.சக்திவேல் என்பவர் பழங்குடி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மக்களின் வாழ்க்கையைப் பற்றி ஒரு ஆய்வு தொடர் இந்த இதழ் முதல் தொடங்கியுள்ளார். இம்மாதம் அந்தமான் ஆதிவாசிகள் பற்றி அரிய தகவல்களை எழுதியிருந்தார்.

அடுத்த இதழ் (ஆகஸ்ட் 66) ஆண்டு மலராக வருவதை ஒட்டி கணையாழியில் சிறுகதைப் போட்டி ஒன்று அறிவிக்கப்பட்டிருந்தது.

**பரிசுத் தொகையாக ரூ.250.00 ஐ மூன்று சிறந்த சிறுகதைகளுக்கு பகிர்ந்தளிக்கப்படும்** என்றும் பரிசுக்கதைகளில் ஒன்று டில்லி, பம்பாய் கல்கத்தா போன்ற, தமிழ்நாட்டு எல்லைகளுக்கப்பால் வாழும் தமிழர்களின் வாழ்க்கையை நிலைக்களனாகக் கொண்ட கதையாக இருக்கும் என்றும் ஆசிரியர் அறிவித்திருந்தார்.

***சகஸ்ரநாமம் பேட்டியிலிருந்து.***

**கணை**- நீங்கள் இது வரை எத்தனை நாடகங்களை மேடை ஏற்றி இருக்கிறீர்கள். அவற்றில் குறிப்பிட்டுச் சொல்லக் கூடியவை எத்தனை?

**சகஸ்ர**- 26 நாடகங்கள் போட்டிருக்கிறேன். ப்ரஸிடெண்ட் பஞ்சாட்சரம் **போலீஸ்காரன் மகள், தேரோட்டி மகன்** இவற்றைக் குறிப்பிட்டுச் சொல்லலாம். இவை பி.எஸ்.ராமையா எழுதியவை. தி.ஜானகிராமனின் நாடகங்களையும் நாடகமாக்கியிருக்கிறோம். **நாலு வேலி நிலம், வடிவேலு வாத்தியார், டாக்டருக்கு மருந்து**. இப்போது கு.அழகிரிசாமியும் **கவிச்சக்கரவர்த்தி கம்பன்** நாடகத்தை எழுதித் தந்திருக்கிறார். வாழ்வில் வசந்தம் என்கிற எங்கள் சமூக நாடகத்தை எழுதியவரும் இவர்தான்.

**கு.அழகிரி சாமி**- நாடகங்களுக்கு சிறுகதை ஆசிரியரைத் தேடிப் போகிறவர் இவர் ஒருத்தர் தான். அதை முக்கியமாகப் போடுங்க...

**கணை**-இவரது நாடகங்களில் இலக்கிய மணம் கமழ்வதற்கு அதுதானே காரணம்...

■ ஒரு சமயம் ராஜாஜி டெல்லிக்கு வந்திருந்த போது நீண்ட, கோட்டு மாதிரியான சொக்காயை அணிந்திருந்தார். கோட் மாதிரியும் இருந்தது. அதை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்த அன்பரிடம் ராஜாஜி சொன்னார், 'என்ன பார்க்கிறீங்க.? இது கோட்டும் இல்லை ஷார்ட்டும் இல்லை. இது ஷோட்டு'.

■ சாமுவேல் ஜான்சன் ஒரு புத்தக ஆசிரியருக்கு எழுதினார்.

**உங்கள் கையெழுத்துப்பிரதியைப் படித்தேன். அதில் சில பகுதிகள் நன்றாகவும் சில பகுதிகள் சொந்த முயற்சியாகவும் இருந்தது. ஆனால் நன்றாக இருந்த பகுதிகள் சொந்த முயற்சியாக இல்லை. சொந்த முயற்சியாக இருக்கும் பகுதிகள் நன்றாக இல்லை.**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## ஸ • ர் • ஸி • ஜ • ன்

எவ்வளவு அலட்சியமாகக் கேட்டு விட்டாள்...?

'உன்னை நான் இப்போதும் நினைத்துக் கொண்டிருக்கிறேனா' என்று எவ்வளவு அலட்சியமாகக் கேட்டுவிட்டாள்.

'வந்து இரண்டு நாட்களாகியும் வெளியில் வரவில்லையே... பார்க்க வேண்டும் என்று தோன்ற வில்லையா? மறந்து விட்டாயா அவளை?' என்று கேட்டுவிட்டாளே...

ஒவ்வொரு 'சார் போஸ்ட்'க்கும் மாடி இடிவது போல் ஓடி வந்து சலிப்பதும், பூட்டியபின் சிரிக்கும் தொலைபேசியை எடுக்க கதவை உடைத்துக் கொண்டு போய் ஏமாறுவதும், பவுடரைத் தலையிலும், எண்ணையை முகத்திலும் போட்டுக் கொண்டு அலுவலகம் போனதும் அவளுக்கு எங்கே தெரியப் போகிறது.

மறக்க முடியுமா உன்னை என்னால்....

ஆற்றுக்கும் கூடவே வரும் தாயை ஏமாற்ற, துவைத்த தாவணியை மண்ணில் நழுவ விட்டு, அலசும் சாக்கில் தனியே மீண்டும் ஆற்றுக்கு வந்து, காத்திருக்கும் என்னிடமிருந்து கடிதம் பெற்றுச் சென்ற நாட்களை எல்லாம் மறக்க முடியுமா... இந்த உலகில் உன்னை நினைவு படுத்தாத ஒரு விஷயம், ஒரு பொருள், ஒரு உருவம் உண்டா சொல். கூசாமல் கேட்டு விட்டாள். நீ அப்படி நினைக்க மாட்டாய் என்று தெரியும், இருந்தாலும் பயமாக இருக்கிறது.

தேர்வுக்காக வந்திருந்தேன். நான்கு நாள் விடுமுறையில். ஒரே ஒரு நாள் தான் உன்னைப் பார்க்கும் வாய்ப்பும் இருந்தது. ஏன் பார்க்க வரவில்லை என்பதையும் சொன்னேன்.

'கடிதம் இல்லையா?' என்றாள்

இப்போதெல்லாம் புரிந்து கொள்வதில், கருத்துப் பரிமாற்றத்தில் நாம் ஒரு பக்குவமான நிலையை அடைந்து விட்டதாக நான் நினைக்கிறேன். அதனால் தான் அன்று எதுவும் எழுதவில்லை. இன்று இப்படி ஒரு அவசர அவசியம் வந்து விட்டதால், என்னிலை விளக்கமாக இக்கடிதம் எழுதுகிறேன். நடந்த சம்பவங்களை வைத்து தயவுசெய்து எந்த முடிவும் எடுத்து விடாதே...

வந்திருந்தேன் கண்ணம்மா, உன்னைப் பார்க்க வந்திருந்தேன். நனைந்த தாவணித்தடம் பதியாத சோக மணற்பரப்பில், 'என்னை எறிந்து கொள்ளலாம்' என்று சம்மதம் தந்த கூழாங்கற்களை, 'ஏமாந்து போகும் மீன்கள்' என்று சமாதானம் செய்து விட்டு, நதியின் கரையில் இறங்கிக் கொண்டி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ருந்தேன். 'பூக்கள் தான் தர முடியவில்லை... நீங்கள் பேசிக் கொண்டிருக்கும் போது யாரும் பார்த்து விடக்கூடாது என்று எங்கள் கைகளைப் பரப்பி காத்து வந்தோம். இப்போது தான் நீங்கள் வருவதில்லையே ....சரி. ஒரு ஏழை வீட்டு அடுப்பையாவது எரிய வைப்போம் என்று நாங்கள் போகத்தொடங்கி விட்டோம்' என்ற முட்செடிகளை. 'தெளிந்து செய்தீர் நற்செயலை' என்று வாழ்த்தி விட்டுத் திரும்பிய எனக்கு ஒரு அதிர்ச்சி காத்திருந்தது.

'இப்பத்தான் வந்துட்டுப் போனா...இப்பத்தான் வந்துட்டுப் போனா' என்று விம்மி விம்மிச் சொன்னது நதி. கூர்ந்து படிகளைக் கவனித்தேன்... சின்னச் சின்னக் கால்தடங்கள்.நனைந்த உன் கால் தடங்கள்.

'நீ வருவதற்குள் காய்ந்து விடக்கூடாது என்றுதான் மேகத் தால் என்னை மூடிக் கொண்டி ருந்தேன்...போ...போய் ஆக வேண்டியதைக் கவனி... தேவைப் படும் போது வந்து உதவுவேன்' என்ற சூரியனுக்கும், நதிக்கும் நன்றி கூறி குனிந்து, கால்தடத்தை முத்தமிட்டு, வேகமாக மேலேறி னேன்.

தன் உடம்பை வருத்தி, உதிர்த்து வைத்திருந்த குட்டிக் காய்களை எடுத்துக் கொள்ளும்படி தென்னை மரம் பணிக்க, வேகமாக எடுத்து, திறந்த உன் வீட்டு முற்றத்தில் எறிந்தேன்... வழக்கம் போல் அணிலையும், காகத்தையும் திட்டியபடி. உன் தாய், அவற்றை வெளியில் எடுத்துப் போட்டு விட்டு, திரும்பியபோது சதவைச் சாத்திய வேகத்திலிருந்தாவது நீ என் வருகையை ஊகித்திருக்கலாம். அட அது கூட வேண்டாம். பூரண ஆரோக்கியத்துடன் இருந்த உன் தாய், அன்று கோவிலுக்குப் போகாததிலிருந்தாவது என் வருகையை நீ யூகித்திருக்க வேண்டாமா...

அன்றிரவும் நீ வெளியில் வரவேயில்லை.... நான் இல்லாத போது நீ வெளியில் வருவதில்லை என்பது ஒரு பக்கம் மகிழ்ச்சியைத் தந்தது...ஆனால் நான் வந்திருந்த போதும், வந்தது தெரியாமல் அப்படி இருக்கிறாயே என்பதை நினைத்த போது அழுகையாக வந்தது.

தவிர்க்க முடியாத, கடுமை யான சமன்பாடுகள் நிறைந்த இந்த பூமியில் வாழ நேர்ந்து விட்டதே.

ஒன்றினால் எவ்வளவு இன்பம் அனுபவிக்கிறோமோ அதே அளவு துன்பம் அதானாலேயே அனுபவித் தாக வேண்டும்....அச்செயல் நியாயமோ...அநியாயமோ... சரியோ.. தவறோ...இந்த விதிக்கு மட்டும் விலக்கே இல்லையே.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பொதுவாக எந்த ஒரு செயலுக்கும் விரும்பிய முடிவு தவிர ஒரு மாற்று முடிவையும் ஏற்றுக் கொள்ளத் தயார் நிலையில் இருப்பேன். ஆனால் இந்த விஷயத்தில் மட்டும் ஒரே விருப்பம். ஒரே முடிவு... நீ வேண்டும்...நீ மட்டுமே வேண்டும்...

நாட்கள் கழியக் கழிய நினைத்தது கை கூடுமா என்ற சந்தேகம் அதிகரிக்கிறது... இன்னும் சில வருடங்களில் நம் வாழ்வில் மிகப் பெரிய முடிவுகள் எல்லாம் எடுக்கப்பட்டிருக்கும்.

காரணம் பார்த்து வந்தால், 'முதல் காதல் அதிர்வு' மூளையில் தோன்றும்.

மரணத்தை இலக்காகக் கொண்ட வாழ்வில், மூச்சு விடுவது போல் இயல்பாய் வந்த நம் காதலில், இரத்தத்தில்– இதயத்தில்– அல்லவா 'முதல் காதல் அதிர்வு' தோன்றி இருக்க வேண்டும் . தோற்றுவித்த அந்த இளமார்பை... இதயத்தோடு என்னையும் பொதித்து வைத்திருக் கும் அந்த இடது மார்பை முத்தத்தால் மூழ்கடித்துக் கொண்டிருப்பேனா? தாளில் எழுதிச் சலித்துப் போன கவிதைகளை உன் மார்பில் எழுதிக் களித்திருப்பேனா? அல்லது... அ ல் ல து.... வேண்டாம். நினைத்துப் பார்க்கவே முடிய வில்லை... எனக்குள் இருக்கும், எந்த மாற்றத்தாலும் பாதிக்கப்படாத நீயும், பதறுகிறாய்...

பரிபூரணத்துவம் எய்தாத பேரிருள் சக்தியின் கோரமான கூரிய நகங்களுக்கிடையே சிக்கித் தவிக்கிறேன்... ஆடைகள் இன்றிப் பாலைவனத்தில் ஒட்டகத்தால் இழுத்துச் செல்லப் படுவதுபோல் காலத்தால் இழுத்துச் செல்லப் படுகிறேன். தூக்கம் வராத இரவு போல் நீளும் வாழ்க்கையில், உணவு தேடி நீருக்குள் மூழ்கும் போதெல்லாம் பெட்ரோல் ஊற்றி வெளியுடனான உறவைத் துண்டிக்கும் கயவர்கள் கூட்டத்தில வாழ நேர்ந்து விட்டதே.

எப்படி இருந்தது என் உலகம். கன்றின் பின் செல்லும் தாய்ப் பசுவாய், காலம் பின் சென்று கொண்டிருந்தேனே...

எட்டு நாற்பதும், ஐந்தரையும் தான் ஒரு நாள் என்று எண்ணி யிருந்தேனே...எப்படி மாறிவிட்டது காலம். இப்போது ஒரு நாளுக்கு இருபத்த்து நாாாாலு மணி நேரமாம்... ஒரு மணிக்கு அறுறுறுறுபது நிமிடமாம்... ஒரு நிமிடத்துக்கு அறுறுறுறுபது நொடியாம்... தாங்க முடிய வில்லை கண்ணம்மா.... தாங்க முடியவில்லை... இல்பிறை நாளிலும் இருள் நிற நிலவு காட்டி, பவுர்ணமிக்கான காத்திருப்பாய் வாழ்க்கையில் களித்திருக்கச் செய்திருந்தாயே. இழந்து விட்டேனே அத்தனையையும்... தெறித்துச் சிதறிய முத்துக்களை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

யெல்லாம் நுரை கொண்டு நிரப்ப வேண்டி வந்து விட்டதே.ஏதாவது ஒரு நாளை... ஒரு கணத்தை.... ஒரு நிமிடத்தைக் கூட நிறுத்தி வைக்க முடியாமல் போய் விட்டதே.

காதலிக்கத் தொடங்காத, ஒரு மழை விட்ட மாலையில் , என் பெயரை நீயும், உன் பெயரை நானும் மண்ணில் எழுதி விளையாடிக் கொண்டிருந்ததை தற்செயலாகத் தெரிந்து கொண்டபோது, மழையும் காற்றும், 'எம் பணி முடிந்தது' என்று ஆனந்தக் கூத்தாடி நம் காதலை ஆரம்பித்து வைத்த அந்த ஒரு கணம்.... ஆழமான கிணற்றில் உருட்டி விடப்பட்ட ஜலதரங்கக் கிண்ண ஒலியாய் உன் செவ்விதழ் விரித்து நீ சொன்ன அந்த வார்த்தைகள்... அந்த நிமிடம்... அந்த நிமிடத்திலேயே நிறைந்து போயிருக்கலாமே நாம்... விளக்கேற்றி அன்பை உணர்த்தச் சொன்னபோது, சந்தோஷத்தில் ஆடிய காற்றின் அறியாமையால் அணைந்த விளக்குகளை அழுதபடி பார்த்து விட்டு, மேற்கு திரும்பி நீ உயிர்ப்பித்த அந்த ஒளிப்பூவை.. குறும்பு செய்த குழந்தைபோல் எட்டிப்பார்த்த அந்த நிலவை... அழியா நம் காதலுக்கு அணையா விளக்கேற்றி வைத்த அந்த நாளை அப்படியே நிறுத்தி வைத்திருக்க லாமே.... ஓடிப்போய் விட்டது எல்லாம் ஓடிப்போய் விட்டது. விடுமுறையும் முடிந்து ஊரும் திரும்பி விட்டேன்....

இருள் விலகா அந்த காலைப் பொழுதிலும், பின் புறக் கதவை, திறக்கப் பொறுமையின்றி ஏறிக் குதித்து, தெருவுக்கு வந்தேன்... நீர் தெளித்துப் பின் பெருக்கும் பெண்கள் அடையாளம் காண முடியாத படி தலைப்பாகை அணிந்திருந்தேன். உன்னைக் காணாமல் சிறிது நேரம் சுற்றி விட்டு வந்தபோது உன் வீட்டு வாசல் தெளித்திருக்கக் கண்டேன்... ஆசையோடு, எழுதிய கடிதத்தைத் தர நெருங்கிய போது உன் தாய் கோலத்துகளுடன் வந்தாள்... போயிற்று எல்லாம் போயிற்று... திரும்பி வந்து விட்டேன்... பார்த்திருப்பாள்... திட்டியிருப் பாள்.... வாய் வலிக்கத் திட்டி யிருப்பாள். திட்டட்டும்... நன்றாகத் திட்டட்டும்... அப்படியாவது நான் வந்து போனது உனக்குத் தெரியட்டும். காதலியைக் காண முடியாமல் மீள நேர்ந்த இந்தக் கொடுமையை என்னவென்று சொல்வது... எப்படிச் சகித்துக் கொள்வது.... கதற வேண்டும் போலிருக்கிறது கண்ணம்மா....ஊர் ஊராகப் போய், 'ஓ 'என்று அலற வேண்டும் போலிருக்கிறது... 'காதலிக்காதீர்' என்றல்ல.... 'பாவிகளே....குறுகிய விடுமுறையில் காதலி ஊருக்குப் போகாதீர்கள்... போகவே போகாதீர்கள்...' என்று கதற வேண்டும் போலிருக்கிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அது எதனாலோ தெரியவில்லை. கடலில் கரைத்த கல்கண்டு போல் என் காதல் முயற்சிகள் ஆகி வருகிறது. என் அழுத்தமான, தூய்மையான காதல் முயற்சிகளெல்லாம் உன்னால் முழுமையாகப் புரிந்து கொள்ளப்படாமல், அநேக நேரங்களில் எட்டாமல் போய் விடுகிறது.

உன் இயல்பா அல்லது சந்தர்ப்பங்களின் சதியா தெரியவில்லை. அப்படி ஒரு தவிர்க்கப் படவேண்டிய புரிதல் நம்மிடையே நிகழ்ந்து வருகிறது.

கூவியபடி கால் கடுக்க நான் வரும் போதெல்லாம், கதவுக்கு மறுபுறம் இருக்கும் நீ, தட்டுதலை மட்டுமே கேட்கும் தயார் நிலையில் இருக்கிறாய்... விரும்பிய ஒலியை மட்டுமே அனுமதிக்கும் விசித்திரக் காதுகளுடன் இருக்கிறாய்.

என் கூக்குரலை எதிர்பார்த்து நீ உன் காதுகளை மாற்றிக் கொள்ளும் போதோ துரதிர்ஷ்ட வசமாக கட்டப்பட்ட என் கை, கால்களை விடுவிப்பதிலேயே கவனம் செலுத்தி களைக்கிறேன்... பயந்து மீண்டும் கூவும் போதோ விசித்திரக் காதுகளுக்கு மாறி விடுகிறாய்...நமது இந்த கதவு களுக்குப் பின்னாலான காத்திருப்பு கள் இப்படித் தொடர்வதில் எனக்கு மிகவும் வருத்தம் தான்.

இருக்கும் எல்லா இயக்கங் களையும் தவிர்த்து விட்டு உனக்காகக் காத்திருக்கிறேன், மூழ்கும் முன் பார்க்கும் திசையில் தான் முளைக்கும் நீர்க்காகமென்று நம்பியபடி.

அதுவரை தொடரப் போகிறது. புறாக்களின் காலில் கடிதம் தேடிச் சலிப்பதும், தென்றலில் அசைந்து ஆறுதல் சொல்லும் முல்லை கொடியைத் தவிர்த்து, மாமரத்துக் கிளிகளின் முன் மண்டியிட்டு, நீ சொன்ன மொழிகளை நினைவு படுத்திச் சொல்லிச் சொல்லி மௌனமாய்க் கதறுவதும், தொடரப் போகிறது.

சுவாசிக்க காற்று வேண்டி மேலெழுந்தவன், வெளி வெற்றிட மாகப் போன விரக்தியில் மீண்டும் மூழ்குகிறேன். அடுத்து முறை யாவது கண்ணம்மா ஆக்ஸிஜனாய் இரு...

உந்தன்,
என்றும் உந்தன்
ஸர்ஸிஜன்.

மண் கரையாகும்போதெல்லாம்
ராசாத்தி,
நீர் நதியாகிவிடுவதில்லை-
கூவத்தில் ராசாத்தி,
காயப் போட்ட பாவாடையையும்
ஒயத்திப்பாக்குது காத்து-
சுவாசிப்பதற்கு ராசாத்தி,
அது மட்டுமே இருப்பதால்,
(தலை கீழாக)
தொங்கத் தான் வேண்டும்
வௌவால்கள் அதுவரை.

—அன்வர்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# குரோம்பேட் சாஸ்வத நிதி நிறுவனம்



கர்நாடக இசை உலகில் தனிச் சிறப்போடு உலா வரும் பாலமுரளி கிருஷ்ணாவைத் தலைவராகக் கொண்டு, அவரால் 1980ம் ஆண்டில் நிறுவப்பட்டது குரோம்பேட் சாஸ்வத நிதி நிறுவனம்.

நகரில் உள்ள நடுத்தர வர்க்கத்தினரிடையே கடந்த பதினைந்து ஆண்டு காலமாய் நன்மதிப்பையும், நம்பிக்கையையும் பெற்று இன்று சுமார் 10ஆயிரத்திற்கு மேற்பட்ட பங்குதார்களைக் கொண்டுள்ளது. நிரந்தர வைப்பு நிதி 60 மாதஙங்களுக்கும் அதற்கு மேலும் உள்ள எந்தக் கணக்குக்கும் 21% வட்டித் தொகை ஆண்டொன்றுக்கு வழங்கி வருகிறது. இந்தியாவின் எந்தப்பகுதியிலுமுள்ள *கனரா* வங்கியில் மாற்றிப் பணம் பெறத் தக்க வசதியுடன் 60 மாதங்களுக்கு, மாத வட்டிக்கான காசோலை வழங்குகிறது.

36 மாதங்களுக்கு மேல் 60 மாதங்களுக்கு குறைவான, கால நிரந்தர வைப்பு நிதிகளுக்கு ஆண்டொன்றுக்கு 20% வட்டி அளிக்கப்படுகிறது. எல்லாவிதமான சேமிப்பு மற்றும் கால வரையரைகளுக்குட்பட்ட வைப்பு நிதி வசதிகளும் மற்றும் எந்தப்பகுதியிலுமுள்ள வீடுகள் மீது அடமானக் கடன் வசதியும் தரப்படும். அனுமதிக் கட்டணமாகவும் மற்றும் பங்கு மதிப்புத் தொகை ரூ.2.00 செலுத்தி உறுப்பினராக எந்தக் கணக்கும் துவங்கலாம்.

www.tamilarangam.net

Regd. No. TN/MS(S)/576 KANAIYAZHI MONTHLY

**With Best Compliments From**

**Reliance**
**Industries Limited**
3rd Floor, Maker Chambers IV,
222, Nariman Point, Bombay 400 021.

Manufacturers of

VIMAL
A RELIANCE PRODUCT

India's widest range of synthetic and blended fabrics and

RECRON

polyester Filament Yarn, Polyester Staple Fibre
and Texturised bulk stabilised Yarn

Tel : 22 58 70 / 22 60 70 Telex : 01186542 VMAL IN
Gram : 'RELCOMCOP'

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்